www.Padasalai.Net www.CBSEtips.in

வீழ்வது நாமாக இருந்தாலும்! வாழ்வது தமிழாக இருக்கட்டும்!

# நாமும் சதம் அடிப்போம்



பெயர் : ................................

வகுப்பு : ................................

பள்ளி : ................................



Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com

Padasalai.Net


Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com

# 2 மதிப்பெண் வினாகள்

**1. நடை அழகியல் பற்றித் தொல்காப்பியம் கூறும் கருத்தைக் குறிப்பிடுக.**

- நடை அழகியல் உருவாக்கத்திற்கு, தொல்காப்பியமே தளம் அமைத்துத்தருகிறது. கவிதையின் இயங்காற்றல்தான் 'நடை' என்பது தொல்காப்பியத்தின் அடிப்படைக் கருத்தாக உள்ளது.
- நடைபெற்றியலும் (கிளவி-26), நடைநவின்றொழுகும் (செய்-135) போன்ற சொற்றொடர்களைத் தொல்காப்பியம் கையாண்டிருப்பதைக் கொண்டே அவற்றைப் புரிந்துகொள்ள முடிகிறது.
- மேலும், 'ஆசிரிய நடைத்தே வஞ்சிஏனை வெண்பா நடைத்தே கலி (செய்-107)' என்று தொல்காப்பியச் சொற்றொடரை 'நடை அழகியலுக்கு' சான்றாகவே குறிப்பிடலாம்.

**2. படாஅம் ஈத்த கெடாஅ நல்லிசைக்
கடாஅ யானைக் கலிமான் பேக - இச்சங்கக் கவிதையின் அடிகளில் ஓசை நயமிக்க சொற்களையும் அவற்றின் இலக்கணக் குறிப்பையும் எடுத்தெழுதுக.**

- படாஅம், கெடாஅ, கடாஅ - செய்யுளிசை அளபெடை.

**3. கவிஞர் சிற்பி எவற்றை வியந்து பாட, தமிழின் துணை வேண்டும் என்கிறார்?**

- மாலை நேரத்தில் மறையும் சூரியனால், வானமெல்லாம் செந்நிறமாகக் காட்சியளிக்கும். அதுபோன்றே, உழைத்துழைத்து சிவந்துபோன கைகளையுடைய தொழிலாளர்களின் மீதுள்ள முத்துமுத்தான வியர்வைத் துளிகளை வியந்து பாட, தமிழின் துணை வேண்டும் என்கிறார் கவிஞர் சிற்பி.

**4. விடியல், வனப்பு - இரு சொற்களையும் ஒருங்கிணைத்துத் தொடர் அமைக்க.**

- விடியல் வானம் வனப்பு நிறைந்தது.

**5. அணியிலக்கணத்தை மட்டும் கூறும் நூல்கள் யாவை?**

- தண்டியலங்காரம், மாறன் அலங்காரம், குவலயானந்தம்.

**6. பிற இலக்கணத்தோடு அணி இலக்கணத்தையும் சேர்த்துக் கூறும் நூல்?**

- தொல்காப்பியம், வீரசோழியம், இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம், முத்துவீரியம்.

**7. 'ஆளுக்கொரு மரம் வளர்ப்போம்' என்ற முழக்கத்தொடர் வாயிலாக எவற்றை வலியுறுத்துவாய்?**

- மரம், மனிதனுக்கு இயற்கை கொடுத்த வரம். பூ, காய், கனி, விதை, இலை, பட்டை, கட்டை, விறகு, மூலிகை, வேர் என அனைத்து பாகத்தினையும் மனிதனுக்கான அர்ப்பணித்துவாழும் வள்ளல் அது. மழைக்கு ஆதாரமாகவும், நிலத்தடி நீரினை பெருக்கிடவும் மரம் பெருதவி அளிக்கிறது.
- மாசுகளை அகற்றி - மண்ணரிப்பு தடுத்திடவும் மனிதனுக்கு உயிர் வளியாக செயலாற்றிடவும் மரம் பயன்படுகிறது என்ற செய்திகள் மூலம் 'ஆளுக்கொரு மரம் வளர்ப்போம்' என்ற முழக்கத்தொடரினை வலியுறுத்துவேன்.

**8. இனநிரை - பிரித்துப் புணர்ச்சி விதி தருக.**

- இனநிரை = இனம் + நிரை
- விதி: மவ்வீறு ஒற்றழிந்து உயிரீறு ஒப்பவும் (இனநிரை)

**9. மனிதன் தன் பேராசை காரணமாக இயற்கை வளங்களைக் கடுமையாகச் சேதப்படுத்தியதன் விளைவை இன்று சந்தித்துக் கொண்டிருக்கின்றான் - இரு தொடர்களாக்குக.**

- மனிதன், தன் பேராசை காரணமாக இயற்கை வளங்களைக் கடுமையாகச் சேதப்படுத்தினான்.
- அதன், விளைவை இன்று சந்தித்துக்கொண்டிருக்கிறான்.

**10. 'நகரம் பட்டை தீட்டிய வெள்ளை வைரமாகிறது' - விளக்கம் தருக.**

- பெய்த மழையால், நகரத்தின் மாசுகள் அகற்றப்பட்டன. மழைக்காலமாயினும், திடீரென வெளிப்பட்ட சூரிய வெளிச்சத்தால், நகரம் புதுபொலிவு பெறுகிறது. இதனையே, 'நகரம், பட்டை தீட்டிய வெள்ளை வைரமாய்' காட்சியளிக்கிறது என்கிறார் கவிஞர்.


Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com

**11. புக்கில், தன்மனை - சிறு குறிப்பு எழுதுக.**

- புக்கில் : தற்காலிகத் தங்குமிடம்.
- தன்மனை : திருமணத்திற்குப் பின், கணவனும் மனைவியும் பெற்றோரைப் பிரிந்து, தனித்து வாழும் இடம்.

**12. நிலையாமை குறித்து, சவரி உரைக்கும் கருத்து யாது?**

- இராமனைப் பார்த்து 'தங்களைக் கண்டதால், என் பொய்யான உலகப்பற்று அழிந்தது அளவற்றகாலம், நான் மேற்கொண்ட தவம் பலித்தது, என் பிறவி ஒழிந்தது' என்று, நிலையாமை சார்ந்த தன் கருத்தினை வெளிப்படுத்தினாள் சவரி.

**13. எதிர்பாராத நிகழ்வுகளை ஜலாலுத்தீன் ரூமி எவ்வாறு உருவகப்படுத்துகிறார்?**

- ஆனந்தம், அற்பத்தனம், மனச்சோர்வு, விழிப்புணர்வு போன்ற எதிர்பாராத நிகழ்வுகளை அவ்வப்பொழுது வந்துசெல்லும் நிகழ்வுகளாக ஜலாலுத்தீன் ரூமி அவர்கள் உருவகப்படுத்துகிறார்.

**14. துன்பு உளது எனின் அன்றோ சுகம் உளது என்ற இராமனின் கூற்று பின்வரும் இரு பழமொழிகளில் எதற்குப் பொருந்தும்?**
**அ. நிழலின் அருமை வெயிலில் தெரியும் ஆ. சிறு துரும்பும் பல்குத்த உதவும்**

- விடை: அ. நிழலின் அருமை வெயிலில் தெரியும்.

**15. சங்ககாலத்தில் தாய்வழிச் சமூகமுறையில் பெண்கள் பெற்றிருந்த உரிமைகள் யாவை?**

- சங்க காலத்தில் கணச் சமூகத்திற்கு தாயே தலைமை தாங்கினாள். குலத்தொடர்ச்சிக்கு தாயே அச்சாரம் என்பதினால், பெண் குழந்தைகளின் பிறப்பு பெரிதும் விரும்பப்பட்டது. மேலும், சொத்துரிமை வழங்கப்பட்டிருந்தது. பெண்கள், திருமணத்திற்குபின்பும் தன் இல்லத்திலேயே தங்கி, குடும்பத்தினை நடத்திடும் 'தாய முறை' இருந்ததை சங்கப்பாடல்கள் மூலம் அறிந்துகொள்ள முடிகிறது.

**16. கீழ்க்காணும் புதுக்கவிதைக்குப் பொருந்தும் திருக்குறளை எழுதுக (வினாவினை பக்கம் 77 – புத்தகத்தில் பார்க்கவும்)**

- சினம்என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம்என்னும்
  ஏமப் புணையைச் சுடும்.

**17. இலக்கணக் குறிப்பு தருக.**

- அன்பும் அறமும் - எண்ணும்மை
- மறத்தல் - தொழிற்பெயர்
- நன்கலம் - பண்புத்தொகை
- உலகு - ஆகுபெயர்

**18. பொருள் கூறுக.**

- வெகுளி - சினம்
- ஏமம் - பாதுகாப்பு
- புணை - தெப்பம்
- திரு - செல்வம்

**19. பகையும் உளவோ பிற? பொருள் கூறுக.** (சினத்தைவிட வேறு பகையும் உண்டோ?)

**20. 'முயல்வாருள் எல்லாம் தலை' என வள்ளுவர் யாரைச் சுட்டுகிறார்?**

- அறத்தின் இயல்போடு இல்வாழ்க்கை வாழ்பவரை 'முயல்வாருள் எல்லாம் தலை' என வள்ளுவர் சுட்டுகிறார்.

**21. ஞாலத்தின் பெரியது எது?**

- துன்ப காலத்தில் ஒருவர் செய்த உதவி மிகச்சிறியதாக இருந்தாலும், அது செய்யப்பட்ட காலத்தினை நோக்கும்பொழுது ஞாலத்தைக் காட்டிலும் பெரியதாகும்.

**22. மறக்கக் கூடாதது, மறக்கக் கூடியது எவற்றை?**

- பிறர் செய்த நன்மையை மறத்தல் கூடாது.
- பிறர் செய்த தீமையை அப்பொழுதே மறத்தல் வேண்டும்.

**23. செல்வம் இருப்பதற்கான வழியாக வள்ளுவம் உரைப்பன யாவை?**

- பிறருடைய கைப்பொருளை விரும்பாமல் இருப்பதே, செல்வம் குறையாமல் இருப்பதற்கான வழியென வள்ளுவம் உரைக்கிறது.


Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com

**24. சினத்தை ஏன் காக்க வேண்டும்?**

- ஒருவன், தன்னைத்தானே காத்துக்கொள்ள விரும்பினால், சினம் வராமல் பார்த்துக்கொள்ளல் வேண்டும். இல்லேல், சினத்துடன் சேர்ந்து தானும் அழிய நேரிடும்.

**25. இடையீடு - எவற்றைக் குறியீடாகக் குறிப்பிடுகிறது?**

- இடையீடு என்ற கவிதை எண்ணம், வெளியீடு, கேட்டல் ஆகியவற்றைக் குறியீடாகக் குறிப்பிடுகிறது.

**26. வசனம், கவிதை வேறுபாடு தருக.**

- வசனம்: எதுகை - மோனை இல்லாமல், அடி அளவு அறியாமல் வார்ப்பதே வசனம்.
- கவிதை: எதுகை - மோனை பொருத்தி, அடி அளவை அறிந்து, யாப்பிலக்கணப்படி அமைவது கவிதை.

**27. எத்திசையிலும் சோறு தட்டாது கிட்டும் - யார்க்கு?**

- கலைத்தொழில் வல்ல புலவர்களுக்கு, எத்திசையில் சென்றாலும் அத்திசையில் சோறு தட்டாது கிட்டும்.

**28. அக்காலத்துக் கல்விமுறையில் மனனப் பயிற்சிக்கு உதவிய நூல்கள் யாவை?**

- நிகண்டு, நன்னூல், காரிகை, தண்டியலங்காரம் போன்ற இலக்கண நூல்களும் ஆத்திசூடி, கொன்றை வேந்தன் போன்ற நீதி நூல்களும் அக்காலத்துக் கல்விமுறையில் மனனப் பயிற்சிக்கு உதவிய நூல்கள் ஆகும்.

**29. கலிவிழா, ஒலிவிழா - விளக்கம் தருக.**

- கலிவிழா - எழுச்சி தரும் விழா.
- ஒலிவிழா - ஆரவார விழா.

**30. கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம் குறித்து எழுதுக.**

- காலின் மெக்கன்சி அவர்களின் தொகுப்புகளை அடிப்படையாகக் கொண்டு, 1869ல் சென்னையில் தொடங்கப்பட்டதே கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம் ஆகும். இலக்கணம், இலக்கியம், வரலாறு, தத்துவம், அறிவியல் மற்றும் வானியல் சார்ந்த அரிய ஓலைச்சுவடிகளும் தாள்சுவடிகளும் புத்தகங்களும் பெரிய பெரிய தொகுப்புகளாகக் காணப்படுகின்றன.

**31. மயிலைப் பதிகத்தில் காணப்படும் விழாக்கள் யாவை?**

- ஐப்பசி - ஓண விழா
- கார்த்திகை- விளக்குத் திருவிழா
- மார்கழி - திருவாதிரை விழா
- தை - தைப்பூச விழா
- மாசி - கடலாட்டு விழா
- பங்குனி - பங்குனி உத்திரவிழா

**32. மயிலையின் சிறப்புள் சிலவற்றைக் கூறுக.**

- மடலார்ந்த தெங்கின் மயிலை
- இருளகற்றும் சோதித் தொன்மயிலை
- கற்றார்கள் ஏத்தும் கபாலீச்சரம்
- கண்ணார் மயிலைக் கபாலீச்சரம்

**33. தருமமிகு சென்னையில் கந்த கோட்டத்துள்வளர் தலமோங்கும் கந்தவேளே - தொடருக்குப் பதவுரை எழுதுக.**

- தருமமிகு சென்னையில் - அறம் செய்வோர் நிறைந்த சென்னையில்
- கந்தகோட்டத்துள் - கந்தகோட்டத்தின்
- வளர்தலமோங்கும் - திருக்கோவிலில் எழுந்தருளியிருக்கும்
- கந்தவேளே - கருணைமிகு கந்தனே.

**34. பெருங்கடல் வேட்டத்துச் சிறுகுடிப் பரதவர் - தொடரில் உள்ள முரண் நயத்தைக் குறிப்பிடுக.**

- எதிர்ச்சொல்லாக அமைவது முரண். இத்தொடரில் அமைந்துள்ள முரண்: பெருங்கடல் X சிறுகுடி
- பரதவர்கள் மீன்பிடிக்கும் கடலோ பெரியது X வாழிடமோ சிறியது. இங்கு தொழில் செய்யும் இடமும் வாழிடமும் முரண்பட்டுள்ளது.

**35. அகநானூறு எத்தனை பிரிவுகளை உடையது? அவை யாவை?**

- அகநானூறு 3 பிரிவுகளை உடையது. அவை,


Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com

- களிற்றியானைநிரை - 120 பாடல்கள்
- மணிமிடைப்பவளம் - 180 பாடல்கள்
- நித்திலக்கோவை - 100 பாடல்கள்

**36. எண்வகை மெய்ப்பாடுகள் யாவை?**

- நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை.

**37. பின்னணி இசை படத்தின் காட்சியமைப்புக்கு எவ்வாறு உயிரூட்டும்? சான்று தருக.**

- ஒரு கதா பாத்திரத்தின் கவலை, அலைக்கழிப்பு, மகிழ்ச்சி போன்றவற்றை வெளிக்கொணரும் எதிரொலிப்பே பின்னணி இசை.
- எ-டு: கதாநாயகி சன்னல் வழியாக ஒரு காட்சியை வெறித்துப் பார்க்கிறாள். அதில் தெருவைப் பார்ப்பது மட்டுமே காட்டப்படுகிறது. அதனுடன் ஒரு மகிழுந்து புறப்பட்டுச் செல்லும் ஒலியும் இணைக்கப்படுகிறது. இதில், அவளை பார்க்க வந்தவர், அவளை பார்க்காமல் செல்கிறார் என்ற குறிப்பு அவளுடைய முகபாவனைகள் மூலம் அறிந்துகொள்ள முடிகிறது.

**38. ஒருமுக எழினி, பொருமுக எழினி - குறிப்பு எழுதுக.**

- **ஒருமுக எழினி:** மேடையின் ஒரு புறத்திலிருந்து மறுபுறத்திற்குச் செல்லுமாறு அமைக்கப்படுவது, 'ஒருமுக எழினி' எனப்படும்.
- **பொருமுக எழினி:** மேடையின் இரு புறத்திலிருந்து நடுவில்வந்து ஒன்றோடு ஒன்று பொருந்துமாறு அமைக்கப்படுவது, 'பொருமுக எழினி' எனப்படும்.

**39. யாழ்களின் வகைகள் யாவை?**

- 21 நரம்புகள் - பேரியாழ்
- 17 நரம்புகள் - மகரயாழ்
- 16 நரம்புகள் - சகோடயாழ்
- 7 நரம்புகள் - செங்கோட்டியாழ்

**40. மூச்சு நின்றுவிட்டால் ; பேச்சும் அடங்கும் - கவிதைக்குப் பொருத்தமான பழமொழி ஒன்றை எழுதுக.**

- எரிவதைப் பிடுங்கினால், கொதிப்பது அடங்கிவிடும்.

**41. மனத்தை அதன் போக்கில் செல்லவிடக் கூடாது என்று வள்ளுவம் கூறுவது ஏன்?**

- மனத்தை தீயவற்றிலிருந்து விலக்கி, நல்வழியில் செலுத்துவதே அறிவுடைமை என்பதினால், மனத்தை அதன் போக்கில் செல்லவிடக் கூடாது என்று வள்ளுவம் கூறுகிறது.

**42. உருவுகண்டு எள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்கு அச்சாணி அன்னார் உடைத்து - இக்குறட்பாவின் உவமையைப் பொருளோடு பொருத்துக.**

- **உவமை :** உருவுகண்டு எள்ளாமை
- **உவமேயம் :** உருள்பெருந்தேர்க்கு அச்சாணி
- **விளக்கம் - பொருளோடு பொருத்துதல்:** பெரிய தேரினைச் செலுத்தும் வல்லமை, சிறிய அச்சாணிக்கே உண்டு. அதுபோன்றே, உருவில் சிறியவரும் அரியப் பல செயல்களைச் செய்ய வல்லவர்கள். எனவே உருவுகண்டு எள்ளாமை வேண்டும் என்கிறார் வள்ளுவர்.

**43. மன உறுதியின் தேவை பற்றித் திருக்குறள் யாது கூறுகிறது?**

- நல்ல செயல்பாட்டிற்கும், எண்ணியதை எண்ணியபடி செய்து முடிப்பதற்கும் மன உறுதி தேவை என்கிறது திருக்குறள்.

**44. நஞ்சுண்பவர் என வள்ளுவர் யாரை இடித்துரைக்கிறார்?**

- கள்ளுண்பவரை, நஞ்சுண்பவர் என வள்ளுவர் இடித்துரைக்கிறார்.

**45. அரசரோடு நட்புப் பாராட்டினாலும் செய்யத்தகாதன யாவை?**

- அரசரோடு நட்புப் பாராட்டும்பொழுது, அந்நட்பினை அடிப்படையாகக் கொண்டு, எல்லைமீறி பாராட்டுதல் கூடாது. அது நற்பலனைத் தராது, கேட்டினையே தரும்.

**46. பகைவராலும் அழிக்க முடியாத அரண் எது?** (அறிவுடைமை)

**47. அஞ்சத் தகுந்தன, அஞ்சத் தகாதன என வள்ளுவம் குறிப்பிடுவது யாது?**

- உறவுபோல் நடித்து உட்பகை கொண்டவரிடம் அச்சம் கொள்ளவேண்டும்.


Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com

- வாளைப்போல் வெளிப்படையாகத் துன்பம் செய்யும் பகைவரைக்கண்டு அச்சம் கொள்ள வேண்டாம்.

**48. வறுமையும் சிறுமையும் தருவது எது?** (வறுமையும் சிறுமையும் தருவது சூது.)

**49. நீங்கள் படித்ததில் பிடித்த குறளை எழுதி, காரணத்தைக் குறிப்பிடவும்.**

- படித்ததில் பிடித்த குறள்: **எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்<br>மெய்ப்பொருள் காண்பது அறிவு.**
- காரணம்: யார், எதைச் சொன்னாலும் நம்பிவிடாமல், உண்மை எதுவென ஆராய்ந்து செயலாற்றிட வேண்டும் என அறிவுரை கூறும்படியாக அக்குறள் அமைந்துள்ளதால், எனக்கும் மிகவும் பிடிக்கும்.

**50. உலகத்தில் சிறந்த துணையாகவும் பகையாகவும் வள்ளுவர் எவற்றைக் குறிப்பிடுகிறார்?**

- நல்ல இனத்தைவிட சிறந்த துணை உலகத்தில் வேறில்லை.
- தீய இனத்தைவிட துன்பத்தைத் தரும் பகையும் வேறில்லை.

**51. இலக்கணக் குறிப்புத் தருக.**

- ஓரீஇ - சொல்லிசை அளபெடை
- படுப்பதூஉம் - இன்னிசை அளபெடை
- சொல்லுதல் - தொழிற்பெயர்

**52. கீழ்நீர்க் குளித்தானைத் தீத்துரீஇ யற்று - பொருள் கூறுக.**

- கள்ளுண்டு மயங்கியவனிடம் நல்லனவற்றைச் சொல்லித் திருத்த முயல்வது, நீரில் மூழ்கிய ஒருவரைத் தீப்பந்தம் கொண்டு தேடுவது போன்றது.

**53. பெருந்தேர் - புணர்ச்சி விதி கூறுக.**

- பெருந்தேர் = பெருமை + தேர்
- விதி 1: ஈறுபோதல் (பெரு + தேர்)
- விதி 2: இனமிகல் (பெருமை + ந் + தேர்)

**54. பருவத்தே பயிர் செய் - நேர மேலாண்மையோடு பொருத்தி எழுதுக.**

- ஏற்றக் காலத்தினையும் இடத்தினையும் அறிந்து, நிர்வாக நெறிவுடன் செயல்பட்டால், உலகத்தையே அடையலாம். அதுபோன்றே, காலத்தினை உணர்ந்து, சரியான விதைகளைத் தேர்ந்தெடுத்து, சரியான முறையில் விதைத்து பாதுகாத்துவந்தால், நல்ல பலனைப் பெறலாம்.

**55. எந்தவொரு பொருளைப் பயன்படுத்தும்போதும் அதற்குப் பின்னால் உள்ள மனிதர்களின் உழைப்பை நாம் சிந்திப்பதில்லை. ஒரு தேனீரைப் பருகும்போது அதற்குப் பின்னால் உள்ள மனித உழைப்பைச் சிந்தித்து உங்கள் கருத்தை எழுதுக.**

- நாம் பருகும் தேநீர் சுவையானது. இந்தச் சுவைக்குக் காரணம் அதிலுள்ள தேயிலை, சர்க்கரை, பால், தண்ணீர் போன்றவையே.
- தேயிலை பறிப்போரைச் சிந்திக்கிறோமா? கரும்பிலிருந்து சர்க்கரை தயாரிப்பதற்கு எத்தனைபேர் உழைத்துள்ளனர்? பால் எங்கிருந்து எப்படி வருகிறது?
- இப்படி, ஒரு தேநீரை நாம் சுவைப்பதற்கு, எத்தனை பேர் உழைத்துள்ளனர் என எண்ணிப்பார்த்தால் புரியும். நாம் அனுபவிக்கும் ஒவ்வொரு பொருளின் பின்பும், எத்தனைபேர் உழைப்பு மறைந்துள்ளது. அதில் நம் பங்கு என்ன எனச் சிந்தித்தால், உழைப்பின் உயர்வு புலப்படும்.

**56. அறிவுடை வேந்தனின் நெறி குறித்து, பிசிராந்தையார் கூறுவன யாவை?**

- அறிவுடை வேந்தன், மக்களிடம் வரிதிரட்டும் நெறிமுறையினை அறிந்து வரியைத் திரட்டினால், நாடு பெருஞ்செல்வத்தைப் பெற்று செழிப்படைவதோடு, அவன் எண்ணமும் நிறைவேறும் என பிசிராந்மையார் கூறுகிறார்.

**57. செவியறிவுறூஉ துறையை விளக்குக.**

- அரசன் செய்ய வேண்டிய கடமைகளை முறைதவறாமல் செய்யுமாறு அவன் கேட்க அறிவுறுத்தவது, செவியறிவுறூஉ துறையாகும்.

**58. தமிழர் வளர்த்த அழகுக் கலைகள் - நூல் பற்றிக் குறிப்பு வரைக.**

- கவின் கலைகள் குறித்து தமிழில் வெளிவந்த முதல்நூல், 'தமிழர் வளர்த்த அழகுக் கலைகள்'. ஆசிரியர் மயிலை சீனி.வேங்கடசாமி ஆவார்.
- தமிழ்ச்சமுதாயம் தனது பழைய கலைச் செல்வங்களை மறந்து, தற்பெருமை அறியாதிருந்த நிலைகண்டு, அக்கலைகளை மீண்டும் நினைவூட்டிடும் வகையில் படைக்கப்பட்டதே இந்நூல்.

**59. வீரிபெரு தமிழர் மேன்மை**
**ஓங்கிடச் செய்வ தொன்றே**
**உயிர்ப்பணியாகக் கொண்டோன் - யார், யாரைப் பற்றி, எதற்காகக் கூறுகிறார்?**

- இவ்வரிகள், பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள் மயிலை சீனி.வேங்கடசாமி பற்றிக் கூறியதாகும்.
- தமிழனத்திற்குத் தேவையான பல்வேறு கலைகள் சார்ந்த ஆவணங்களைத் தொகுத்து ஆய்வு செய்திடும் பணியினை மயிலை சீனி.வேங்கடசாமி செய்ததால் மேற்கண்டவாறு கூறினார்.

**60. முகம் முகவரியற்றுப் போனதற்கு சுகந்தி சுப்பிரமணியன் கூறும் காரணத்தை எழுதுக.**

- தனக்குள்ளே தன்னைத் தொலைத்ததாலும் முகங்களுடன் முகம் கலந்ததினாலும் எனது முகம் முகவரியற்றுப் போனது.
- முகத்தை தொலைத்ததால், உடலும் மறந்துபோனது. தன்னுள் ஏற்படும் மனவெழுச்சிகளுக்காக முகங்கள் மாறியதால், வெற்றுவெளியில் தன் முகத்தை தேடுவதாக சுகந்தி சுப்பிரமணியன் கூறுகிறார்.

**61. இறைமகனாரின் இன்னலைக் கண்டு மக்கள் எவ்விதம் புலம்பினர்?**

- இறைமகனாரின் இன்னலைக் கண்ட மக்கள், இத்தனைக் கொடுமைகளுக்கு பிறகும், இந்த உலகம் இன்னும் பிளந்து வெடிக்கவில்லையே! வானம் இன்னும் இடிந்து விழவில்லையே! கடல்நீர் இன்னும் வற்றிப்போகவில்லையே! ஏன், இந்த உலகம் இன்னும் அழியாமல் தாமதிக்கிறதோ! என்று கூறி புலம்பினர்கள்.

## நான்கு மதிப்பெண் - வினாகள்

**1. சங்கப் பாடல்களில் ஒலிக்கோலம் குறிப்பிடத்தக்க ஒரு பண்பாகும் - விளக்குக.**

- தொன்மையான மொழிகள்யாவும் சமிக்ஞையிலிருந்தும் இசையிலிருந்தும்தான் தொடங்குகின்றன. மொழிசார்ந்த கவிதைகள் இசையோடும் இசைக்கருவிகளோடும்தான் பிறக்கின்றன. அதில், ஓசையும் பொருளும் இணைந்து கலைவடிவம் கொள்கின்றது. இதனையே, நாம் ஒலிப்பின்னல் என்கிறோம்.
- எ-டு:
    - 'கடுந்தடு தானை மூவிருங்கூடி' என்ற புறநானூற்றுப் பாடலில் வன்மையான உணர்ச்சியைக் காட்ட க, த, ட, ற என்ற எழுத்து அதிக அளவில் பயன்படுத்தப்பட்டுள்ளது.
    - 'நுந்தை தந்தைக்கு இவன்தந்தை தந்தை' (புறம்). இங்கு, உயிர் ஒலி - அதிலும், குறிப்பாக நெடில் ஒலிகளின் வருகையும், சில ஒலிகள் மற்றும் சில சொற்கள் திரும்பவரல் தன்மையினைப் பெற்றிருப்பதும் அவற்றிக்கிடையே நடைபெறும் சொல் விளையாட்டுகளும் நம் கவனத்திற்குரியதாக அமைகின்றது. அச்சொல்லோசையே ஒலிக்கோலம்.

**2. செம்பரிதி மலைமேட்டில் தலையைச் சாய்ப்பான் செந்நிறத்துப் பூக்காடாம் வான மெல்லாம் - தொடர் வெளிப்படுத்தும் காட்சி நயத்தை விளக்குக.**

- சிவந்த கதிர்களை உடைய சூரியன், மாலை நேரத்தில் மலைகளுக்குப்பின்னால் தன் தலையைச் சாய்த்து மறைவான். அவ்வேளையில் சூரியக்கதிர்கள்பட்டு, வானமெல்லாம் செந்நிறமாக் காட்சியளிக்கும். அக்காட்சியினை கற்பனைநயத்தோடு கூற எண்ணியக் கவிஞர் சிற்பி, 'சிவந்த வானத்தை - செந்நிறத்துப் பூக்கள் நிறைந்த காடு' என்றே வர்ணிக்கிறார்.

**3. ஏங்கொலிநீர் ஞாலத்து இருளகற்றும் - இடஞ்சுட்டுப் பொருள் விளக்குக.**

- **இடம்:** இவ்வரிகள் தண்டியலங்காரம் என்னும் அணியிலக்கண நூலின், உரைமேற்கோள் பாடலில் இடம் பெற்றுள்ளது. (ஆசிரியர் - தண்டி)
- **பொருள்:** கடல்சூழ்ந்த இவ்வுலகத்தின் இருளை போக்கவல்லது சூரியனும் தமிழும் என்பது இவ்வரிகள் உணர்த்தும் பொருள்.


Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com

- **விளக்கம்:** சான்றோர்களால் புகழப்படும் மலைகளுக்கிடையே தோன்றி, கடல்சூழ்ந்த உலகத்தின் புற இருளைப் போக்கவல்லது சூரியன். அத்தன்மையுடன் தோன்றிய, தன்னிகரற்ற புகழினைக் கொண்ட தாய்த்தமிழோ! மக்களின் அக இருளைப் போக்கவல்லது.

**4. பின்வரும் இரு பாக்களின் கருத்துகளிலுள்ள வேற்றுமையை எடுத்துக்காட்டுக.**

| | |
|---|---|
| **பழையன கழிதலும் புதியன புகுதலும்<br>வழுவல கால வகையினானே.<br>- நன்னூல்** | **மீண்டுமந்தப் பழமைநலம் புதுக்கு தற்கு<br>மெய்சிலிர்க்கத் தமிழ்க்குயிலே! கூவி வா, வா!<br>- சிற்பி பாலசுப்பிரமணியம்** |

- **பாடல் 1ன் விளக்கம்:** வழக்கொழிந்த பழமையைப் புறந்தள்ளி, புதுமைக்கு புத்துயிர் ஊட்ட வேண்டும் என்கிறது நன்னூல். இஃது அனைவராலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒன்று.
- **பாடல் 2ன் விளக்கம்:** புதுமை என்ற பெயரால் வழக்கொழிந்த தமிழே! மீண்டும் பழமை நலம்பெற்று, மெய்சிலிர்க்க, குயில்போல் கூவி வா! வா! என்கிறார் சிற்பி. இஃது சிந்திக்க வேண்டிய ஒன்று.
- **இரு பாக்களின் கருத்துகளிலுள்ள வேற்றுமை:** முன்னது, பழமை அழித்து புதுமை வேண்டும் என்கிறது. பின்னது, எவற்றையும் பழமையென தள்ளிவிடாதே! பழமையிலும் சில சிறப்புகள் உண்டு என்கிறது - நல்ல உயிர்ப்பு உண்டு என்கிறது.

**5. பொருள் வேற்றுமை அணியினைச் சான்றுடன் விளக்குக.**

- **அணி இலக்கணம்:** இரு பொருளுக்குரிய ஒற்றுமையை முதலில்கூறி, பின் அவற்றை வேறுபடுத்திக் காட்டுவது 'பொருள் வேற்றுமையணி' எனப்படும்.
- **சான்று:** ஓங்க லிடைவந்து உயர்ந்தோர் தொழவிளங்கி
  ஏங்கொலிநீர் ஞாலத்(து) இருளகற்றும் - ஆங்கவற்றுள்
  மின்னேர் தனியாழி வெங்கதிரொன்(று) ஏனையது
  தன்னேர் இலாத தமிழ்!
- **அணிப் பொருத்தம்:** இப்பாடலில், தமிழுக்கும் கதிரவனுக்கும் இடையே உள்ள பயன்சார்ந்த ஒற்றுமையை முதலில் கூறி, பின்னர் அவ்விரண்டில் அக இருளைப் போக்கவல்ல தமிழே, தன்னிகர் அற்றது என வேறுபடுத்திக் காட்டப்பட்டுள்ளதால், இஃது பொருள் வேற்றுமை அணிவகையை சார்ந்ததாக அமைந்தது.

**6. நீர்நிலைகளிலிருந்து உதடுகள் குவித்து**

**உறிஞ்சுகிறது ஒளிக்கதிர்கள் - இக்கவிதையின் அடி, 'தூங்கும் பனிநீரை வாங்கும் கதிரோனே' என்னும் நாட்டுப்புறப் பாடலின் தொடர்ச்சியாய் அமைவதைப் பற்றி எழுதுக.**

- நீர்நிலைகளில் தேங்கிய நீரானது, சூரியனின் வெப்பத்தால் ஆவியாவதைப் படித்திருக்கின்றோம். பார்த்தும் இருக்கின்றோம். அக்காட்சியினைக் கண்ட ஆசிரியர், மழை பெய்தபின் தோன்றிய சூரியன், தன் தாகத்தினைப் போக்கிக்கொள்ள, கதிர்களை உதடுகளாக்கி மழைநீரினை உறிஞ்சிக் கொண்டான் என்ற கற்பனைக் கருத்தினைக் கவிதையில் ஏற்றினார்.
- இரவெல்லாம் புல்லின் நுனியில் தூங்கியது பனித்துளி. விடிந்ததும் வெளிவந்தச் சூரியன், பனித்துளியே எழுந்திரு! என தட்டியெழுப்பி, கதிர்களை கரமாக்கி தன்னுள் வாங்கிக்கொண்டான் என்கிறது நாட்டுப்புறப்பாடல்.
- நீரின் சுழற்சியினையும், கதிரவனின் பணியினையும் கற்பனை நயத்தோடு - ஒரு பாடலில் அடுத்தடுத்து அமைந்த அடிகள்போன்று இவைகள் பொருந்தியிருக்கின்றன.

**7. வாடைக்காலத்தில் கோவலர்கள் எவ்வாறு பாதுகாப்பைத் தேடினர்?**

- கோவலர்கள் தங்கிருந்த மலையை வலப்புறமாக சூழ்ந்து எழுந்த மேகமானது, உலகம் குளிரும்படியாக பெருமழை பெய்தது. தாங்கள் வாழும் தாழ்வான பகுதிகளில் பெருகிய வெள்ளத்தைக் கண்டுவெறுத்த கோவலர்கள், தங்களின் நிரைகளை மேடான இடத்தை நோக்கி ஓட்டிச்சென்றார்கள்.
- பெருமழையால் கோவலர்கள் சூடியிருந்த காந்தள் மலர்கள் கசங்கின. மலையையே நடுங்கச்செய்த குளிரிலிருந்து தங்களை பாதுகாத்துக்கொள்ள, பலருடன் ஒன்றுசேர்ந்து கொள்ளி நெருப்பினால்


Padasalai.Net

கைகளை சூடேற்றிக்கொண்டார்கள். ஆனாலும், அவர்களின் பற்கள் குளிரால் நடுங்கிக்கொண்டிருந்தன.

**8. மழைவெள்ளப் பாதிப்பிலிருந்து காத்துக்கொள்ளும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைக் குறிப்பிடுக.**

- பேரிடர் காலங்களில் தாங்கக்கூடிய புதிய கட்டுமானங்களை அமைத்தல். நீர்வழிப்பாதைகளுக்கான தெளிவான வரைபடம் உருவாக்கப்பட்டு, தொடர்ந்து பராமரித்தல்.
- சமூகக்காடுகள் வளர்ப்புத் திட்டத்தினை சமூக இயக்கமாக மாற்றியமைத்தல். கடற்கரை ஓரங்களில் சதுப்புநிலக் காடுகளை உருவாக்குதல்.

**9. பேரிடர் மேலாண்மை ஆணையம் - விளக்கம் தருக.**

- நடுவண் அரசு 2005ம் ஆண்டு டிசம்பர் 23ம் தேதியன்று தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையத்தை அமைத்தது.
- புயல், வெள்ளம், வறட்சி, சூறாவளி, பனிப்புயல், நிலநடுக்கம், நிலச்சரிவு, தீவிபத்து, வேதிவிபத்து போன்ற பேரிடர்கள் நிகழும்பொழுது, பல்வேறு அமைப்புகளை ஒருங்கிணைத்துச் சேவையாற்ற இந்த ஆணையம் உதவுகிறது.
- மேலும், பேரிடர் காலங்களில் மாநிலம், மாவட்டம், வட்டம், ஒன்றியம் என அனைத்து நிலைகளிலும் இவ்வாணையக் குழுக்கள் ஒருங்கிணைந்து பணியாற்றிவருகின்றன.

**10. பண்டைய விரிந்த குடும்பத்தின் தொடர்ச்சியே இன்றைய கூட்டுக் குடும்பம் - விளக்கம் தருக.**

- சங்க காலத்தின் தொடக்கத்தில், 'முதல்நிலை உறவினர்கள்' மட்டுமே இனம் காணப்பட்டனர். கணவன், மனைவி, மகன் ஆகியோருடன் பெற்றோரில் ஒருவர் சேர்ந்துவாழும் விரிந்தக் குடும்பமே, பின்னாளில் கூட்டுக் குடும்பத்திற்கு அடித்தளமிட்டது. அதைத் தொடர்ந்து, செவிலியும் அவள் மகள் தோழியும் குடும்பத்தின் அங்கமானதினால், கூட்டுக் குடும்பம் என்ற அமைப்பு, சங்க காலத்தின் இடைநிலையில் புதுவிதமான கட்டமைப்பினைப் பெற்றுவிட்டது.
- மேலும், இல்லற வாழ்வின் இறுதி காலத்தில், பெருமையும் அறமும் நிறைந்த சுற்றத்தோடு கூடிவாழ்வதே சிறந்தது என்றெண்ணி, ஒன்றிணைந்து வாழத்தொடங்கியதின் விளைவாக கூட்டுக் குடும்பங்கள் புத்துயிர் பெற்றனர். பண்டைய விரிந்த குடும்பத்தின் நீட்சியாகவே, கணவன், மனைவி, பிள்ளைகள், கணவனின் தாய் தந்தை, கணவனின் உடன்பிறந்தவர்கள், அவர்களின் மனைவி பிள்ளைகள் என்ற மிகப்பெரியதொரு கூட்டுக்குடும்ப கட்டமைப்பினை, நம் சமூகத்தில் இன்றும் காணமுடிகிறது.

**11. குகனோடு ஐவராகி, வீடணனோடு எழுவரான நிகழ்வுகளைச் சுட்டிக் காட்டுக.**

- இராமனோடு சேர்த்து உடன்பிறந்த சகோதரர்கள் நால்வர் ஆவர். பின், தனக்கு உதவிய நண்பர்களையும் தன் சகோதரர்களாக ஏற்றுக் கொண்டான் இராமன். இதனையே கம்பர், 'குகனோடு ஐவராகி, வீடணனோடு எழுவர்' ஆனோம் என சுட்டுகிறார்.
- **குகனோடு ஐவர்:** சிற்றன்னையின் சூழ்ச்சியினால் காட்டிற்கு சென்ற இராமன், கங்கைக் கரையினைக் கடந்திட உதவி செய்தவன் குகன். அவ்வுதவின் பலனாக குகனைத் தன் சகோதரனாக ஏற்றுக்கொண்டான் இராமன்.
- **குன்றுசூழ் மகனோடு அறுவர்:** கிட்கிந்தையில் அனுமனால் அறிமுகம் செய்யப்பட்டவனும், கதிரவனின் புலவனுமாகிய சுக்ரீவரன் இடத்தில் 'உன் கிளை இனி என் கிளை, என் சுற்றம் இனி உன் சுற்றம்' எனக் கூறி, தன் சகோதரனாக ஏற்றுக்கொண்டான் இராமன்.
- **வீடணனோடு எழுவர்:** சீதையை சிறையெடுத்தது முறையோ என வினவி, தன் அண்ணன் இராவணனின் கோபத்திற்கு ஆளாகிய, இராமனிடம் அடைக்கலம் புகுந்த வீடணனை தன் சகோதரனாக ஏற்றுக்கொண்டான் இராமன்.

**12. வருபவர் எவராயினும் நன்றி செலுத்து - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.**

- **இடம்:** ஜலாலுத்தீன் ரூமி அவர்களால் இயற்றப்பட்டு, என்.சத்தியமூர்த்தி அவர்களால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட 'விருந்தினர் இல்லம்' என்ற கவிதையில் இவ்வரிகள் இடம்பெற்றுள்ளது.
- **பொருள்:** "எதிர்பாராமல் வருகின்ற நிகழ்வுகள் எதுவாகினும், நன்றி செலுத்து" என்பது இவ்வரிகள் உணர்த்தும் பொருள்.


Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com

- **விளக்கம்:** ஆனந்தம், அற்பத்தனம், மனச்சோர்வு, விழிப்புணர்வு போன்ற எதிர்பாராத நிகழ்வுகள் அவ்வப்பொழுது அனைவரது வாழ்க்கையிலும் வந்துசெல்லும். அவை, ஒவ்வொன்றும் தொலைதூரத்திற்கு அப்பாலிருந்து, நமக்காக அனுப்பிவைக்கப்பட்ட விருந்தாளிகள். அவைகளே, நம்மை வாழ்வில் முன்னேற்றம் அடையச் செய்திடும் வழிகாட்டிகள். எனவே, வருபவர் எவராயினும் இன்முகத்தோடு வரவேற்று, நன்றி செலுத்த வேண்டும் என்கிறார் ஜலாலுதீன் ரூமி.

**13. தாயும் தந்தையும் பணிக்குச் செல்லும் இன்றைய சூழலில் குடும்ப உறுப்பினர் என்ற முறையில் நீங்கள் குடும்பத்துக்குச் செய்யும் உதவிகள் யாவை?**

- என்னுடைய அடிப்படையான பணிகளை நானே செய்துகொள்வேன். தாத்தா, பாட்டி, உடன் பிறந்த சகோதர சகோதரிகளுக்கு தேவையான பணிவிடைகளையும் உதவிகளையும் அவ்வப்போது செய்து முடிப்பேன். தண்ணீர் எடுப்பது, எரிபொருள் எடுப்பது, மளிகை வாங்குவது, பால் வாங்குவது போன்ற பணிகளை என்னுடையதாக்கிக்கொண்டு பெற்றோருக்கு உதவி செய்வேன்.
- வார விடுமுறை நாட்களில் என் துணிகளை நானே துவைத்துக்கொள்வேன். வண்டி வாகனங்களை சுத்தம் செய்துகொள்வேன். கால்நடைகளை பராமரிப்பது, வயக்காடுகளை கவணித்துக்கொள்வது, தேவை ஏற்படின் உணவினை சமைப்பது போன்ற பணிகளைச் செய்து பெற்றோருக்கு உதவிடுவேன். வீண் வம்புகளை ஏற்படுத்தி பெற்றோர்களின் அமைதியான வாழ்விற்கு பங்கம் விளைவிக்க மாட்டேன்.

**14. சடாயுவைத் தந்தையாக ஏற்று, இராமன் ஆற்றிய கடமையை எழுதுக.**

- சீதையை சிறையெடுத்துச் சென்ற இராவணனுடன் சண்டையிட்டு சிறகுகளை இழந்து, காயம் அடைந்த சடாயு, நடந்ததை இராமனிடம் கூறியப்பின் இறந்தான்.
- தன்தந்தை தசரதனின் நண்பனாகிய சடாயுவை, தன்னுடைய தந்தையாகவே எண்ணி இறுதிச் சடங்குகளைச் செய்ய முற்பட்டான் இராமன்.
- உலகில் உள்ளோர் வியக்கும் வண்ணம், கரிய அகில் கட்டைகளையும் சந்தனக் கட்டைகளையும் கொண்டுவந்து சேர்த்தான். அதன்மேல் தருப்பைப் புற்களை ஒழுங்குபட அடுக்கினான். மணலினைத் திருத்தி மேடையமைத்து மலர்களைத் தூவினான். நன்னீர் கொண்டு புனித நீராட்டினான்.
- பின், சடாயுவின் உடலினைத் தன் இருபெரும் கைகளால் தூக்கி, சடங்குகளை செய்து தன்கடமையினை பார்போற்ற முடித்துவைத்தான் இராமன்.

**15. அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது - இக்குறட்பாவில் பயின்றுவரும் அணியை விளக்குக.**

- **அணிச் சுட்டல்:** மேற்காண் குறட்பாவில் பயின்று வருவது 'நிரல்நிறை அணி' ஆகும்.
- **அணி இலக்கணம்:** சொல்லையும் பொருளையும் வரிசை வரிசையாக நிறுத்தி, அவ்வரிசைப்படியே பொருள் கொள்வது 'நிரல்நிறை அணி' எனப்படும்.
- **அணிப் பொருத்தம் - விளக்கம்:** அன்பும் அறமும் உடையதாக இல்வாழ்க்கை விளங்குமானால், அதுவே, அவ்வாழ்க்கையின் பண்பும் பயனும் ஆகும். இங்கு, 'அன்பு - அறன்' என்ற சொற்களை முதலடியில் நிறுத்தி, அதனோடு தொடர்புடைய 'பண்பு - பயன்' என்ற சொற்களை அடுத்த அடியில்நிறுத்தி, இரண்டினையும் இணைத்து பொருள்கொள்ளத்தக்க முறையில் குறள் அமைந்துள்ளதால், இஃது நிரல்நிறை அணி ஆயிற்று.

**16. இல்வாழ்க்கை சிறப்புற அறநெறியோடு வாழ்தலின் முக்கியத்துவத்தை வள்ளுவர் வழி நின்று விளக்குக.**

- இல்வாழ்க்கை அன்பும் அறமும் உடையதாக விளங்க வேண்டும். அவ்வாறு விளங்குவதே இல்வாழ்க்கையின் பண்பும் பயனுமாகும்.
- அறத்தின் இயல்போடு இல்வாழ்க்கை வாழ்பரே, முயற்சிசெய்து உயர்பவர்களைக் காட்டிலும் மேம்பட்டவர் ஆவார்.
- உலகில் வாழவேண்டிய நெறிமுறைகளை நன்கறிந்து, அறநெறியில் வாழ்பவர்களே வானுலகில் வாழும் தெய்வத்திற்கு இணையாகப் போற்றப்படுவார்கள்.

**17. எவற்றையெல்லாம் விட நன்றி உயர்ந்தது? - குறள் வழி விளக்குக.**

- **வானத்தினை விட பெரியது:** நாம், ஓர் உதவியும் செய்யாத நிலையில் ஒருவர் நமக்குச் செய்த உதவிக்கு இவ்வையகமும் வானகமும் கொடுத்தாலும் ஒப்பாகாது.


Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com

- **ஞாலத்தினை விட பெரியது:** ஆபத்துக்காலத்தில் ஒருவர் செய்த உதவி மிகச்சிறியதாக இருப்பினும், அது செய்யப்பட்ட காலத்தை நோக்கும்பொழுது, ஞாலத்தைவிட பெரியதாக இருக்கும்.
- **கடலினை விட பெரியது:** பயனை எதிர்பாராமல் ஒருவர் செய்த உதவியின் சிறப்பை ஆராய்ந்துப் பார்த்தால், அது கடலைவிடப் பெரியதாகும்.

**18. சினத்தால் வரும் கேட்டினைக் கூறுக.**

- தீமையான விளைவுகள் யாவும் சினத்தினாலேயே ஏற்படும் என்பதினால், 'சினம் கொள்ளுதல்' என்ற தீய பண்பை மறந்துவிட வேண்டும்.
- தம் முகமலர்ச்சியையும் அகமகிழ்ச்சியையும் அழித்திடும் சினத்தினைப் போன்றதொரு பகைவன் நமக்கு வேறு யாருமில்லை.
- ஒருவர் தன்னைக் காத்துக்கொள்ள விரும்பினால், சினம் வராமல் காத்துக்கொள்ள வேண்டும். அவ்வாறு காக்காவிட்டால் சினம் நம்மையே அழித்துவிடும்.
- சினம் தன்னைச் சேர்ந்தவரையும் அழிக்கும் நெருப்பு. அது ஒருவரது சுற்றம் என்னும் பாதுகாப்புத் தெப்பத்தையும் சுட்டழிக்கும்.

**19. ஏகதேச உருவக அணியைச் சான்றுடன் விளக்குக.**

- **அணி இலக்கணம்:** தொடர்புடைய இரு பொருட்களில் ஒன்றினை மட்டும் உருவகம் செய்துவிட்டு, மற்றொன்றை உருவகம் செய்யாமல் விட்டுவிடுவது 'ஏகதேச உருவக அணி' எனப்படும்.
- **சான்று:** சினம்என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம்என்னும்
  ஏமப் புணையைச் சுடும்.
- **அணிப் பொருத்தம்:** இக்குறட்பாவில், சுற்றத்தை தெப்பமாக உருவகம் செய்துவிட்டு, சினத்தை உருவகம் செய்யாமல் விட்டுவிட்டதால் இஃது ஏகதேச உருவக அணி வகையைச் சார்ந்தது ஆயிற்று.

**20. மூன்றான காலம் போல் ஒன்று - எவை? ஏன்? விளக்குக.**

- எண்ணம், வெளியீடு, கேட்டல் என்ற மூன்றும் 'மூன்றான காலம் போல் ஒன்றாகும்'.
- இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என மூன்றும் வெவ்வேறு நிகழ்வுகளைக் குறிப்பதாக இருந்தாலும், காலம் என்ற சொல்லால் ஒன்றெனத் தோன்றுகிறது.
- அதுபோலவே, எண்ணம், வெளியீடு, கேட்டல் என மூன்றும் வெவ்வேறு பொருட்களைக் குறித்தாலும், அவற்றின் விளைவு என்பது ஒன்றாகவே உள்ளது.
- இங்கு எண்ணம் என்பது வேறு, வெளியீடு என்பது வேறு, கேட்டல் என்பது வேறு. இவை எப்பொழுதும் ஒன்றல்ல, ஒன்றென எண்ணும்போது காலம்போல் ஒன்றாகிறது.

**21. நீங்கள் ஆசிரியரானால் மாணாக்கரை அன்பினால் எவ்வகையில் நெறிப்படுத்துவீர்கள்?**

- நான் ஆசிரியரானால், எதையும் பொறுமையுடன் எடுத்துச் சொல்லிப் புரிய வைப்பேன்.
- மாணவர்கள்மீது உண்மையான அன்பும் அக்கறையும் கொண்டவனாய் நடந்துகொள்வேன்.
- தேர்ச்சிக் குறைவு, தவறான பழக்கவழக்கம் கண்டால் அக்கறையோடு கடிந்துகொள்வேன்.
- பெற்றோரை அழைத்து பேசுகிறேன் என்ற பார்வையில், மாணாக்கர் மதிப்பினை இழக்கச்செய்ய மாட்டேன்.

**22. மணலில் எழுதியது முதல் தற்காலம் வரை எழுதும் முறையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களைத் தொகுத்துரைக்க.**

- முதன்முதலில் ஒரு தட்டில் நெல்லினைப் பரப்பியோ அல்லது மஞ்சலினைப் பரப்பியோ எழுதக் கற்றுக்கொடுப்பது பழக்கம். இது இன்றும் நடைமுறையில் உள்ளது. திண்ணைப் பள்ளிகளில், ஆற்றுமணலினை பரப்பி மாணவர்கள் எழுதக் கற்றுக்கொண்டார்கள்.
- உபாத்தியாயர் முதலில் தரையில் எழுத, அதன்மேல் மாணவர்கள் எழுதிப் பழகுவார்கள். பிறகு, தாமே எழுதுவார்கள். அவ்வாறு, எழுதும்பொழுது, எழுத்துகள் ஒன்றோடொன்று ஒட்டாமலும் வரிகோணாமலும் எழுதிப் பழகினார்கள். பின், ஓலைகளில் எழுதிடும் வழக்கம் ஏற்பட்டது. மணலில் எழுதியதுபோன்றே ஓலைச்சுவடிகளில் எழுதினார்கள். ஆனால், ஒற்றெழுத்துகள் மட்டும் மாறுபட்டிருந்தது.


Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com

- சிலேட் - பல்பம் முறையில் மாணவர்கள் பண்டைய முறையிலே கற்றுக்கொண்டார். தேவையானபோது அழித்து எழுதிட அது பெரிதும் உதவியது.
- காகிதத்தில் எழுதிடும் பழக்கம் தற்காலத்தில்தான் ஏற்பட்டது. ஆனால், சில ஆண்டுகளிலேயே தட்டச்சு, கணினி நகல் என பெரிய மாற்றத்தை பெற்றதால், எழுதும் வழக்கம் என்பதே வழக்கொழிந்து வருகிறது.

**23. வாயிலோயே எனத் தொடங்கும் ஔவையாரின் புறநானூற்றுப் பாடல் பாடாண் திணைக்கு உரியது என்பதை நிறுவுக.**

- **திணை இலக்கணம்:** பாடு + ஆண் + திணை = பாடாண் திணை. பாடப்படும் ஆண்மகனின் ஒழுகலாறுகளான கொடை, வீரம், புகழ், வலிமை போன்றவற்றை சிறப்பித்துக் கூறுவதாகும்.
- **சான்று:** வாயிலோயே! வாயிலோயே! எனத் தொடங்கும் ஔவையாரின் புறநானூற்றுப் பாடல்.
- **விளக்கம்:** தன்னை நாடிவரும் பரிசிலர்க்கு வாயிற்கதவை அடைக்காதவன் - விரைந்து ஓடும் குதிரையினைக் கொண்டவன் - ஔவை எனும் தமிழ்க்கிழவி, தன்னைவிட்டு விலகாதிருக்க, பரிசில் தராமல் நாட்களை நீட்டித்தவன் - நெடுமான் அஞ்சி. இப்பாடலில், நெடுமான் அஞ்சியின் கொடை நலம், படை பலம், ஔவையின்மீது அவர் கொண்டுள்ள பற்று போன்ற செய்திகள் வெளிப்பட்டுள்ளதால், இஃது பாடாண் திணைக்குரியதாக அமைகிறது.

**24. சென்னையின் பண்பாட்டு அடையாளங்களில், இன்றும் நிலைத்து இருப்பனவற்றைக் குறிப்பிடுக.**

- இந்திய - சாரசனிக் கட்டடக் கலையில் கட்டப்பட்ட மத்திய தொடர்வண்டி நிலையம், தென்னகத் தொடர்வண்டி நிலையம், உயர்நீதி மன்றம், சென்னைப் பல்கலைக்கழகம், ரிப்பன் கட்டடம் மற்றும் விக்டோரியா அரங்கம் போன்றவை சென்னையின் பண்பாட்டு அடையாளங்களாக இன்றும் நிலைத்து இருக்கின்றன.
- மேலும், தமிழ்நாடு ஆவணக் காப்பகம், எழும்பூர் அருங்காட்சியகம், கோட்டை அருங்காட்சியகம், கன்னிமாரா நூலகம் மற்றும் திரைப்படத் தொழில்சார்ந்த இடங்களும் சென்னையின் பண்பாட்டு அடையாளங்களாகத் திகழ்கின்றன.

**25. இராமலிங்க அடிகள் கந்தவேளிடம் எத்தகையோர் உறவு வேண்டுமெனக் கேட்கிறார்?**

- மனதினை ஒருநிலைப்படுத்தி, உன் திருப்பாதங்களை எப்பொழுதும் நினைத்துக்கொண்டிருக்கின்ற உத்தமர்களின் உறவு வேண்டும் என்றும், உள்ளொன்று நினைத்து புறமொன்று பேசும் வஞ்சகர்களின் உறவு வேண்டாம் என்றும் இராமலிங்க அடிகள் கந்தவேளிடம் கேட்டுக்கொண்டார்.

**26. பங்குனி உத்திரத் திருவிழா நடைபெற்ற முறையைத் திருஞான சம்பந்தர் எவ்வாறு பதிவு செய்கிறார்?**

- பூம்பாவாய், இளம்பெண்கள் ஒன்றுகூடி ஆரவாரத்தோடு கொண்டாடிடும் விழாகள் நிறைந்த வீதியினை உடைய ஊர் திருமயிலை. எழுச்சி மிக்க விழாகள் நடந்திடும் அத்திருமயிலை கபாலீச்சுரம் இறைவனுக்கு பங்குனி உத்திர நாளில் பூசையிடும் ஆரவார விழாவினைக் காணாமல் செல்வது முறையாகுமா? என கேட்பதுபோல் திருஞான சம்பந்தர் பங்குனி உத்திரத் திருவிழா நடைபெற்ற முறையினை தன் தேவார பதிகத்தில் பதிவு செய்கிறார்.

**27. நெல்லின் நேரே வெண்கல் உப்பு - இத்தொடரின் வழி பண்டமாற்று வணிகத்தை விளக்குக.**

- பண்டையக் கால மக்கள், தாங்கள் வாழும் நிலத்தின் இயல்புக்கு ஏற்றவாறு தொழிலினை செய்துவந்தார்கள். அவ்வகையில், நெய்தல் நிலத்தில் வாழ்ந்துவந்த பரதவர்கள், உப்பங்கழிகளில் வெண்கல் உப்பினை விளைவித்து, பின் அவ்வுப்பினை வண்டிகளில் ஏற்றிச்சென்று ஊர் ஊராய் விற்பார்கள்.
- 'மருத நிலத்தில் விளைந்த நெல்லினைக் கொடுத்து, தாங்கள் கொண்டுவரும் உப்பினை வாங்க வாரீரோ' என உமணர் மகள், மருத நில மக்களைப் பார்த்து அழைக்கிறாள். இத்தொடரின்மூலம் உப்பை நெல்லுக்கு மாற்றாகக் கொடுத்தார்கள் என்பதை உணர்ந்துகொள்ளமுடிகிறது. மேலும், இதன்மூலம் பண்டையக் காலத்தில் பண்டமாற்றுமுறை நடைமுறையில் இருந்துள்ளது என்பதனையும் அறிந்துகொள்ள முடிகிறது.

**28. நாட்டிய அரங்கின் அமைப்பை இளங்கோவடிகள் காட்சிப்படுத்தும் பாங்கு குறித்து உங்கள் கருத்தை எழுதுக.**


Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com

- நாட்டிய அரங்குகள் அமைப்பதற்கென்றே ஒரு தனிப்பட்ட நெறிமுறை, தொன்றுதொட்டு தமிழகத்தில் உண்டு. அந்நெறிமுறைகளை பின்பற்றியே மாதவியின் நாட்டிய அரங்கும் அமைக்கப்பட்டது என இளங்கோவடிகளின் வாயிலாக அறியமுடிகிறது.
- நாட்டிய அரங்கானது, கண்டு சுவைத்திடும் விருந்தினர் அவையைக்காட்டிலும் உயரமாக அமைத்திடல் வேண்டும். அப்பொழுதுதான் எங்கிருந்து பார்த்தாலும் மேடை நன்கு தெரியும்.
- நூலாசிரியர் சொல்லிய முறைப்படி தூய நிலம் தெரிவு செய்யப்பட்டது. ஒரு சாண் அளவுடைய மூங்கிலின் துணையுடன், நீள(8) - அகல(7) - உயரம்(1) குறிக்கப்பட்டு மேடையானது அமைக்கப்பட்டது. நான்கு கோல் உயரத்தில் உத்திரமும், இரு வாயில்களும் உடன் அமைக்கப்பட்டன.
- எழினிகள், மாட ஓவியங்கள், தூண் விளக்குகள் முறையே பொருத்தப்பட்டன. முத்து மணிகள் தொங்கவிடப்பட்டன.

**29. ஏதேனும் இரண்டு மெய்ப்பாடுகள் தோன்றுவதற்கான சூழ்நிலையைக் கற்பனையாகப் படைக்க.**

- **அச்சம்:** வார இறுதி நாட்களில் வழங்கப்பட்ட வீட்டுப்பாடத்தினை முடிக்காமல், திங்களன்று பள்ளிக்குச் சென்றால், ஆசிரியர் தண்டிப்பார் என அச்சம் கொண்டு, உடல்நிலை சரியில்லை என பெற்றோரிடம் பொய்கூறுதல்.
- **பெருமிதம்:** பள்ளியளவில் முதலிடம் பிடித்திடுவான் என்ற எண்ணத்தில், தனது மகனைக்கு பாராட்டு விழா எடுக்க முற்படுகிறார் தந்தை. ஆனால், மகனோ, மாநிலத்தில் முதலிடம் பிடித்து அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்திவிடுகிறான்.

**30. திரைப்படத்தில் காட்சியின் ஆற்றலை எடுத்துக்காட்டுடன் புலப்படுத்துக.**

- திரைப்படத்தில் காட்சியானது சிறப்பாக அமைந்துவிட்டால், வசனம் இரண்டாம் பட்சம்தான். திரைப்படத்தில் வசனம் இன்றி, காட்சிகளை அடுத்தடுத்து வைத்துக் கதையை நகர்த்துவர். அக்காட்சியானது பல நேரங்களில் இருபரிமாணத்திலும் முப்பரிமாணத்திலும் அமையக்கூடும்.
- ஒருவன் ஓடிவருவதாகக் காட்டிவிட்டு, 'என்னாச்சி' என்று கேட்டால் போதும். இது காட்சி மொழியாகிவிடும். ஒருவன் உணர்ச்சியைக் காட்ட முகத்தைக் காட்சியாகக் காட்டினால் போதும். அதுபோல, கட்டுப்படுத்த முடியாத கோபத்தைக் காட்ட நடிகன் கத்த வேண்டியது இல்லை. கண்ணாடிக் குடுவையை இறுகப்பிடித்து உடைப்பதைக் காட்டினால்போதும். இப்படியாகக் கதை நகர்வுக்குத் திரைப்படக் காட்சி உதவுகிறது.

**31. கவிதை என்பது கண்முன் நிகழ்வதையும் மனதில் நிகழ்வதையும் தொடர்புபடுத்திச் சொற்சிமிழில் அடைக்கும் முயற்சியே என்பதை நகுலன் கவிதையைக் கொண்டு நிறுவுக.**

- மனதில் தாக்கத்தை ஏற்படுத்தும் நிகழ்வுகளை சொல்லில் வடிப்பதே கவிதை. அதில் சொல் புதிது, பொருள் புதிது. இங்கு, கவிஞர் நகுலன் அவர்கள், தன் கண்முன் நிகழும் சாதாரண நிகழ்வுகளை மன நிகழ்வுகளோடு தொடர்புபடுத்தி, கவிதையாகப் படைத்துள்ளார்.
- வாழ்வின் அங்கமாகிப் போன இறப்பினை, 'மூச்சு நின்றுவிட்டால் பேச்சு அடங்கும்' என்ற எளியச் சொற்களால் கவிதையாக்குகிறார். மேலும், 'இருப்பதற்கென்றுதான் வருகிறோம் - இல்லாமல் போகிறோம்' என வாழ்வியல் தத்துவத்தை எளிதாக உரைக்கிறார்.
- மனித வாழ்வில் யாராலும் தொடர்ந்து உண்மையைக்கூற முடியாது. பல நேரங்களில் பொய்களும் வெளிப்படும். அதனையே, 'உண்மையைச் சொல்லாமல் இருப்பதற்கு - பல உண்மைகளை சொல்கிறார்' என ஓரிரு வரிகளில் சொற்சிமிழில் வார்த்தைகளை அடைத்து கவிதை படைத்துள்ளார் கவிஞர் நகுலன்.

**32. அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க இகல்வேந்தர்ச் சேர்ந்து ஒழுகுவார் - இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.**

- **அணிச் சுட்டல்:** மேற்காண் குறட்பாவில் பயின்று வருவது தொழில் உவமையணி ஆகும்.
- **அணி இலக்கணம்:** ஒரு பொருளின் தொழில் அல்லது செயலின் காரணமாக அமையும் உவமை, தொழில் உவமை எனப்படும்.

- **அணிப் பொருத்தம்:** குளிர்காய்பவர்கள், தீயினை 'அணுகாது - அகலாது' இருப்பதுபோல, அரசனைச் சார்ந்து வாழ்பவர்களும் அவ்வரசனை 'அணுகாது - அகலாது' வாழ்தல் வேண்டும். இங்கு, 'அணுகுதல் - அகலுதல்' என்ற இரு தொழில்கள் உவமையாக ஒப்புமைப் படுத்தப்பட்டுள்ளதால், இ∴து தொழில் உவமையணி வகையைச் சார்ந்தது ஆயிற்று.

**33. அறிவின் மேன்மை பற்றித் திருக்குறள் வழி நீவிர் கருதுவன யாவை?**

- **அறிவின் சிறப்பு:** அறிவு, அழிவு நேராமல் முன்னறிந்து காக்கும் கருவியாகும். மேலும், அது பகைவராலும் அழிக்க முடியாத அரணுமாகும்.
- **அறிவின் இலக்கணம்:**
  - மனதை தீய வழியில் இருந்து விலக்கி, நல்ல வழியில் செலுத்துவதே அறிவாகும்.
  - எந்தச் செய்தியை எவர் கூறக் கேட்டாலும் அச்செய்தியின் உண்மையை ஆராய்ந்து காண உதவுவதே அறிவாகும்.
  - உலகத்தார் எவ்வழியில் நடக்கின்றனரோ அவ்வழியில் தானும் நடப்பதே சிறந்த அறிவாகும்.
- **அறிவுடையார்க்குத் துன்பமில்லை:** பின்னர் வரக்கூடிய துன்பத்தை முன்னரே அறிந்து தன்னைக் காத்துக்கொள்ளும் அறிவுடையவர்க்கு நடுக்கம் தரும் துன்பம் என்றுமே இல்லை.

**34. எடுத்துக்காட்டு உவமையணியை சான்றுடன் விளக்குக.**

- **அணி இலக்கணம்:** உவமை ஒரு வாக்கியமாகவும், உவமேயம் மற்றொரு வாக்கியமாகவும், உவம உருபு மறைந்தும் வருவது 'எடுத்துக்காட்டு உவமையணி' எனப்படும்.
- **சான்று:** துஞ்சினார் செத்தாரின் வேறுஅல்லர் எஞ்ஞான்றும்
  நஞ்சு உண்பார் கள்உண்பவர்.
- **உவமை:** துஞ்சினார் செத்தாரின் வேறு அல்லர்
- **உவமேயம்:** நஞ்சு உண்பார் கள்உண்பவர்
- **உவம உருபு:** போல - மறைந்து வந்துள்ளது
- **அணிப் பொருத்தம்:** உறங்கியவர், இறந்தவரைவிட வேறுபட்டவர் அல்லர். அவ்வாறே கள்ளுண்பரும் நஞ்சு உண்பவரே ஆவார். இங்கு 'போல' என்ற உவம உருபு மறைந்து வந்துள்ளதால், இ∴து எடுத்துக்காட்டு உவமையணி ஆயிற்று.

**35. மனத்திட்பம் அவசியமான பண்பு என்பதைக் குறள்நெறி நின்று விளக்குக.**

- **வினைத்திட்பத்தின் பொருள்:** எத்தனை இடர்கள் ஏற்பட்டாலும் கலக்கம் அடையாமல், தான் மேற்கொண்ட செயலைச் செய்து முடிக்கும் மனவலிமையே வினைத்திட்பம் ஆகும்.
- **வினைத்திட்பத்தின் அருமை:** பிறரால் செய்ய முடியாத செயல்களையும் என்னால் செய்ய முடியும் எனக் கூறுதல் எளிதிலும் எளிது. ஆனால், சொல்லியவண்ணம் செய்தல் என்பது அரிதிலும் அரிது.
- **வினைத்திட்பமுடையார் எய்தும் பயன்:** ஒரு செயலை வெற்றிகரமாக செய்து முடிக்க முடியும் என்ற வினைத்திட்பம் யாரிடத்தில் உண்டோ, அவரே எண்ணியவற்றை எண்ணியவாறு செய்து முடிப்பார்.
- **வினைத்திட்பம் உடையவரை அறிதல்:** வடிவில் சிறிய அச்சாணி மிகப்பெரிய தேரைச் செலுத்தும். அதேபோல், வடிவில் சிறியவரும் மிகப்பெரிய செயலைச் செய்ய வல்லவர். எனவே உருவு கண்டு எள்ளல் கூடாது.

**36. சிற்றினம் சேராமையும், நல்லினத்தின் துணையுமாக வள்ளுவர் உரைப்பன பற்றி நீவிர் அறிவனவற்றை எழுதுக.**

- பொதுவாக, மக்களுக்கு இயற்கை அறிவு என்பது அவரவரின் மனத்திறனால் ஏற்படும். ஆனால், அவர் அப்படிப்பட்டவர், இவர் இப்படிப்பட்டவர் என்று உலகில் உள்ளோரால் கூறப்படும் போற்றுதலுக்கும் தூற்றுதலுக்கும் உரிய சொல்லானது, அவர்சார்ந்த இனத்தினால் மட்டுமே ஏற்படும்.
- நல்ல இனத்தினைவிட சிறந்த துணை உலகில் வேறில்லை. அதுபோன்றே, தீய இனத்தினைவிட துன்பம் தரும் பகையும் வேறில்லை.

**37. வாளையும் பாம்பையும் எவ்வகைப் பகைக்குச் சான்றாக வள்ளுவர் கூறுகிறார்?**

- **வாள்:** வாளைப்போல் வெளிப்படையாகத் துன்பம் செய்யும் பகைவரைக் கண்டு அஞ்ச வேண்டாம். ஆனால், உறவுபோல் நடித்து உட்பகை கொண்டவரைக் கண்டு அஞ்சுதல் வேண்டும்.
  வாள்போல் பகைவரை அஞ்சற்க அஞ்சுக
  கேள்போல் பகைவர் தொடர்பு.
- **பாம்பு:** உள்ளத்தில் உடன்பாடு இல்லாவர்களுடன் கூடி வாழும் வாழ்க்கை என்பது, ஒரே குடிசையில் பாம்புகளுடன் வாழ்வது போன்றது.
  உடன்பாடு இலாதவர் வாழ்க்கை குடங்கருள்
  பாம்போடு உடன்உறைந் தற்று.

**38. சூதும் கள்ளும் கேடு தரும் - திருக்குறள் வழி விவரிக்க.**

- **சூது:**
  - புகழினைக் கெடுத்து, துன்பத்தினை ஏற்படுத்திடும் சூதினைப் போன்றதொரு கேடு வேறில்லை.
  - ஒருவரின் காலம் சூதாடுமிடத்தில் கழியுமே ஆனால், அவனது செல்வமும் பண்பும் கெட்டழியும்.
- **கள்:**
  - உறங்கியரும் இறந்தவரும் வேறுபட்டவர்கள் அல்லர். அதுபோன்றே, கள்ளுண்பவரும் நஞ்சுண்பரும் வேறுபட்டவர் அல்லர்.
  - கள்ளுண்டு மயங்கியவர்களை திருத்த முயல்வது என்பது, நீரில் மூழ்கியவர்களை தீப்பந்தம் கொண்டு தேடுவது போன்றது.

**39. வேளாண்மை மேலாண்மை குறித்து நீவீர் பரிந்துரைப்பனவற்றை எழுதுக.**

- வேளாண்மைக்குள்ளும் மேலாண்மையின் கூறுகள் உண்டு. மேலாண்மை நெறிகளை பின்பற்றினால் வேளாண்மை செழிக்கும்.
- சரியான பயிரைத் தேர்ந்தெடுத்தல், உரிய நேரத்தில் விதைத்தல், நீர் மேலாண்மையை நெறிப்படுத்துதல், அறுவடைக்குப்பின் பாதுகாத்தல், உரிய விலை வரும்வரை இருப்பு வைத்தல் என்று ஒவ்வொரு நிலையிலும் விழிப்புணர்வோடு மேலாண்மையை உட்புகுத்தி பயிர் செய்துவந்தால் வேளாண்மை செழிக்கும்.

**40. அதிசய மலரின் பூச்செடி எவ்வாறு முளைத்ததாக, தமிழ்நதி கூறுகிறார்?**

- போரின் குண்டுமழையால் ஈழநிலமும் மரமும் செடியும் கொடியும் முற்றிலும் அழித்தொழிக்கப்பட்டது.
- அந்நிலத்தில், மனித நடமாட்டம் இல்லாத நேரத்தில் உலவித்திரிந்த யானையின் எச்சத்திருந்த விதையின் மூலமாகவோ அல்லது யாரோ ஒருவரின் சப்பாத்தின் பின்புறம் ஒட்டிக்கிடந்த விதையின் மூலமாகவோ இப்பூச்செடி முளைத்திருக்கலாம் என்கிறார் தமிழ்நதி.

**41. எங்கிருந்தோ வருகிறது**
**வண்ணத்துப்பூச்சியொன்று**
**பறவைகளும் வரக்கூடும் நாளை - இடஞ்சுட்டிப் பொருள் விளக்கம் தருக.**

- **இடம்:** இவ்வடிகள், தமிழ்நதி அவர்களால் இயற்றப்பட்ட அதியமலர் என்னும் கவிதையில் இடம்பெற்றுள்ளது.
- **பொருள்:** பூவைத்தேடி வண்ணத்துப்பூச்சி வருவதைப்போல, நாளை பறவைகளும் வரலாம்.
- **விளக்கம்:** போரின் குண்டுமழையால் ஈழநிலமும் மரமும் செடியும் கொடியும் முற்றிலும் அழித்தொழிக்கப்பட்டது. அந்நிலத்தில், மனித நடமாட்டம் இல்லாத நேரத்தில் உலவித்திரிந்த யானையின் எச்சத்திருந்த விதையின் மூலமாகவோ அல்லது யாரோ ஒருவரின் சப்பாத்தின் பின்புறம் ஒட்டிக்கிடந்த விதையின் மூலமாகவோ அப்பூச்செடி முளைத்திருக்கலாம். பச்சையம் இழந்த சாம்பல் நிலத்தில், பிறந்த குழந்தைபோல சிரிக்கிறது அப்பூச்செடியில் உள்ள பூ. அப்பூவைத்தேடி வண்ணத்துப்பூச்சிகள் வருகின்றன. இன்னும் மரங்கள் வளர்ந்து காடானால், நாளை பறவைகளும் வரலாம். இக்குறிப்பின்மூலம் நாடுகடந்துசென்ற அகதிகள் மீண்டும் வரலாம் என்ற உட்கருத்தினை அறியந்துகொள்ளமுடிகிறது.


Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com

**42. யானை புக்க புலம்போலத் தானும் உண்ணான் உலகமும் கெடுமே - உவமையையும் பொருளையும் பொருத்தி விளக்குக.**

- **உவமை:** யானை புக்க புலம்போல - யானையானது, தான்புகுந்த நிலத்திலுள்ள தானியங்களை தானும் உண்ணாமல் பிறருக்கும் பயன்படாமல் வீணாக்கும்.
- **பொருள்:** வரி திரட்டும் முறை அறியாமல் வரி திரட்டினால், தானும் பயனடையாமல், மக்களும் பயனடையாமல் துன்புறுவர்.
- **பொருத்தம்:** யானை தனித்துச் சென்று வயலில் புகுந்து உண்ணுமாயின் அதன் வாயில் புகுந்த நெல்லைவிட, அதன் கால்களால் மிதிபட்டு அழிந்த நெல்லின் அளவு அதிகமாகும். அதுபோல, அறிவுடைய அரசன், வரி திரட்டும் முறை அறிந்து மக்களிடமிருந்து வரியினைத் திரட்டினால் நாடு, கோடிக் கணக்கில் செல்வத்தைப் பெற்றுச் செழிப்படையும். இல்லேல், யானைக் காலால் மிதிப்பட்டு கெட்டழிந்த நெல்லினைப்போல, தானும் பயனடையாமல், மக்களும் பயனடையாமல் துன்புறுவர்.

**43. பாடாண் திணையைச் சான்றுடன் விளக்குக.**

- **திணை இலக்கணம்:** பாடு + ஆண் + திணை = பாடாண் திணை. பாடப்படும் ஆண்மகனின் ஒழுகலாறுகளான கொடை, வீரம், புகழ், வலிமை போன்றவற்றை சிறப்பித்துக் கூறுவதாகும்.
- **சான்று:** 'காய்நெல் அறுத்துக் கவளம் கொளினே' எனத் தொடங்கும் பிசிராந்தையாரின் புறநானூற்றுப் பாடல்.
- **திணைப் பொருத்தம்:** அறிவுடைய அரசன் வரி திரட்டும் முறையினை அறிந்து மக்களிடமிருந்து வரியினைத் திரட்டினால் நாடு கோடிக்கணக்கில் செல்வத்தைப் பெற்றுச் செழிப்படையும். இல்லேல், யானைக் காலால் மிதிப்பட்டு கெட்டழியும் நெல்லினைப்போல, தானும் பயனடையாமல் மக்களும் பயனடையாமல் துன்புறுவர். இங்கு, பாண்டியன் அறிவுடைநம்பி அவர்களின் வரிதிரட்டும் முறையையும் அவனின் குணப்பண்பும் எடுத்துக்கூறப்பட்டுள்ளதால், இப்பாடல் பாடாண் திணையில் அமையப்பெற்றதாகிறது.

**44. செவியறிவுறூஉ துறையைச் சான்றுடன் விளக்குக.**

- **துறை இலக்கணம்:** அரசன் செய்ய வேண்டிய கடமைகளை முறைதவறாமல் செய்யுமாறு அவன் கேட்க அறிவுறுத்தல், செவியறிவுறூஉ என்னும் துறையாகும்.
- **சான்று:** 'காய்நெல் அறுத்து' எனத் தொடங்கும், பிசிராந்தையாரின் புறநானூற்றுப் பாடல்.
- **துறைப்பொருத்தம் - விளக்கம்:** யானை தனித்துச் சென்று வயலில் புகுந்து உண்ணுமாயின் அதன் வாயில் புகுந்த நெல்லைவிட, அதன் கால்களால் மிதிபட்டு அழிந்த நெல்லின் அளவு அதிகமாகும். அதுபோல, அறிவுடைய அரசன், வரி திரட்டும் முறை அறிந்து மக்களிடமிருந்து னவரியினைத் திரட்டினால் நாடு, கோடிக் கணக்கில் செல்வத்தைப் பெற்றுச் செழிப்படையும். இல்லேல், யானைக் காலால் மிதிப்பட்டு கெட்டழியும் நெல்லினைப்போல, தானும் பயனடையாமல், மக்களும் பயனடையாமல் துன்புறுவர் என பிசிராந்தையார் அவர்கள் பாண்டியன் அறிவுடை நம்பிக்கு அறிவுரைக் கூறுவதுபோல அமைந்துள்ளதால், இப்பாடல் செவியறிவுறூஉ துறைக்கு உரியதாகிறது.

**45. மயிலை சீனி.வேங்கடசாமி நினைவுச் சிறப்பிதழுக்குச் செய்திகள் உருவாக்கித் தருக.**

<u>மயிலை சீனி.வேங்கடசாமி நினைவுச் சிறப்பிதழ்</u>

- மயிலை சீனி.வேங்கடசாமி அவர்கள், சென்னை மயிலாப்பூரில் 16.12.1900ல் பிறந்தவர். தந்தை சித்த மருத்துவர் சீனிவாசன் அவர்களின் பின்பலமும் தமையனின் தமிழ்ப் பின்புலமும் சீனி.வேங்கடசாமியை வரலாற்று ஆய்வாளராக உருவாக்கியது.
- 25 ஆண்டுகள் தொடக்கப்பள்ளி ஆசிரியராகப் பணியாற்றியவர். பணிக்காலத்தில், விபுலானந்த அடிகள் - திரு.வி.க - தெ.பொ.மீ - ச.த.சற்குணர் போன்றோர்களுடன் ஏற்பட்ட நட்பினைப் பயன்படுத்தி, பல்வேறு இதழ்களில் ஆய்வுக்கட்டுரைகளை வெளியிட்டுள்ளார்.
- சமயம், மானுடவியல், தமிழக வரலாறு, கலை வரலாறு, தொல்லியல் ஆய்வு, மொழியாய்வு என பல்துறை நூல்களைப் படைத்துள்ளார். தமிழர் வளர்த்த அழகுக் கலைகள் என்ற நூலுக்காக தமிழக அரசின் பரிசினைப் பெற்றுள்ளார்.


Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com

**46. கடையேழு வள்ளல்களையும் அவர்கள் செய்த செயலையும் அட்டவணைப் படுத்துக.**

| வ.எண் | கடையேழு வள்ளல்கள் | ஆண்ட நாடு | செய்த செயல் |
|---|---|---|---|
| 1 | பேகன் | பொதினி மலை | குளிரால் நடுங்கிய மயிலுக்கு தன் போர்வையைக் கொடுத்தவன். |
| 2 | பாரி | பறம்பு நாடு | முல்லைக்கு பற்றுக்கொம்பாக தேரினைக் கொடுத்தவன். |
| 3 | காரி | மாலையமான் நாடு | இரவலருக்கு தன் குதிரையையும் பெருஞ்செல்வத்தையும் கொடுத்தவன். |
| 4 | ஆய் | பொதியமலை | நீலக்கல்லினையும் நாகம் கொடுத்த ஆடையினையும் இறைவனுக்கே கொடுத்தவன் |
| 5 | அதியமான் (அதிகன்) | தகடூர் | அரிய நெல்லிக்கனியை ஔவைக்கு கொடுத்தவன் |
| 6 | நள்ளி | நளிமலை | தன்னை நாடியவர்களும் நண்பர்களும் பிறரிடம் இரவாது, உள்ளம் மகிழும்படி குறிப்பறிந்து கொடுப்பவன் |
| 7 | ஓரி | கொல்லிமலை | தன் நாட்டின் சிறிய மலைப்பகுதியை கூத்தருக்கு கொடுத்தவன். |

**47. ஈசன் மகன் நின்றனர் ஓர் ஏழையென ஓர்மின் - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.**

- **இடம்:** எச்.ஏ.கிருட்டிணனார் இயற்றிய ‘இரட்சணிய யாத்திரீகம்’ என்னும் நூலில் இவ்வரிகள் இடம் பெற்றுள்ளது.
- **பொருள்:** ‘பகைவர்கள் கயிற்றைக்கொண்டு கட்டும்பொழுது, ஓர் ஏழையினைப் போன்று உடன்பட்டு நின்றார் இயேசு’.
- **விளக்கம்:** யூதர்கள் இறைமகனாரின்மீது பகைகொண்டு, இழிசொற்களை கூறி கயிற்றினால் கட்டினார்கள். அவ்வாறு கட்டும்பொழுது, எவ்வித எதிர்ப்பும் தெரிவிக்காமல், வறுமைக்காலத்தில் உதவிகள் கிடைக்கப்பெறாத ஏழையினைப்போன்று, அன்பு என்ற கட்டிலிருந்து விடுபடாமல் உடன்பட்டு நின்றார் அவர். இது சாதாரண அன்புச்செயல் அன்று. பகைகொண்ட மனிதர்கள் வாழ்நாள் முழுவதும் துன்பத்தில் இருப்பார்களோ என்றெண்ணிய இறைமகனாரின் இரக்கச்செயல் இது.

**48. கொடை வழங்குதலின் நீங்கள் பின்பற்ற விரும்புவனவற்றை எழுதுக.**

- தன்னை நாடி வந்தவர்களுக்கு எவ்வித எதிர்பார்ப்புமின்றி, வாரிவழங்கிடும் வள்ளல்தன்மையே கொடை. அக்கொடையில் நான் பின்பற்ற விரும்புவனவற்றில் சில.........
- வறியவர்களின் குறிப்பறிந்து, தேவையானவற்றை போதுமென்ற அளவிற்கு வழங்குதல்.
- முதலில் வந்தவர், கடைசியில் வந்தவர் என்ற வேறுபாடு இன்றி உதவிகளைச் செய்தல்.
- பொருளாக மட்டுமின்றி, நடைமுறை வாழ்க்கையில் சிக்கலை எதிர்கொள்பவர்களுக்கு, அவர்களின் தேவையறிந்து உதவிகளைச் செய்தல்.

## ஆறு மதிப்பெண் வினா - நெடுவினா

**1. கவிதையின் நடையைக் கட்டமைக்கும் அழகியல் கூறுகளை எடுத்துக்காட்டி விளக்குக.**

- **நடை அழகியல்:** நடை அழகியல் உருவாக்கத்திற்கு, தொல்காப்பியமே தளம் அமைத்துத்தருகிறது. கவிதையின் இயங்காற்றல்தான் ‘நடை’ என்பது தொல்காப்பியத்தின் அடிப்படைக் கருத்தாக உள்ளது.
- **மொழிசார் கலை:** உவமை, உருவகம், உள்ளுறை, இறைச்சி போன்றவை மொழியின் வழக்குகளை கலையின் வழக்குகளாக மாற்றுவதால், கவிதையானது மொழிசார் கலையாக வளர்ச்சி பெறுகிறது.
- **ஒலிப்பின்னல் - ஒலிக்கோலம்:** தொன்மையான மொழிகள்யாவும் சமிக்ஞையிலிருந்தும் இசையிலிருந்தும்தான் தொடங்குகின்றன. மொழிசார்ந்த கவிதைகள் இசையோடும் இசைக்கருவிகளோடும்தான் பிறக்கின்றன. அதில், ஓசையும் பொருளும் இணைந்து கலைவடிவம் கொள்கின்றன. இதனையே நாம் ஒலிப்பின்னல் என்கிறோம்.

- (எ-டு): 'நுந்தை தந்தைக்கு இவன்தந்தை தந்தை' (புறம்). இங்கு, உயிர் ஒலி - அதிலும், குறிப்பாக நெடில் ஒலிகளின் வருகையும், சில ஒலிகள் மற்றும் சில சொற்கள் திரும்பவரல் தன்மையினைப் பெற்றிருப்பதும் அவற்றிக்கிடையே நடைபெறும் சொல் விளையாட்டுகளும் நம் கவனத்திற்குரியதாக அமைகின்றது. அச்சொல்லோசையே ஒலிக்கோலம்.

- **சொற்புலம் - தொடரியல் போக்கு:** ஒரு பொருளைக்குறிக்கும் பல சொல்லாகவும், பல பொருளைக்குறிக்கும் ஒரு சொல்லாகவும் மீண்டும் மீண்டும் வந்து பாடலை சிறப்பிப்பவை சொற்புலங்கள். இதுவே, ஒரு தனிமனிதனின் கலை, பண்பாடு, அரசியல், வரலாறு போன்றவற்றை எடுத்துக்கூறுபவையாகும். உரைநடை வழக்குகளையும் பேச்சு வழக்குகளையும் செய்திகள் மற்றும் உணர்வுகளின் அடிப்படையில் எடுத்துக்கூறுவது தொடரியல் போக்குகளாகும்.

**2. பாரதியின் கடிதம் வாயிலாக நீங்கள் அறிந்துகொண்ட மொழிப்பற்று, சமூகப்பற்று ஆகியவற்றை விவரிக்க.**

- **முன்னுரை:** பாரதி, இருபதாம் நூற்றாண்டின் இணையற்றக் கவிஞர். துவண்டுகிடந்த சுதந்திர உணர்வினை தூக்கி நிறுத்தியவர். உரைநடை, கவிதை, சிறுகதை, புதினம் என்ற இலக்கிய எல்லைகளை எட்டிக்கடந்த ஏகலைவன். அவரே, கடித இலக்கியத்தின் முன்னோடி. அவர்தம் கடிதத்தின் வாயிலாக நான் அறிந்துகொண்ட மொழிப்பற்றையும் சமூகப்பற்றையும் உங்கள் கண்முன் இங்கு படைக்கின்றேன்.

- **மொழிப்பற்று:** இந்தி, மராத்தி முதலிய வடமொழிகளைக்காட்டிலும் தமிழ் உயர்வானது என்பது அவரின் முடிவான கருத்து. அதனால்தான், "யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம்" என்றார். அதேநேரத்தில், பிறமொழிகளின்மீது வெறுப்புகொள்ளாமல் அம்மொழிகளையும் ஐயம்தீர கற்றால், தமிழுக்கு புதுமைக் கருத்துகள் கிடைத்திடும் என்றார். இஃது, தமிழ்மொழியின் வளர்ச்சிக்கு அவர் கூறியது புதிய மார்க்கமது. மேலும், தமிழ்! தமிழ்! தமிழ்! என்று தமிழை வளர்ப்பதையே கடமையாகக் கொள். புதிய புதிய செய்தி, புதிய புதிய யோசனை, புதிய புதிய சிந்தனை, புதிய புதிய உண்மை, புதிய புதிய இன்பம் என்று தமிழ் வளர்ந்துகொண்டே இருக்க வேண்டும். தரமான நூல்களால் தமிழ் செழுமையடைய வேண்டும் என்கிறார். சக எழுத்தாளரின் சிந்தனையும் செயலும் எவ்வாறு அமைய வேண்டும் எனக் கூறுவதிலிருந்து பாரதியின் மொழிபற்றினை அவர்தம் கடிதத்தின் வாயிலாக விளங்கிக்கொள்ள முடிகிறது.

- **சமூகப்பற்று:** கவிதை என்பது சமுதாயத்தின் காலக்கண்ணாடி. அது, பசலை என்ற பகடையில் சிக்கிக்கொள்ளாமல், சமூகத்தின் அத்துணை நிகழ்வுகளையும் படம்பிடித்துக் காட்ட வேண்டும். மேலும் அது, நிறைகுறைகளை தராசு போல அளவிட வேண்டும். சிதைந்த சமூகத்தை சீர்செய்திட வேண்டும். அதனால்தான் பாரதி, தமிழ்நாடு வாழ்க என்றெழுது - நோய்கள் தீர்க்க நீ எழுது - தமிழ்ப் பள்ளிகள் மலிக என்றெழுது - கலைகள் செழிக்க நீ எழுது - சங்கீதம், சிற்பம், எந்திரம், பூமிநூல், வானநூல் பெருக நீ எழுது - தொழில்கள் பெருகவும் வியபாரம் வளரவும் நீ எழுது என்கிறார். மேலும், ஆணும் பெண்ணும் ஓருயிரின் இரு தலைகள். அவை, ஒன்றிலொன்று தாழ்ந்ததில்லை. பெண்ணை அடிமை செய்தவன், தன் கண்ணைக் குத்திக்கொண்டவனாவான் என்றெழுது எனக் கூறுவதிலிருந்து அவரின் சமூகப்பற்றினை அவர்தம் கடிதத்தின் வாயிலாக புரிந்துகொள்ள முடிகிறது.

- **முடிவுரை:** தன் இனத்தையும் மொழியினையும் பாடாத கவிதை வேரில்லாத மரம் கூடில்லாத பறவை போன்றது என்பார்கள். அதைத்தான் பாரதியும் தம் இலக்கியங்களின் வாயிலாக செய்திருக்கிறார் என்பதை தம்பி நெல்லையப்பருக்கு எழுதிய கடிதத்தின் வாயிலாக அறிந்துகொள்ள முடிகிறது.

**3. தமிழின் சீரிளமைத் திறம் வியந்து கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக.**

- **முன்னுரை:** தமிழ்மொழி நம் அடையாளம். நம் பண்பாட்டின் நீளம். அது, தோன்றிய காலம்தொட்டே மக்களால் பேசப்பட்டும் எழுதப்பட்டும் வருகிறது. அத்தகைய சிறப்புக்குரிய தமிழினை மரபுக் கவிதையில் சிறப்பித்த சிற்பியின் காட்சி நயத்தை இங்கு காண்போம்.

- **செந்நிறத்து பூக்காடு:** சிவந்த கதிர்களை உடைய சூரியன், மாலை நேரத்தில் மலைகளுக்குப்பின்னால் தன் தலையைச் சாய்த்து மறைவான். அவ்வேளையில் சூரியக்கதிர்கள்பட்டு, வானமெல்லாம் செந்நிறமாக் காட்சியளிக்கும். அக்காட்சியினை கற்பனைநயத்தோடு கூற எண்ணியக் கவிஞர் சிற்பி, 'சிவந்த வானத்தை - செந்நிறத்துப் பூக்கள் நிறைந்த காடு' என்றே வர்ணிக்கிறார். அதுபோன்றே, உழைத்துழைத்து சிவந்துபோன கைகளையுடைய தொழிலாளர்களின் மீதுள்ள

முத்துமுத்தான வியர்வைத் துளிகளை வியந்து பாட, 'தமிழின் துணை வேண்டும்' என்கிறார். உயர்வானவற்றை உயர்வான பொருட்களைக் கொண்டே சிறப்பிக்க வேண்டும் என்ற உயர்ந்த கருத்தினை நம்மால் இங்கு அறிந்துகொள்ளமுடிகிறது.

- **பழமையான தென்தமிழ்:** 'பாண்டியரின் சங்கத்தில் கொலுவிருந்தாய்' என்ற வரியின்மூலம், காலம் கடந்த ஆண்டுகளுக்கு முன்னால் தோன்றிய பழமையான மொழிஇது என்பதனை விளங்கிக்கொள்ள முடிகிறது. அங்கு, தமிழே ஆட்சி மொழி. அதிகாரத்தின் மொழி. இதை, உணர்த்துவதாகவே கவிஞர் சிற்பி அவ்வரிகளை எடுத்தாண்டுள்ளார்.
- மக்களுக்காகவே தன்னுடைய செல்வங்களை, கொடுத்துதவிய வள்ளல்கள் வாழ்ந்த பூமி இது என்பதனை உணர்ந்துகொள்ள முடிகிறது. அரசர்களும் அன்னைத்தமிழின் அடியவர்களாக திகழ்ந்தார்கள் என்பதனை விளக்கிடவே, இவ்வரிகளை கவிஞர் சிற்பி எடுத்தாண்டுள்ளார்.
- **முடிவுரை:** பழமையான மொழி என்றாலும் அதன் சீரிளமை போற்றுதலுக்குரியது. என்றென்றும் அழியாமல் தன்னைத்தானே அது புதுப்பித்துக்கொள்கிறது. தமிழ் மொழியின் அத்தகைய சிறப்பானது என்றும் வியத்தலுக்குரியதே என்கிறார் கவிஞர் சிற்பி.

**4. சொல்லோவியங்கள் (கவிதை) என்னும் நூல் உங்கள் பள்ளி ஆசிரியரால் எழுதப்பட்டு உங்கள் பள்ளியில் வெளியிடப்படுகிறது. அவ்வெளியீட்டு விழாவிற்கான நிகழ்ச்சி நிரலை உருவாக்கி, நன்றியுரை ஒன்றை எழுதுக.**

**சொல்லோவியங்கள்**
**(கவிதை)**
**நூல் வெளியீட்டு விழா**

**நாள்: 05.11.2020, 5:00 (பி.ப)**
**இடம்: அ.மே.நி.பள்ளி - எலப்பாக்கம்.**

**நிகழ்ச்சி நிரல்:**

- தமிழ்த்தாய் வாழ்த்து (மாணவர்கள்)
- குத்துவிளக்கேற்றல் (திருமதி.தமிழரசி)
- வரவேற்புரை (தலைமையாசிரியர்)
- நூலினை வெளியிட்டு பேருரை (கவிஞர்.வைரமுத்து)
- வாழ்த்துரை (கவிஞர்.யுகபாரதி)
- கருத்துரை (கவிஞர்.பா.விஜய்)
- நன்றியுரை (திரு.லோகநாதன்)
- நாட்டுப்பண் (மாணவர்கள்)

அனைவருக்கும் கவி வணக்கம்! என்னுடைய சொல்லோவியங்கள் என்ற கவிதை நூல் வெளியீட்டு விழாவிற்கு வருகைதந்து, நூலினை வெளியிட்டு, பேருரை ஆற்றிய கவித்திரு.வைரமுத்து அவர்களுக்கும், வாழ்த்துரை நல்கிய கவித்திரு.யுகபாரதி அவர்களுக்கும், கவிதையினை நூலாய்வு செய்து கருத்துரை வழங்கிய கவித்திரு.பா.விஜய் அவர்களுக்கும், எம்பள்ளியின் தலைமையாசிரியருக்கும், ஆசிரிய பெருமக்களுக்கும், அலுவலக ஊழியர்களுக்கும், கிராம பொதுமக்களுக்கும், மற்றுமுள்ள மாணவ மாணவியருக்கும் உளமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

நன்றி, வணக்கம்!

**5. நெகிழி தவிர்த்து நிலத்தை நிமிர்த்து என்னும் தலைப்பில் சுற்றுச்சூழல் ஆர்வலர் பசுமைதாசனாருடன் நீங்கள் நடத்திய கற்பனைக் கலந்துரையாடல் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.**

நான் : ஐயா, வணக்கம்! தங்களைச் சந்தித்தது மகிழ்ச்சியாக உள்ளது.

பசுமைதாசர் : வணக்கம். வா..... யாழினி. என்ன பணி செய்கிறாய்?

நான் : தற்பொழுது பத்திரிக்கை துறையில் பணியாற்றி வருகிறேன் ஐயா. தங்களிடம் ஒரு விளக்கத்தினைப் பெற்றுச் செல்ல வந்துள்ளேன்.

பசுமைதாசர் : ம்ம்ம்ம்......... கேளுங்கள்.

நான் : நெகிழி என்றால் என்ன? விரிவாகச் சொல்லுங்கள் ஐயா.

பசுமைதாசர் : 'பிளாஸ்டிக்' என்று நாம் குறிப்பிடும் பொருள்தான் நெகிழி. பிளாஸ்டிக்கோஸ் என்ற கிரேக்க சொல்லிருந்து பிளாஸ்டிக் என்ற சொல்லானது பிறந்தது. வளைந்து கொடுக்காமலும் உடைந்து போகாமலும் இருக்கும் பொருள்தான் இந்த பிளாஸ்டிக் என்னும் நெகிழி. சில காலம் நமக்கு தேவையான பொருளாக இருந்து, தேவையற்ற காலத்தில் திடக்கழிவாக மாறி, இந்த உலகை அழித்துவரும் நிகழ்வுலக ராட்சசன் அது.

நான் : ஆனால், ஐயா......... நெகிழிப் பொருட்களின் பயன்பாடு அதிகரித்துவிட்டதே!

பசுமைதாசர் : உண்மைதான் யாழினி. நெகிழியால் கிடைத்திடும் பயன் சிறியது என்றாலும் கேடு பெரியது. உணவு உண்ணும் தட்டிலிருந்து நீர் பருகும் குவளைவரை அனைத்தும் நெகிழிப் பொருட்களால் ஆனவையாகவே உள்ளது. இவையனைத்தும் பயன்படுத்திவிட்டு, அப்படியே வீசிவிட்டுச் செல்வதால், பெருங்குப்பைக்காடு உருவாகிறது. மேலும், மட்காத இந்த நெகிழிக் குப்பையால் மண்வளமும் அழிகிறது - நிலத்தடி நீர்மட்ட உயர்வும் குறைகிறது.

நான் : நெகிழியால், இவ்வளவு பிரச்சனை உள்ளதா? ஐயா.

பசுமைதாசர் : இன்னும் உள்ளது கேள். மட்காதது என எரித்தால், எளிதில் எரிவதும் இல்லை. அவ்வாறு எரிந்தாலும் CFC-னை வெளியிட்டு ஓசோன் படலத்தை பாழாக்குகிறது. இதனால் பல நோய்களும் வருகிறது.

நான் : இதற்கெல்லாம் என்னதான் வழி ஐயா.

பசுமைதாசர் : இதற்கெல்லாம் ஒரே வழி. நெகிழிப் பொருட்களின் பயன்பாட்டை மக்கள் அறவே தவிர்க்க வேண்டும். மேலும், கண்ட கண்ட இடங்களில் பரவிக்கிடக்கின்ற நெகிழிப்பொருட்களைச் சேகரித்து, அழித்திட வேண்டும். மறுசுழற்சிக்கு உதவாத நெகிழிப் பொருட்களின் உற்பத்திக்கு, அரசு கட்டாயம் தடைவிதிக்க வேண்டும். இவற்றிக்கெல்லாம் முன்னெடுப்பாக, சமூக விழிப்புணர்வினை மக்களிடத்தில் ஏற்படுத்த வேண்டும்.

நான் : விழிப்புணர்வு பலன் தருமா? ஐயா!

பசுமைதாசர் : நிச்சயமாக...... தன் வீட்டையும் இந்த உலகையும் மாற்றிடும் வல்லவர்கள் குழந்தைகள். அக்குழந்தைகளிடத்திலிருந்து இந்த விழிப்புணர்வை முதலில் ஏற்படுத்தினால், நாளைய உலகம் நல்லதாகவே அமையும்.

நான் : மிகச்சிறப்பு ஐயா... நெகிழி சார்ந்த பல கருத்துகளைக் கூறி, என்னைத் தெளிவடையச் செய்தீர்கள். நன்றி ஐயா......

பசுமைதாசர் : நன்றி மகளே! பணி சிறக்கட்டும்...... வாழ்த்துகள்.

**6. நெடுநல்வாடையில் நக்கீரர் காட்டும் மழைக்கால வருணனையைச் சொல்லில் வடிக்க.**

- **முன்னுரை:** நெடுநல்வாடையில் நக்கீரர் காட்டும் கூதிர்க்காலத்து மழைப் பொழிவைப் பற்றியும் முல்லை நில மக்கள் குளிரால் பெற்ற துன்பத்தையும் மழைக்கால வருணனையாகக் காண்போம்.
- **புதுபெயல்:** கோவலர்கள் தங்கிருந்த மலையை வலப்புறமாக சூழ்ந்து எழுந்த மேகமானது, உலகம் குளிரும்படியாக பெருமழை பெய்தது. தாங்கள் வாழும் தாழ்வான பகுதிகளில் பெருகிய வெள்ளத்தைக் கண்டுவெறுத்த கோவலர்கள், தங்களின் ஆடு, மாடு, எருமை முதலிய நிரைகளை மேடான இடத்தை நோக்கி ஓட்டிச்சென்றார்கள்.
- **வாழ்வியல் மாற்றம்:** பெருமழையால் கோவலர்கள் சூடியிருந்த காந்தள் மலர்கள் கசங்கின. மலையையே நடுங்கச்செய்த குளிரிலிருந்து தங்களை பாதுகாத்துக்கொள்ள, பலருடன் ஒன்றுசேர்ந்து, கொள்ளி நெருப்பினால் கைகளை சூடேற்றிக்கொண்டார்கள். ஆனாலும், அவர்களின் பற்கள் குளிரால் நடுங்கிக்கொண்டிருந்தன.
- **விலங்குகளின் துன்ப நிலை:** குளிரின் மிகுதியால் விலங்குகள் மேய்ச்சலை மறந்தன. குரங்குகள் நடுங்கின. மரங்களில் தங்கியிருந்த பறவைகள் நிலத்தில் வீழ்ந்தன. பசுக்கள் பாலுண்ண வந்த கன்றுகளைத் தவிர்த்தன. அந்த கூதிர்க்கால இரவுப் பொழுதில், குன்றே குளிரால் நடுங்குவதாக இருந்தது.
- **முடிவுரை:** ஐப்பசி - கார்த்திகை மாதங்கள் குளிர்காலங்கள். அக்காலத்தில் முல்லை நில மக்களும் விலங்குகளும் பறவைகளும் குளிரால் பெற்ற துன்பத்தினை நக்கீரரின் வருணனையுடன் கண்டோம்.

**7. பொறுப்புணர்ச்சியின்றி இருந்த ஊரைத் தன் பொறுப்புணர்வால் மாற்றிய மருதனின் பண்பு நலத்தை விவரிக்க.**

- **முன்னுரை:** உத்தமச்சோழன் (செல்வராஜ்) அவர்களின் படைப்பாக உருவான சிறுகதையே முதல்கல். அச்சிறுகதையின் நாயகனான மருதன், பொறுப்புணர்ச்சியின்றி இருந்த ஊரைத் தன் பொறுப்புணர்ச்சியால் எவ்வாறு மாற்றியமைத்தார் என்பதைப் பற்றி இக்கட்டுரையில் நீண்டு காண்போம்.
- **மூழ்கும் பயிரும் மருதனின் பதற்றமும்:** முற்றிய நாற்றை நட்டு, அதிகப்படியாக உரத்தினைப் போட்டு, எப்படியாவது சம்பா செய்துவிடலாம் என எண்ணியிருந்தனர் காவிரியின் கடைமடைக்காரர்கள். ஆனால், அதிக மழையின் காரணமாகப் பயிர்கள் எல்லாம் தண்ணீரில் மிதக்கும் நிலைக்கு வந்துவிட்டது. வளவனாற்றின் வடகரையில் நின்று, வடக்கே பார்த்த மருதனுக்குப் பதற்றம் அதிகமாகிவிட்டது. காரணம், பெய்த மழை போதாது என்று, வானிலை அறிக்கையில் பலத்த மழை பெய்யும் என்று அறிவிப்பு வந்ததினால்.
- **வழி பிறந்தது - விழி மலர்ந்தது:** மறுபடியும் பெருமழையா! என்ற வருத்தத்தோடும் சிந்தனையோடும் வடிவாய்க்காலைப் பார்த்துக்கொண்டிருந்தான் மருதன். வளவனாற்றின் வடிவாய்க்காலோ ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் அமைக்கப்பட்டது. சுமார், மூன்று மைல் நீளம் கொண்டது. காட்டமணக்குச் செடிகள் புதர்போல் வளர்ந்து, வாய்க்காலை ஆக்கிரமிப்புச் செய்திருப்பதினால், தண்ணீர் வடிய வழியின்றி, பயிர்களெல்லாம் மூழ்கின. இந்தப் பேய்ச்செடிகளைப் பிடுங்கி எறிந்தாலே, உபரி நீர் வடியத் தொடங்கிவிடும். வயல்களில் தேங்கியுள்ள நீர் வடிந்தோடுவது மட்டுமின்றி, கிராமமும் தப்பித்துக் கொள்ளும் என்ற சிந்தனை மருதனின் உள்ளத்தில் தோன்றியது. பயிரையும் ஊரையும் காப்பாற்ற வழி கிடைத்துவிட்டது என எண்ணி, மகிழ்ச்சி அடைந்தான் மருதன்.
- **உதவி நாடலும் உதவா மக்களும்:** தனக்கு வந்த யோசனையை, வடிவாய்க்காலில் வலைபோட்டு மீன் பிடித்துக் கொண்டிருந்த மாரிமுத்துவைப் பார்த்துக் கூறத்தொடங்கினான் மருதன். ஆனால், மீன் பிடிப்பதிலே கண்ணாயிருந்தான் மாரிமுத்து. பொறுமையிழந்த மருதன் அங்கிருந்து கிளம்பி, கிழவர் காளியப்பனைப் பார்க்கச் சென்றான். ஊரிலேயே வசதி படைத்தவர் கிழவர் காளியப்பன்தான். அவர் சொன்னால் ஊரே கேட்கும். அதனால், தனக்கு வந்த யோசனையை அவரிடமும் கூறினான் மருதன். சிறிதுநேரம் யோசித்த கிழவர், மருதனால் நமக்கும் பண இழப்பு ஏற்படுமோ என எண்ணி, நாளை மகளின் ஊர்வரை செல்ல இருக்கிறேன், ஓரிரு நாட்கள் பொறுத்து பார்க்கலாம் எனக்கூறி தட்டிக்கழித்தார். பின், அந்த ஊரின் முதல் பட்டதாரி பிரேம்குமாரைப் பார்த்து தனது யோசனைக் கூறினான். அவனும், பல வேலைகளைக் காரணம் காட்டித் தப்பித்தான். இப்படியாக ஊரில் உள்ள ஒவ்வொருவரும் ஒவ்வொரு காணத்தினை கூறி, வர மறுத்துவிட்டார்கள். மருதனோ, மனம்சோர்ந்து வீடு சேர்ந்தான்.
- **தன் கையே தனக்குதவி:** மனமும் உடம்பும் சோர்ந்து வீடு திரும்பிய மருதனை, அவன் மனைவி அல்லி, பதற்றமாய்ப் பார்த்தாள். குடிக்கச் சுடுகஞ்சி கொடுத்தாள். காரணத்தைக் கேட்டாள். பின், சிரித்தாள். 'நமக்குனு சக்கரகுழி நிலம் நமக்கில்லை, இந்த ஊர் எப்படிபோனா நமக்கென்ன' என மருதனைக் கடிந்துகொண்டாள். அவசர அவசரமாய் உணவினை அள்ளி உண்டான். ஊமையாய்ப் படுத்துவிட்டான். இரவு முழுவதும் அவனால் தூங்க முடியவில்லை. அதிகாலையில் எழுந்தான், வடிவாய்க்காலினைநோக்கி ஓடினான். இடுப்பளவு தண்ணீரில் தன்னந்தனியே நின்றபடி, காட்டமணக்குச் செடிகளை அறுத்து எறியத்தொடங்கினான்.
- **ஊரைக் கூட்டிய உழைப்பாளி மருதன்:** பக்கத்தில் படுத்திருந்த கணவனைக் கணவில்லை என தேடித்தொடங்கினாள் அல்லி. பின், ஏதோவொரு சிந்தனையில் வடிவாய்க்காலை நோக்கி ஓடினாள். அங்கு, தனியே காட்டாமணக்குச் செடிகளை அகற்றிக் கொண்டிருந்த மருதனை பார்த்ததும் கலங்கினாள். பின், மருதன் அறுத்துக்கொடுப்பதை கரையில்கொண்டு சேர்த்தாள். இருவரின் செயலைப் பார்த்த மாரிமுத்துவும், மீன் பிடிப்பதை விட்டுவிட்டுக் கை கொடுக்க முன்வந்தான். தன் மகள் ஊருக்குப் புறப்பட்டு வில்லுவண்டியில் போய்க் கொண்டிருந்த கிழவர் காளியப்பனின் பார்வை, வடிவாய்க்கால் பக்கம் திரும்பியது. வண்டியிலிருந்து இறங்கி, இடுப்பில் துண்டைக் கட்டிக்கொண்டு, வாய்க்காலில் இறங்கினார். செய்தி ஊருக்குப் பரவி, ஒவ்வொருவராக வரத் தொடங்கினர்.
- **முடிவுரை:** மருதனின் பொறுப்புணர்வால், தன் மனைவி அல்லி, மாரிமுத்து, கிழவர் காளியப்பன் மற்றும் ஊர் பொதுமக்கள் என அனைவரையும் ஒன்றிணைத்து, பயிருக்கும் ஊருக்கும் நேர இருந்து ஆபத்தினை அகற்றினான்.

**8. புயல் தாக்கத்தினால் குடியிருப்புகளுக்கு அருகில் அறுந்துகிடக்கும் மின் இணைப்புகளைச் சரிசெய்யக்கோரி உங்கள் ஊர் மின்வாரியப் பொறியாளர்களுக்குக் கடிதம் எழுதுக.**

விடுநர்: நெடுங்கல்
05.11.2022

எ.கோமகள் யாழினி,
எண்: 143,
நெடுங்கல் கிராமம்,
கரசங்கால் அஞ்சல்,
மதுராந்தகம் வட்டம் - 603 310.

பெறுநர்:

உதவிப் பொறியாளர் அவர்கள்,
தமிழ்நாடு மின்சார வாரியம் - எலப்பாக்கம் கிளை,
எலப்பாக்கம் கிராமம் (ம) அஞ்சல்,
மதுராந்தகம் வட்டம் - 603 201.

மதிப்பிற்குரிய ஐயா,

பொருள்: மின் இணைப்புகளை சரிசெய்யக் கோருதல் - சார்ந்து.

வணக்கம்! எங்கள் சுமார் 500 குடியிருப்புகள் உள்ளன. சமீபத்தில் ஏற்பட்ட 'கஜா' புயலின் காரணமாக எங்களின் குடியிருப்புப் பகுதியில் உள்ள மின் இணைப்புகள் துண்டிக்கப்பட்டும், பல இடங்களில் அறுந்தும் கிடக்கின்றன. எங்களின் நெடுங்கல் கிராமமே கடந்த 10 நாட்களாக இருளில் மூழ்கிக்கிடக்கிறது. இங்குள்ள குழந்தைகளும் முதியவர்களும் நோயாளிகளும் பள்ளிப் பிள்ளைகளும் செய்வதறியாது தவிக்கிறார்கள். எனவே, தயவுகூர்ந்து, அறுந்துகிடக்கும் மின் இணைப்புகளை சரிசெய்து கொடுக்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

நன்றி!!!

இப்படிக்கு
ஊர் பொதுமக்களின் சார்பாக
(எ.கோமகள் யாழினி)

**9. குடும்பம் என்னும் சிறிய அமைப்பிலிருந்தே மனித சமூகம் என்னும் பரந்த அமைப்பு கட்டமைக்கப்படுகிறது - எவ்வாறு? விளக்குக.**

- **குடும் மனித சமூகத்தின் அடிப்படை அலகு குடும்பம்:**
  - பம் என்னும் சிறிய அமைப்பிலிருந்தே மனித சமூகம் கட்டமைக்கப்படுகிறது. குடும்பம் என்ற அமைப்பானது குலம், கூட்டம், பெருங்குழு, சமூகம் என விரிவடைகிறது. குடும்பம் என்ற அமைப்பினை ஏற்படுத்திட திருமணம் அச்சாரமாய் உள்ளது. எனவேதான், குடும்பமும் திருமணமும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் என்கிறார்கள்.
  - குடம்பை, குடும்பு, கடும்பு என்று சங்க இலக்கியத்தில் அழைக்கப்பட்டாலும் திருக்குறளில்தான் குடும்பம் என்ற சொல் முதன்முதலில் பயின்றுவந்துள்ளது. குடும்பு என்ற சொல்லானது அம் என்ற விகுதியினைப்பெற்று குடும்பம் ஆனது. குடும்பு என்றால் கூடி வாழ்தல் என பொருள்படும்.
  - தொல்காப்பியத்தில் இல், மனை போன்ற சொற்கள் குடும்பத்தினை குறித்திட பயன்படுத்தப்பட்டுள்ளது. மனைவியின் இல்லம் தன்மனை எனவும், கணவனின் இல்லம் நும்மனை எனவும் அழைத்தார்கள்.
- **தாய் மற்றும் தந்தைவழிச் சமூகம்:**
  - சங்க காலத்தில் கணச் சமூகத்திற்கு தாயே தலைமை தாங்கினாள். குலத்தொடர்ச்சிக்கு தாயே அச்சாரம் என்பதினால், பெண் குழந்தைகளின் பிறப்பு பெரிதும் விரும்பப்பட்டது. மேலும், சொத்துரிமை வழங்கப்பட்டிருந்தது. பெண்கள், திருமணத்திற்குபின்பும் தன் இல்லத்திலேயே தங்கி, குடும்பத்தினை நடத்திடும் தாய முறை இருந்ததை பதிற்றுப்பத்தின்மூலம் அறிந்துகொள்ள முடிகிறது.

- சங்காலத்தின் இடையில் தாய்வழிச் சமூகமுறை அழிந்து, தந்தைவழி சமூகமுறை வேரூன்றத் தொடங்கியது. இக்காலகட்டத்தில் பெண்களுக்கான சொத்துரிமை முழுமையாக மறுக்கப்பட்டு, ஆடவரை சார்ந்துவாழும் நிலைக்கு தள்ளப்பட்டார்கள். சிலம்புகழி நோன்பு முடிக்கப்பட்டு, பெண்கள் கணவனின் இல்லத்திலேயே தங்கி வாழும்நிலை இக்காலத்தில்தான் தோன்றியது.

- **தனிக்குடும்பம் - கூட்டுக் குடும்பம்:**
  - சங்க காலத்தின் தொடக்கத்தில், 'முதல்நிலை உறவினர்கள்' மட்டுமே இனம் காணப்பட்டனர். கணவன், மனைவி, மகன் ஆகியோருடன் பெற்றோரில் ஒருவர் சேர்ந்துவாழும் விரிந்தக் குடும்பமே(நேர்வழி), பின்னாளில் கூட்டுக் குடும்பத்திற்கு அடித்தளமிட்டது. அதைத் தொடர்ந்து, செவிலியும் அவள் மகள் தோழியும் குடும்பத்தின் அங்கமானதினால், கூட்டுக் குடும்பம் என்ற அமைப்பு, சங்க காலத்தின் இடைநிலையில் புதுவிதமான கட்டமைப்பினைப் பெற்றுவிட்டது. மேலும், இல்லற வாழ்வின் இறுதி காலத்தில், பெருமையும் அறமும் நிறைந்த சுற்றத்தோடு கூடிவாழ்வதே சிறந்தது என்றெண்ணி, ஒன்றிணைந்து வாழத்தொடங்கியதின் விளைவாக கூட்டுக் குடும்பங்கள் புத்துயிர் பெற்றனர். பண்டைய விரிந்த குடும்பத்தின் நீட்சியாகவே, கணவன், மனைவி, பிள்ளைகள், கணவனின் தாய் தந்தை, கணவனின் உடன்பிறந்தவர்கள், அவர்களின் மனைவி பிள்ளைகள் என்ற மிகப்பெரியதொரு கூட்டுக்குடும்ப கட்டமைப்பினை இன்றும் காணமுடிகிறது.

**10. பண்பின் படிமமாகப் படைக்கப்பட்ட இராமன், பிற உயிர்களுடன் கொண்டிருந்த உறவு நிலையைப் பாடப்பகுதி வழி நிறுவுக.**

- **முன்னுரை:** கம்பர், தான் படைத்த காப்பியத்தின் தலைவனான இராமனை, பண்பின் பிறப்பிடமாகவே படைத்துள்ளார். வேடன், பறவை, முதியவள், வானரம், எதிரின் தம்பி என யாவரிடத்திலும் உள்ளார்ந்த அன்பு கொண்டவனாய் இராமனின் கதாப்பாத்திரம் விளங்குகிறது. அக்கதாப்பாத்திரத்தின் அன்புசார் செயல்களைப் பற்றி இக்கட்டுரையில் நீண்டு காண்போம்.
- **வேடன் குகன்:** சிற்றன்னையின் சூழ்ச்சியினால் காட்டிற்கு சென்ற இராமன், கங்கைக் கரையினைக் கடந்துசென்றிட உதவி செய்தவன் வேடன் குகன். அவ்வுதவின் பலனாக, வேடன் குகனைத் தன் சகோதரனாக ஏற்றுக்கொண்டான் இராமன்.
- **தந்தைக்கு இணையான சடாயு:** சீதையை சிறையெடுத்துச் சென்ற இராவணனுடன் சண்டையிட்டு சிறகுகளை இழந்து காயம் அடைந்த சடாயு, நடந்ததை இராமனிடம் கூறியப்பின் இறந்தான். தன் தந்தை தசரதனின் நண்பனாகிய சடாயுவை, தன்னுடைய தந்தையாகவே எண்ணி இறுதிச் சடங்குகளைச் செய்து முடித்தான் இராமன்.
- **பக்தி நிறைந்த சவரி:** இராமனிடத்தில் மிகுதியான அன்பும் பக்தியும் கொண்டவள் சவரி. அச்சவரியின் விருந்து உபசரிப்பின்மூலம், அவள் மேற்கொண்ட தவத்தினை அறிந்துகொண்டான் இராமன். பின், 'இவ்வளவு காலம் நீ துன்பம் ஏதுமின்றி நலமுடன் இருந்தாயல்லவா? என, தன் தாயினைக் கேட்பதுபோல் பரிவுடன் கேட்டு நட்பு பாராட்டினான்.
- **வானரம் சுக்ரீவன்:** கிட்கிந்தையில் அனுமனால் அறிமுகம் செய்யப்பட்டவனும், கதிரவனின் புதல்வனுமாகிய சுக்ரீவன் இடத்தில் 'உன் கிளை இனி என் கிளை, என் சுற்றம் இனி உன் சுற்றம்' எனக் கூறி, தன் சகோதரனாக ஏற்றுக்கொண்டான் இராமன்.
- **எதிரியின் தம்பி:** சீதையை சிறையெடுத்தது முறையோ என வினவி, தன் அண்ணன் இராவணனின் கோபத்திற்கு ஆளாகி, இராமனிடம் அடைக்கலம் புகுந்தான் வீடணன். அவனையும் தன் சகோதரனாகவே ஏற்றுக்கொண்டு, அன்பு செலுத்தினான் இராமன்.
- **முடிவுரை:** 'தன்னைப்போல் பிறரையும் நினை' என்ற உயர்ந்த பண்பினை உள்ளத்தில் கொண்டதால்தான் பறவை, விலங்கு, இளையவர், முதியவர், பகைவர் என்ற வேறுபாடுகள் அற்று அனைவரிடத்திலும் அன்பு செலுத்தினான் இராமன்.

**11. 'உரிமைத் தாகம்' கதையில் சகோதரர்கள் இருவரும் ஒன்றிணையாமல் இருந்திருந்தால்......... கதையைத் தொடர்ந்து எழுதி முடிக்க.**

- **முன்னுரை:** பூ.மாணிக்கவாசகம் என்ற பூமணியின் சிறந்த படைப்புகளில் ஒன்று உரிமைத்தாகம். அச்சிறுகதையில் இடம்பெற்றுள்ள கதையின் நாயகர்களான முத்தையாவும் வெள்ளைச்சாமியும் இணையாமல் இருந்திருந்தால், என்ன நடந்திருக்கும் என்பதை கற்பனை நயத்தோடு தொடர்வோம்.


Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com

- **நம்பிக்கைக் கிரையம்:** மேலூர் பங்காருசாமியிடம் வாங்கிய 200 ரூபாயை திருப்பிக்கொடுக்க முடியாததால், உங்கள் தம்பி வெள்ளைச்சாமி மேலக்காட்டின் புன்செய் நிலத்தில் ஒரு பகுதியை நம்பிக்கைக் கிரையம் எழுதிக் கொடுத்து இருக்கிறானாம் என்று முத்தையனிடம் முறையிட்டாள் மூக்கம்மாள். முத்தையனுக்கு மனசு துருதுருத்தது.
- **பாகத்தோடு பாசமும் பிரிந்தது:** முத்தையனுக்கு தம்பி வெள்ளைச்சாமிமீது பெரியதாக கோபம் ஒன்றுமில்லை. ஆனால், சொத்தைப் பிரித்தபோது 'நீயெல்லாம் எனக்கு அண்ணனாக்கும்' என வெள்ளைச்சாமி கூறிய வார்த்தை, பாகத்தோடு பாசத்தையும் பிரித்துவிட்டது. தந்தை இறந்த நாளிலிருந்து தோளில் சுமந்து வளர்த்த கதையெல்லாம் நினைத்துப் பார்த்து பார்த்து மனம் கசந்து போனான் முத்தையா. வெள்ளைச்சாமி பேசிய வார்த்தைகளும் திருமணத்திற்குபின் அவள் மனைவியின் பேச்சைக் கேட்டுகொண்டு, அவன் நடந்தகொண்ட விதமும் பிடிக்காமல் போனதினால் முத்தையன் ஒதுங்கிக்கொண்டான்.
- **உறவினர்களின் உதவியை நாடல்:** அண்ணனுடன் ஏற்பட்ட மனக்கசப்பை மனதிற்குள் வைத்துக்கொண்ட வெள்ளைச்சாமி, அண்ணனோடு பேசுவதை முற்றிலுமாக விட்டுவிட்டான். அண்ணனின் உதவி கிடைக்காது என உறுதியாகத் தெரிந்த நிலையில் மற்ற உறவினர்களின் உதவியை நாடினான். ஆனால், அவர்களோ, ஆளுக்கொரு காரணம் சொல்லி மறுத்துவிட்டனர்.
- **யாரும் முன்வரவில்லை:** உறவினர்களின் உதவி கிடைக்காததால் நிலத்தை மீட்க முடியாமல் தவித்தான் வெள்ளைச்சாமி. கடைசியில் நிலம் பங்காருசாமியின் கைகளுக்குப் போனது. பங்காருசாமியின் ஆட்களோ நிலத்தை உழுத் தொடங்கிவிட்டார்கள். வெள்ளைசாமிக்கு உதவி செய்ய யாரும் முன்வரவில்லை.
- **ஊரைவிட்டு செல்லும் நிலை:** தன் நிலம் பறிபோனதாலும், தனக்காக பங்காருசாமியிடம் பேசுவதற்கு ஆளில்லாத காரணத்தினாலும் மனம் நொந்துப்போனான் வெள்ளைச்சாமி. தன் நிலத்தில் வேறு ஒருவன் உழுவதைக்காணப் பொறுக்காமல், தன் மனைவியுடன் ஊரைவிட்டே செல்லும் நிலைக்குத் தள்ளப்பட்டான்.
- **முடிவுரை:** பகையால் சகோதரர்கள் இருவரும் ஒன்றிணையாமல் போனார்கள். அண்ணனின் பேச்சை மதிக்காததால் நிலமும் கையைவிட்டுப் போனது. கடைசியில் முன்னேறுவதற்கும் பிழைப்பதற்கும் வழியின்றி வேறு ஊருக்குச் செல்லும் அவலநிலை ஏற்பட்டது.

**12. செய்ந்நன்றியறிதலே அறம் என்பதை வாயுறை வாழ்த்தின் துணைகொண்டு நிறுவுக.**

- **முன்னுரை:** வள்ளுவனைப் பெற்றதால் பெற்றதே புகழ் வையகம் என்பார் பாரதிதாசன். அவரின் போற்றுதலுக்குரிய திருக்குறளில் உள்ள செய்ந்நன்றியறிதல் என்னும் அதிகாரமோ 'நன்றிக்கான இலக்கணத்தையும் நன்றி மறவாமைக்கான இயல்பினையும்' எடுத்துக்கூறுகிறது. அக்கருத்துகளை இங்கு நீண்டு காண்போம்.
- நாம், ஓர் உதவியும் செய்யாத நிலையில் ஒருவர் நமக்குச் செய்த உதவிக்கு இவ்வையகமும் வானகமும் கொடுத்தாலும் ஒப்பாகாது.

  செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்
  வானகமும் ஆற்ற லரிது.
- ஆபத்துக்காலத்தில் ஒருவர் செய்த உதவி மிகச்சிறியதாக இருப்பினும், அது செய்யப்பட்ட காலத்தை நோக்கும்பொழுது, ஞாலத்தைவிட பெரியதாக இருக்கும்.

  காலத்தி னால்செய்த நன்றி சிறிதுஎனினும்
  ஞாலத்தின் மாணப் பெரிது.
- பயனை எதிர்பாராமல் ஒருவர் செய்த உதவியின் சிறப்பை ஆராய்ந்துப் பார்த்தால், அது கடலினும் பெரியதாகும்.

  பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்
  நன்மை கடலிற் பெரிது
- ஒருவர் தினையளவு உதவியைச் செய்த போதிலும் அதன் பயன் தெரிந்தவர்கள், அதனையே பனையளவு கொண்டதாகப் போற்றுவார்கள்.

  தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாகக்
  கொள்வார் பயன்தெரி வார்.


Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com

- பிறர் செய்த நன்மையை மறத்தல் கூடாது. ஆனால், பிறர் செய்த தீமையை அப்பொழுதே மறத்தல் நன்றி.

  நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது
  அன்றே மறப்பது நன்று.

- எத்தகைய அறத்தினை அழித்தவனுக்கும் அப்பாவத்தில் இருந்து நீங்க வழியுண்டு. ஆனால், ஒருவர் செய்த நன்றியை மறந்தனுக்கு அப்பாவத்தில் இருந்து நீங்க வழியில்லை.

  எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
  செய்ந்நன்றி கொன்ற மகற்கு.

- **முடிவுரை:** அறங்களில் சிறந்தது பிறர் செய்த நன்றியை மறவாது இருத்தலும் பிறருக்கும் தீமை செய்யாமல் இருத்தலுமே என்பதை வாயுறை வாழ்த்தின்மூலம் அறிந்துகொள்ளமுடிகிறது.

**13. சினத்தைக் காத்தல் வாழ்வை மேன்மைப்படுத்தும் - இக்கூற்றை முப்பால் வழி விரித்துரைக்க.**

- **முன்னுரை:** திருவள்ளுவமாலையால் போற்றிப்பாடப்பட்ட நூல் திருக்குறள். அத்திருக்குறளில் 31வது அதிகாரமாக அமைந்ததுதான் 'வெகுளாமை'. இரண்டு அடிகளில் உலகையே அளந்த முப்பாலானது, 'சினத்தைக் காத்தால் வாழ்வு மேம்படும்' என அறிவுறுத்துகிறது. அக்குறள் அறிவுறுத்திய கருத்துகளை இங்கு நீண்டு காண்போம்.
- **சினத்தைக் காப்பவர்:** தம்மிடமுள்ள சினம், செல்லும்படியாகும் மெலியவரிடத்தில் கொள்ளாமல் காப்பவரே, உண்மையில் சினம் காப்பவர்.
- **சினத்தை மறத்தல்:** தீமையான விளைவுகள் யாவும் சினத்தினாலேயே ஏற்படும் என்பதினால், 'சினம் கொள்ளுதல்' என்ற தீய பண்பை மறந்துவிட வேண்டும்.

  மறத்தல் வெகுளியை யார்மாட்டும் தீய
  பிறத்தல் அதனான் வரும்.

- **வேறுபகை இல்லை:** தம் முகமலர்ச்சியையும் அகமகிழ்ச்சியையும் அழித்திடும் சினத்தினைப் போன்றதொரு பகைவன் நமக்கு வேறு யாருமில்லை.
- **தன்னையே கொல்லும் சினம்:** ஒருவர் தன்னைக் காத்துக்கொள்ள விரும்பினால், சினம் வராமல் காத்துக்கொள்ள வேண்டும். அவ்வாறு காக்காவிட்டால் சினம் நம்மையே அழித்துவிடும்.

  தன்னைத்தான் காக்கின் சினம்காக்க காவாக்கால்
  தன்னையே கொல்லும் சினம்

- **உறவை அழிக்கும் நெருப்பு:** சினம் தன்னைச் சேர்ந்தவரையும் அழிக்கும் நெருப்பு. அது ஒருவரது சுற்றம் என்னும் பாதுகாப்புத் தெப்பத்தையும் சுட்டழிக்கும்.

  சினம்என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம்என்னும்
  ஏமப் புனையைச் சுடும்.

- **முடிவுரை:** சினத்தால் பல கேடுகள் ஏற்படுவதால், சினம் வராமல் நம்மை காத்துக்கொள்ள வேண்டும். இல்லையெனில் அது நம்மையும் நம்வாழ்வையும் சுற்றத்தையும் அழித்துவிடும் என்ற மேலான கருத்தினை குறள்வழி அறிந்துகொள்ளமுடிகிறது.

**14. 'சாலை விபத்தில்லாத் தமிழ்நாடு' - இக்கூற்று நனவாக நாம் செய்யவேண்டியன யாவை?**

- **சாலை விபத்துகளில் முதன்மை மாநிலம்:** உலகிலேயே அதிகச் சாலைப் போக்குவரத்து வசதிகளைக் கொண்ட இரண்டாவது பெரிய நாடு இந்தியா. இந்தியாவிலேயே மிகுந்த சாலை விபத்துகள் நடக்கும் மாநிலமாகத் தமிழ்நாடு இருக்கிறது. இந்தியாவில் ஏற்படும் மொத்தச் சாலை விபத்துகளில் 15 சதவீத விபத்துகள், தமிழ்நாட்டில் நடப்பது என்பது வேதனைக்குரியது.
- **சாலை விபத்துககளுக்கான காரணங்கள்:** விபத்துகள், எதிர்மாறாமல் ஏற்படுகின்றன. எனினும், மனிதத் தவறுகளே மிகுதியான விபத்துகளுக்குக் காரணங்களாக அமைகின்றன. ஒவ்வொருவரும் தாங்கள் செய்யும் தவறுகளைத் திருத்திக் கொள்வதாலும் விதிகளை முறையாகப் பின்பற்றுவதாலும் சாலை விபத்துகளைத் தவிர்க்க முடியும்.
- **இருசக்கர ஊர்தி விபத்துகள்:** தமிழ்நாட்டில் நடைபெறும் மொத்த விபத்துகளில் 25 சதவீதம், இருசக்கர வாகனங்களால் ஏற்படுகிறன்றன. எனவே, இருசக்கர ஊர்தி ஓட்டுநர்கள், அதற்கான சாலை விதிமுறைகளைக் கட்டாயம் கவனத்தில் கொள்ளவேண்டும்.
  - 18 வயது நிறைந்தவர், முறையான பயிற்சிமூலம் ஓட்டுநர் உரிமம் பெறுதல் அவசியம்.

- பள்ளி மாணவர்கள், இருசக்கர வாகனங்கள் ஓட்டுவது சட்டப்படி குற்றமாகும்.
- இருசக்கர வாகன ஓட்டிகள், தலைக்கவசம் கட்டாயம் அணிதல் வேண்டும்.
- கைப்பேசியில் பேசிக்கொண்டே வண்டிகளை ஓட்டக்கூடாது.

- **விழிப்புணர்வு இல்லாததும் விபத்துகளுக்கு காரணமாகும்:** சாலை விதிகள் குறித்த விழிப்புணர்வு இல்லாததும், விபத்துகள் ஏற்படக் காரணங்களாக அமைகின்றன.
  - ஓட்டுநரின் கவனக் குறைவு.
  - போதிய பயிற்சியின்மை.
  - மிகுதியான ஆட்களையோ சரக்குகளையோ ஏற்றிச் செல்லுதல்.
  - தொடர்வண்டி இருப்புப் பாதைகளைக் கவனிக்காமல் கடப்பது.
  - ஓட்டுநர்கள், இத்தகைய குறைகளைத் தவிர்ப்பார்களேயானால், விபத்துகள் நிகழாமல் பாதுகாக்கலாம்.
- **பள்ளி மாணவர்களிடம் காணப்படும் குறைபாடுகள்:** பள்ளி மாணவர்களிடையே சாலை விதிகள் மற்றும் விபத்துகளைத் தடுப்பது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். சாலை விதிமுறை குறித்த விழிப்புணர்வு இல்லாத நிலையில்,
  - மாணவர்கள் சிலர் சாலைகளில் விளையாடுவது.
  - சாலைப் போக்குவரத்து ஊர்திகளைக் கவனிக்காமல் திடீரென்று கடப்பது.
  - நடைமேடையில் செல்லாமல், சாலையின் நடுவில் நடந்து செல்வது.
  - வேகமாக செல்லும் வண்டிகளின் பின்புறத்தைப் பிடித்துக்கொண்டு, மிதிவண்டியில் பயணிப்பது.
  - ஓடும் பேருந்தில் ஏறுவது - இறங்குவது.
  - பேருந்தில் தொங்கியபடி பயணிப்பது போன்ற செயல்களில் ஈடுபடுகிறார்கள். இந்த நிலை எதிர்வரும் காலங்களில் முற்றிலும் மாறிமானால், விபத்தில்லாத் தமிழ்நாட்டைக் காணலாம்.

**15. பண்டைக்காலக் கல்வி முறையில் ஆசிரியர் மாணவர்களுக்கிடையே நிகழ்ந்த கற்றல், கற்பித்தல் முறைகளைத் தொகுத்தெழுதுக.**

- **முன்னுரை:** கல்வியின் நோக்கமும் கற்றல் கற்பித்தல் முறைகளும் ஆண்டிற்காண்டு மாறுபாடு அடைந்துவந்துள்ளது. அவ்வகையில் பண்டையக்காலக் கல்வி முறையில் நிகழ்ந்த கற்றல் கற்பித்தல் முறைகளைப் பற்றி இக்கட்டுரையில் நீண்டு காண்போம்.
- **கற்றல்:**
  - மாணவரின் ஐந்தாம் வயதுமுதல் கற்றல் தொடங்குகிறது. அக்கற்றல் செயல்பாடுகளில் மாணவர்களின் மொழித்திறனுக்கும் செயல்திறனுக்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. மேல்வாயிலக்கம், கீழ்வாயிலக்கம், குழிமாற்று போன்ற வாய்பாடுகளை தலைகீழ்ப் பாடமாக பயில கட்டாயப்படுத்தப்பட்டார்கள். ஆசிரியர் இல்லாத நேரங்களில் சட்டாம்பிள்ளையே வகுப்பறையினை வழிநடத்தினான். ஓலைச்சுவடிகளை சுயமாக தயாரிக்க அவ்வப்பொழுது பயிற்சியினைப் பெற்றுக்கொண்டார்கள். மாணவர்கள், குழுவாக சேர்ந்து கற்க வாய்ப்பளிக்கப்பட்டதால், கற்றல்திறன் பரவலாக்கப்பட்டது.
  - ஆத்திசூடி, கொன்றைவேந்தன் போன்ற நூல்கள் மாணவர்களின் ஞாபகத்திறனை வலுசேர்க்கின்றன. கொடிய தண்டனைகளின்றி ஆசிரியரின் அன்பினால் வழிகாட்டப்பட்டார்கள். ஆசிரியர்மீதுள்ள மரியாதை, மாணவர்களுக்கு பயத்தினை உண்டாக்கியது. புரியாததை, ஆசிரியரிடம் கேட்டறிந்து படிக்க மாணவர்கள் பயந்தார்கள். வாதம்புரியதல் என்ற நிகழ்வின்மூலம் சிறந்த மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, பாராட்டப்பட்டார்கள். சாந்துணைக் கற்றலுக்கும் ஓதற்பிரிவுக்கும் வாய்ப்பளிக்கப்பட்டது.
- **கற்பித்தல்:**
  - பண்டையக் காலத்தில் கற்பித்தல் என்பது, ஆசிரியர் மற்றும் மாணவர்களுக்கிடையே நடைபெறும் ஒருவித கருத்து பரிமாற்றமாகவே அமைந்திருந்தது. அங்கு, ஆசிரியருக்கு மட்டுமே அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. எதை கற்பிக்க வேண்டும், யாருக்கு கற்பிக்க வேண்டும், எப்பொழுது கற்பிக்க வேண்டும் என அனைத்தையும் அவரே தீர்மானித்தார்.
  - நெடுங்கணக்கு முறைகளிலேயே கற்பித்தல் அனைத்தும் தொடங்கியது. நிகண்டு, நன்னூல், காரிகை, தண்டியலங்காரம் போன்ற இலக்கண நூல்களும் ஆத்திசூடி, கொன்றை வேந்தன் போன்ற நீதி நூல்களும் மாணவர்களுக்கு கற்பித்தல் பாடமாக ஆசிரியர்கள்

எடுத்துக்கொண்டார்கள். வினா கேட்டல் மூலம் மாணவர்களின் திறனினை அவ்வப்பொழுது சோதித்து அறிந்துகொண்டார்கள். மையாடல், முறைவைப்பு, வாதம் புரிதல் போன்ற நிகழ்வுகள் கற்பித்தலை மேலும் ஊக்கப்படுத்தியது.

- **முடிவுரை:** நாட்டின் முன்னேற்றம், கல்வியுடன் மிக நெருங்கியத் தொடர்பு உடையது. பண்டயக்கால கற்றல் கற்பத்தல் செயல்பாடுகளும் அவற்றை மிகத்தெளிவாக எடுத்துக்காட்டுவதாகவே அமைந்திருந்தது என்பதினை இக்கட்டுரையின்மூலம் அறிந்துகொள்ள முடிகிறது.

**16. கவிதை எழுத அறிய வேண்டுவனவாகச் சுரதா கூறுவனவற்றை விவரிக்க.**

- **கவிதை வேறு, உரைநடை வேறு:** விண் வேறு, விண்வெளியில் இயங்குகின்ற வெண்மதி - செங்கதிர் - முகில் வேறு. மண் வேறு - மணல் வேறு. பனித்துளி வேறு - மழைத்துளி வேறு. புண் வேறு - விழுப்புண் வேறு. புகழ் வேறு - செல்வாக்கு வேறு. அதுப்போன்றே, கவிதை என்பது வேறு, உரைநடை என்பது வேறு என்பதை கவிதை எழுதுவதற்குமுன் தெரிந்திருக்க வேண்டும்.
- **கவிதை மற்றும் உரைநடைக்கான இலக்கணம் அறிதல்:** ஆக்கும்வரை அரிசி என்றும் ஆக்கியப்பின் சோறு என்றும் அழைக்கின்றோம். பூக்கும்வரை அரும்பு என்றும் பூத்தபின் பூ என்றும் சொல்லுகின்றோம். அதுபோலவே, எதுகை - மோனை இல்லாமல், அடி அளவு அறியாமல் வார்ப்பதே வசனம் என்றும் எதுகை - மோனை பொருத்தி, அடி அளவை அறிந்து, யாப்பிலக்கணப்படி அமைவது கவிதை என்றும் அழைக்கப்படவேண்டும் என்ற அடிப்படை இலக்கணத்தை அறிந்திருத்தல் வேண்டும்.
- **கவிதை படைத்திடும் வழிமுறை:** பழுத்திருந்தால் சாருவரும், கழனிகளில் தண்ணீர் பாய்ந்திருந்தால் ஏறுவரும் என்பதுபோல, எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை போன்றவற்றைப்பற்றி ஐயமற தெரிந்திருந்தால், நல்ல கவிதை வரும் என்பதை ஒவ்வொரு கவிஞரும் தெரிந்துகொண்டு கவிதை எழுதத் தொடங்க வேண்டும்.
- **புகழ்மிக்க கவிதைகளை இயற்றுதல்:** தேமாவும் புளிமாவும் சீர்களில் காய்த்திடும்வண்ணமும் தளை தட்டாமலும் கவிதைகள் இயற்றல் வேண்டும். மேலும், அது எளிய மக்களுக்கு புரியும்வண்ணம் அமைந்திடல் வேண்டும். முன்னோர்களைப்போல் எழுத்தெண்ணிக் கற்று, அறமும் பொருளும் நிறைந்த கவிதைகளை இற்றிவந்தால், புகழ்வந்து சேரும் என்பதை அறிந்துகொண்டு கவிதைகள் இயற்றல் வேண்டும்.

**17. 'ஒவ்வொரு நகரத்துக்கும் வரலாறும் வடிவமும் உண்டு' - நீங்கள் பார்த்த அல்லது வாழ்ந்த ஒரு நகரம் குறித்து இருபக்க அளவில் கட்டுரை எழுதுக.**

- **முன்னுரை:** வரலாற்றுச் சிறப்பும் வடிவழகும் மிக்க நகரங்களுள் முதன்மையானது மதுரை. அம்மதுரை நான் பார்த்து வியந்த மாநகர்களுள் ஒன்று. அம்மாநகரின் சிறப்புகளைப் பற்றி இக்கட்டுரையில் ஈண்டு காண்போம்.
- **மதுரை நகரின் தொன்மை:** வைகை நதியின் கரையில் அமைந்திருக்கும் நகராகிய மதுரை, கடைச்சங்கம் அமைத்துத் தமிழ் வளர்த்த பாண்டிய மன்னர்களின் தலைநகரமாக விளங்கியது. தென்னிந்திய வரலாற்றில் குறிப்பிடத்தக்க இடம், மதுரை மாநகருக்கு உண்டு. பிற்காலப் பாண்டியர், நாயக்கர் மற்றும் ஆங்கிலேயர் ஆண்ட காலத்துக்கு முன்னரே, இலங்கை மன்னன் விஜயன், தன் பட்டத்து அரசியான மதுராபுரி (மதுரை) இளவரசியை மணந்ததாக, வரலாற்று நூலான மகாவம்சம் கூறுகிறது.
- **நகரின் அமைப்பு:** மதுரை நகரின் நடுநாயகமாக, மீனாட்சி அம்மன் கோவில் அமைந்துள்ளது. நான்கு புறமும் ஆடி வீதிகள் உள்ளன. அதை அடுத்துச் சித்திரை, ஆவணி மூல விதிகளும் உள்ளன. மாதங்களின் பெயர்களைக் கொண்ட வீதிகள் விரிவடைந்து செல்கின்றன. இந்நகர், பல்வேறு அடுக்குகளைக் கொண்ட நகரமாகும். நான்கு பக்கங்களும் ஆயுதக்கிடங்கும், கோட்டை அகழியும் உள்ளன. மதுரை, சிறப்பான நகர அமைப்போடு அழகாக வடிவமைக்கப்பட்டுள்ளது.
- **சங்ககால மதுரை:** தமிழ் இலக்கியங்களின் பொற்காலம், மதுரை தமிழ்ச் சங்கத்திற்குரிய காலமே. பரிபாடல், மதுரைக்காஞ்சி முதலிய சங்க இலக்கியங்களிலும் சிலப்பதிகாரம், மணிமேகலை முதலிய காப்பியங்களிலும் பக்திப்பாடல்கள் - சிற்றிலக்கியங்கள் பலவற்றிலும் பாடுபொருளாக மதுரை இருந்துள்ளது.
- **பண்பாடும் பழக்கவழக்கங்களும்:** மதுரை, பண்பாட்டுச் சிறப்பு வாய்ந்த நகரமாகும். நட்பு, விருந்து உபசரிப்பு என்னும் பாரம்பரியச் சிறப்புகளைப் பெற்ற நகரமாகும். தென்னிந்திய உணவு


Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com

**வகைகளுக்கும், மல்லிகைப்பூவுக்கும் சிறப்பு வாய்ந்தது மதுரை. இங்கு, விவசாயம், நெசவு போன்ற பல்வேறு தொழில்கள், நடைபெற்று வருகின்றன. இந்நகரம், "தூங்கா நகரம்" என்னும் சிறப்பினை உடையதாகவும் விளங்கிவருகிறது. கோவில்களின் நகரமாக விளங்கிவரும் மதுரை, ஜல்லிக்கட்டு விழாவினால் உலகப் புகழ்பெற்றதாக விளங்கிவருகிறது.**

- **முடிவுரை:** மீனாட்சியம்மன் ஆலயம், வண்டியூர் மாரியம்மன் கோவில், தெப்பக்குளம், தமுக்க மைதானம், மாட்டுத்தாவணி என வரலாற்று சிறப்புமிக்க இடங்கள் இருப்பதினால் என் நினைவுகளில் மதுரைக்கென்று ஒரு தனியிடம் உண்டு.

**18. 'கிராமங்கள் தங்கள் முகவரியை இழந்து வருகின்றன' - இது குறித்து உங்கள் கருத்தை விவரிக்க.**

- **காணாமல் போன கிராமங்கள்:** கிராமங்கள் எப்போதும் இயற்கை வனப்போடும் வளத்தோடும் அமைந்திருப்பவை. எங்குப் பார்த்தாலும் மரங்களும், பட்டு விரித்தாற்போன்ற வயல்கள் காணப்படும். சிறுசிறு ஏரிகள், குளங்கள், இவற்றை நிரப்ப ஓடிவரும் நீரோடைகள் இயல்பாய் அமைந்திருப்பனதாம் கிராமத்துச் சூழல். இன்றைய காலக்கட்டத்தில், இவையெல்லாம் எங்கே போயின என்று கேட்டுகத்தான் தோன்றுகிறது.
- **விளைநிலங்கள் விலை நிலங்களாக மாறிவிட்டன:** கிராமங்களின் முக்கியத்தொழிலே விவசாயமாக இருந்தது. நிலங்களை உழத்தொடங்கி, நெல்மணிகளை மூட்டைமூட்டையாக வீட்டில் அடுக்கிவைத்து, அகமகிழ்ந்து வாழ்ந்து வந்தனர் கிராமத்து விவசாயிகள். வயல்களில் வேலைசெய்யும் விவசாயக் கூலிகளும், மிகுந்த மகிழ்ச்சியோடு உழைப்பை முன்னிறுத்தி, கூலியினைப் பெற்று, நிம்மதியான வாழ்வு நடத்தினர். ஆனால், இன்றோ விவசாயம் செய்து வந்த உழவர்கள், விளைநிலங்களை விலைபேசிக் கட்டடங்கள் கட்டுவதற்கு, விற்பனை செய்து வருகின்றனர்.
- **ஆடு மாடுகளில்லா அனாதைக் கிராமங்கள்:** கிராமங்களில் வீட்டுக்குவீடு ஆடு, மாடு, கோழிகள் என அனைத்தும் நிறைந்து காணப்படும். ஆனால், இன்றோ மாட்டுத்தொழுவம், ஆட்டுப்பட்டி, கோழிக்கூடு என்பனவெல்லாம், ஏதோ புதுமையான சொற்றொடர்களாகி விட்டன. வீடுகளின் கூரைகளிலும் முற்றங்களிலும் கூடுகட்டி வாழ்ந்த பறவைகளுக்கோ, இப்பொழுது இடமில்லை. தம்முடைய இயல்புத் தன்மையை இழந்து நிற்கின்றன பல கிராமங்கள்.
- **வீட்டு நிகழ்ச்சிகள் வெளியூரில் நடக்கின்றன:** வீட்டில் நடத்தப்பெறும் சிறுசிறு நிகழ்ச்சிகளும்கூட, நகர மண்டபங்களில் நடததப்பெற்று வருகின்றன. உற்றார் உறவினர், நிகழ்ச்சி நாளுக்கு முன்பே வந்து தங்கி, உணவைத் தாமே சமைத்து, மகிழ்ச்சியாக அனைவரும் கூட்டாக அமர்ந்து உண்ட நிலை, இப்பொழுது இல்லை. காலையிலிருந்து இரவுவரை விருந்து நடைபெறும் கிராமத்து வீடுகளில், இப்பொழுதோ, நகர்ப்புற மண்டபங்களில் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்துகொண்டு, ஒருவேளை உணவைமட்டுமே அளித்துவிட்டு, உறவினரை அனுப்பிவைக்கும் நிலைக்கு மாறியுள்ளன.
- **நாகரிகப் போர்வைக்குள் மறைந்துவரும் கிராமங்கள்:** ஆண்கள் வேட்டியும், பெண்குழந்தைகள் பாவாடை சட்டையும், பையன்கள் கால்சட்டையும் அணிந்து, கிராமத்திற்கே உரிய பண்பாட்டைக் காத்து வந்தனர். வேட்டிக்குப் பதில் ஜீன்ஸ், பாவாடை சட்டைக்குப் பதில் சுடிதார், குர்தா, நைட்டி என வடநாட்டு - மேனாட்டு நாகரிகத்தைக் கிராமத்துக்குள் நுழையவிட்டுவிட்டனர். அம்மா, அப்பா என்னும் அழகிய தமிழ்ச் சொற்கள், மம்மி - டாடி என மாற்றம் பெற்றுள்ளன. திருவிழாக்களில் கிராமிய கலைநிகழ்ச்சிகள் போய், திரைப்படக் காட்சிகள் அரங்கேறுகின்றன. மொத்தத்தில் கிராமத்து மக்கள் தங்கள் அடையாளத்தைத் தொலைத்துவிட்டனர். கிராமங்கள் தங்களின் முகவரியை இழந்து வருகிறது எனலாம்.

**19. சென்னை மயிலாப்பூர், கந்தகோட்டப் பகுதிகள் செய்யுளில் எவ்விதம் காட்சியப்படுத்தப்படுகிறது?**

- **முன்னுரை:** கோவில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்பது முதுமொழி. நாகரீகம், சமூக ஒற்றுமை, மகிழ்ச்சி, பண்டைய வரலாறு ஆகியவற்றின் முழு அடையாளமாக கோவில்கள் இருந்துவருகின்றன. இவ்வகையில், மயிலாப்பூரிலும் கந்தக் கோட்டத்திலும் அமைந்திருக்கும் திருக்கோவில்கள் செய்யுள் பகுதிகளில் எவ்வாறு காட்சிப்படுத்தப்பட்டுள்ளது என்பதனை இங்கு நீண்டு காண்போம்.
- **மயிலாப்பூர் கபாலீச்சரம்:**
    - சென்னை மயிலாப்பூரில் ஆண்டுதோறும் விழாக்கள் நடைபெறுவது வழக்கம். அவ்வகையில் ஆண்டுதோறும் பங்குனி மாதத்தில் கொண்டாடப்பட்டுவரும் பங்குனி உத்திரத் திருவிழாவினைச்


Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com

சிறப்பித்து, திருஞானசம்பந்தர் அவர்கள், தனது தேவாரப்பாடலில் (திருமயிலைப் பதிகத்தில்) குறிப்பிட்டுள்ளார்.

- ○ பூம்பாவாய், இளம்பெண்கள் ஒன்றுகூடி ஆரவாரத்தோடு கொண்டாடிடும் விழாகள் நிறைந்த வீதியினை உடைய ஊர் திருமயிலை. எழுச்சி மிக்க விழாகள் நடந்திடும் அத்திருமயிலை கபாலீச்சுரம் இறைவனுக்கு பங்குனி உத்திர நாளில் பூசையிடும் ஆரவார விழாவினைக் காணாமல் செல்வது முறையாகுமா? என கேட்பதுபோல் திருஞான சம்பந்தர் பங்குனி உத்திரத் திருவிழா நடைபெற்ற முறையினை விளக்கியுள்ளார்.

- **கந்தக்கோட்ட கந்தன்:**
  - ○ ஆன்மநேய ஒருமைப்பாடு, சமய ஒருமைப்பாடு, ஒளி வழிபாடு போன்ற சீர்திருத்தச் சிந்தனைகள், வள்ளலாரின் மனதில் தோன்றிட காரணமாய் இருந்த ஊர், சென்னை கந்தகோட்டம். மேலும், வள்ளலார் அவர்கள் வடலூர் சென்று, தமது ஆன்மீக மையத்தை நிறுவிட ஊற்றுக்கண்ணாக இருந்த ஊரும் சென்னை கந்தகோட்டம்.
  - ○ முருகனுக்கான விழாகள் சிறப்பாக நடைபெற்றிடும் கந்தக்கோட்டம் பற்றி இராமலிங்க அடிகளார் அவர்கள் குறிப்பிடும்பொழுது, 'அறம் செய்வோர் நிறைந்த சென்னை கந்தகோட்டம்' என்றே தனது தெய்வமணி மாலையில் (5ம் திருமுறை) குறிப்பிடுகிறார்.
- **முடிவுரை:** திருஞானசம்பந்தர் மற்றும் இராமலிங்க அடிகளார் அவர்களின் அருட்பெறும் பார்வையின்கீழ் சென்னையின் மயிலாப்பூரும் கந்தகோட்டமும் இறைவனின் அருளும் நல் அறமும் நிறைந்த ஊர்கள் என்பதினை அறிந்துகொள்ள முடிகிறது.

**20. நிருவாக மேலாண்மை குறித்து வெ.இறையன்பு கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.**

- **முன்னுரை:** மனித இனம் தோன்றியபோதே மேலாண்மையும் தொடங்கிவிட்டது. இயற்கையோடு இணைந்து வாழவும் இடர்களை களைந்திடவும் மேலாண்மை அவசியமான ஒன்று. மேலாண்மை பல வகைப்படும். அவற்றிலுள் மிக முக்கியமான ஒன்றான நிருவாக மேலாண்மைப் பற்றி இங்கு காண்போம்.
- **நிருவாக மேலாண்மை:** உயர் பதவிகளில் இருப்பவர்கள் எல்லாவற்றிலும் நிபுணத்துவம் பெற்றவர்களாக இருப்பது சாத்தியமில்லை. ஆனால், யார் திறமைசாலி என்று அறிந்து, அவரை அருகில் வைத்துக்கொண்டால் போதும். ஒரு செயலை தெரிந்துவைத்திருப்பது ஒருவித அறிவு என்றால், அச்செயல் யாருக்கு தெரியும் என தெரிந்து வைத்திருப்பதும் ஒருவகை அறிவாகும். இதனையே நாலடியார்,

  **'கல்லாரே யாயினும் கற்றாரைச் சேர்ந்தொழுகின் (139)'** - என்கிறது.
- **ஷேக்ஸ்பியர் கூறும் நிருவாக மேலாண்மை:** நிருவாகத்தில் வரவே செலவைத் தீர்மானிக்க வேண்டும். வரவைத் தாண்டி நிறையச் செலவு செய்பவன், அடுத்தவர்களிடம் கையேந்த வேண்டிய அவல நிலைக்குத் தள்ளப்படுவான். இதையே, 'ஷேக்ஸ்பியரின்' நிதி மேலாண்மை பற்றிய நாடகம் விளக்குகிறது. டைமன் என்பவன் ஏதென்ஸ் நகரில் இருந்தான். அவன் வரவு குறைந்தாலும் செலவு நீடித்தது. அவனது உதவியாளர் நிதி நிலைமையைப் பற்றிப் பேச வருகிற பொழுதெல்லாம் கேட்க மறுத்தான். ஒரு கட்டத்தில் கடன் கொடுத்தவர்கள் கழுத்தை நெரிக்கிறார்கள். ஆனால், அப்போதும் அவன் வருந்தவில்லை. தான் அளித்த விருந்தை உண்டவர்கள், உதவுவார்கள் என்று பொய்கணக்குப் போடுகிறான். அவனுடைய சேவகர்கள் நான்கு திசைகளுக்கும் சென்று வெறும் கையோடும் வெளிறிய முகத்தோடும் திரும்புகிறார்கள். அவன் ஊருக்கு ஒதுக்குப்புறமாகச் செல்கிறான். மனித இனத்தையே வெறுக்கிறான். இவ்வாறு செயல்பட்டால் எவ்வாறு நிருவாகம் சிறப்புடன் காணப்படும்.
- **நல்வழிக் கூறும் நிருவாக மேலாண்மை:** ஒருவன் தன் வருவாயைவிட அதிகம் செலவு செய்தால், அவன் கடன் வாங்கி, தன் மானத்தை இழந்து சொந்த புத்தியை இழந்துவிடுவான் என்பதையே 'ஆன முதலில் அதிகம் செலவானால் மானம் அழிந்து மதிகெட்டு போனான் எனக் குறிப்பிடுகிறார்.
- **முடிவுரை:** நிருவாகத்தில் வரவே செலவைத் தீர்மானிக்க வேண்டும். அதுவே, வெற்றியின் அடிப்படையாக அமையும் என்று நிருவாக மேலாண்மை குறித்து வெ.இறையன்பு கூறும் கருத்துகளாகும்.


Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com

**21. திரைப்படத்துறை என்பது ஆயிரம் பேரைக் காப்பற்றும் தொழிலா? அல்லது கலைகளின் சங்கமமா? உங்கள் பார்வையைக் கட்டுரையாக்குக.**

- **திரைப்படம்:** திரை அரங்கிற்குச் சென்று, நாம் பல திரைப்படங்களை கண்டு மகிழ்ந்திருக்கின்றோம். அத்திரைப்படத்தின் காட்சிக்குப்பின், எவ்வளவு கடினமான உழைப்பு இருக்கிறது? எத்தனை பேர்களின் கூட்டு முயற்சி இருக்கிறது? என்பது என்றாவது சிந்தித்ததுண்டா.........? அச்சிந்தனையின் வடிவமாகவே இக்கட்டுரை அமைகிறது.
- **பெருந்தொழில்:** திரைப்படம் தயாரிப்பது என்பது, பெருமுதலீட்டில் செய்யப்படுகின்ற ஒரு பெருந்தொழிலாகும். கதை உருவாக்கம், நடிகர்கள் தேர்வு, உரையாடல் எழுதுதல், பாடல் எழுதுதல், பாடலுக்கு இசை அமைத்தல், நடிப்பதற்குரிய நடிகர்களோடு படம் எடுப்பதற்குரிய இடங்களைத் தேர்வு செய்தல், அவற்றைப் படமாக்கல், படத்தைச் சீரமைத்து ஒலி ஒளிப்பதிவுகள் செய்தல், தேர்வுக் குழுவுக்கு அனுப்புதல், படத்தை வெளியிடத் திரையரங்குகளைத் தேடி கண்டுபிடித்தல், பத்திரிகையாளர்களுக்கும் ஊடகங்களுக்கும் செய்தி தெரிவித்தல் என, எத்தனையோ செயல்களைச் செய்த பிறகுதான், ஒரு படத்தைத் திரை அரங்கில் காட்டமுடியும்.
- **பலரை வாழவைக்கும் தொழில்:** மேலே குறிப்பிட்ட செயல்களைச் செய்வதற்குப் பல நூறு ஆட்களைத் தேர்வு செய்து, வேலை வாங்க வேண்டும். அவர்களுக்கு உரிய நேரத்தில் உணவளித்தல் வேண்டும். ஊதியம் தர வேண்டும். இவ்வகையில் எண்ணற்ற குடும்பங்களைக் காக்கின்ற தொழிலாகத் திரைப்படத்தொழில் விளங்குகிறது. அவர்களின் குடும்பங்கள், இந்தத் தொழிலை நம்பித்தான் இயங்கிக் கொண்டிருக்கின்றன.
- **கலைவளர் தொழில்:** திரைப்படத்தில் நடிப்பு, வசனம் மட்டுமில்லாமல் இசையும் சேர்கிறது. ஆடல், பாடல் கலைகள் அதனால் புத்தாக்கம் பெறுகின்றன. சில படங்களில் சண்டைக்காட்சிகள் இடம்பெறும். அதில் பணிபுரியச் சில குறிப்பிட்ட பயிற்சி பெற்ற கலைஞர்கள் இருப்பர். சில காட்சி அமைப்புகளை உருவாக்க இயற்கை அழகு நிறைந்த இடங்களைத் தேர்வு செய்வர். அன்றி இயற்கைக் காட்சிகளை வரைந்தோ, குறிப்பிட்ட வகையிலான அரங்குகளை அமைத்தோ படப்பிடிப்பை மேற்கொள்வர். இவ்வகையில் உற்று நோக்கினால், திரைப்படத்தொழில் என்பது, எண்ணற்ற கலைகளை வளர்க்கும் தொழிற்கூடமாக மட்டும் இல்லாமல், ஆயிரக்கணக்கான குடும்பங்களைக் காப்பாற்றும் தொழிலாக விளங்குவதும் புலப்படும்.

**22. மகாநடிகரைக் கண்ட பாலசந்திரனின் மனவோட்டத்தை நயத்துடன் எழுதுக.**

- **முன்னுரை:** மலையாளக் கவிஞரும் நடிகருமான பாலச்சந்திரன் சுள்ளிக்காடு அவர்கள், கேரளாவில் உள்ள பரவூரில் பிறந்தவர். எர்ணாகுளத்தில் அமைந்துள்ள மஹாராஜா கல்லூரில் ஆங்கிலப் பட்டம் பெற்றவர். அன்னார் அவர்கள், எழுதிய ‘சிதம்பர ஸ்மரண’ என்ற நூலில், நடிகர் திலகம் சிவாஜிகணேசன் உடனான ஒருநாள் சந்திப்பினைப் பற்றியும் நடிப்புத்திறனைப் பற்றியும் வானளாவிய அளவில் புகழ்ந்து விவரித்துள்ளார். மேற்படியான நூலினை, கே.வி.சைலஜா அவர்கள் ‘சிதம்பர நினைவுகள்’ என்ற பெயரில், தமிழ்மொழியில் மொழிபெயர்த்துள்ளார். அக்கட்டுரையில் உள்ள கருத்துகள் பற்றி, பாலச்சந்திரனின் மனவோட்டத்தில் காண்போம்.
- **பிறப்பும் வளர்ப்பும்:** பழகுவதற்கு மிகவும் எளியவரான சிவாஜிகணேசன் அவர்கள், விழுப்புரத்தில் பிறந்தவர். விழுப்புரம் சின்னையா கணேசன் என்பதே அவரின் இயற்பெயர். இதன் சுருக்கமே, வி.சி.கணேசன் என்பதாகும். சுதந்திரப் போராட்டத்தில் கலந்துகொண்டு, சிறைச்சென்ற தந்தையினை, தன்னுடைய ஒன்பதாவது வயதில்தான் முதன்முதலில் கண்டார். குடும்ப வறுமையின் காரணமாக, தன்னுடைய ஐந்தாவது வயதிலேயே நாடகக் கம்பெனியில் பணிக்குச் சேர்ந்து, பின் படிப்படியாக முன்னேறி சினிமாத்துறையில் கால்பதித்தார்.
- **நாயகர்களின் உருவம்:** அறிஞர் அண்ணாதுரை அவர்களின் நாடகத்தில், சத்ரபதி சிவாஜியாக வேடமேற்று நடித்தார். அவரின் நடிப்புத்திறனைக் கண்டுவியந்த, தந்தை பெரியார் அவர்கள், வி.சி.கணேசனுக்கு ‘சிவாஜிகணேசன்’ என்று பெயரிட்டார். அப்பெயரே, பின்னாளில் நிலைத்துவிட்டது. ஊழித் தாண்டவமாடும் ருத்ரன், கவச குண்டலம் கொடுத்த கர்ணன், காளமேகத்தில் கவிதை ததும்பச் செய்த காளிதாசன், தமிழின் உன்னதக் கவி பாரதி, தமிழ் மண்ணின் வீரமகன் வீரபாண்டிய கட்டபொம்மன், ஆங்கிலேயருக்கு அஞ்சாத கப்பலோட்டியத் தமிழன் என எண்ணற்ற நாயகர்களின் உருவமாகவே அவர் காட்சியளித்து வருகிறார். அப்பேர்பட்ட

நடிப்புலகச் சக்கரவர்த்தியின் வீட்டிற்குள், இரவு விருந்திற்காக பாலச்சந்திரன் அவர்கள் சென்றிட வாய்ப்பு கிடைத்தது.

- **பிறவிக் கலைஞன்:** ஐந்து ரூபாய் சம்பளத்தில், 'தங்கப்பதங்கம்' திரைப்படத்தின் பதாகையுடன், தெருத்தெருவாய் கத்தித்திரிந்த பாலச்சந்திரன் அவர்கள், முதல்முறையாக சிவாஜிகணேசனைப் பார்க்க, அவரின் வீட்டிற்குள் செல்கிறார். எதிரே, ஒரு சீராய் அடி எடுத்து, பாதம் முன்னோக்க, எதிர்தோள் பின்னோக்க, தலை நிமிர்ந்து, நெஞ்சு விரிந்து, கைகள் வீசி, இமை அசையாமல், மெல்ல மெல்ல சிங்க நடையிட்டு வந்த அந்த மகாநடிகனைக் கண்டதும், இராஜராஜ சோழனின் வருகையைக் கண்டதாகவே உணர்ந்தார் பாலச்சந்திரன். பின், அனைவரும் அமர்ந்தார்கள். ராஜீவ் அவர்கள், புதிய படத்திற்கான கதைக்களத்தினை கூறித்தொடங்கினார். அதைக் கேட்டு ரசித்துக்கொண்டிருந்தார் சிவாஜிகணேசன். அவ்வப்பொழுது, அவரின் புருவங்களும் கண்களும் உயர, முக அபிநயங்களை கூட, கைவிரல்கள் தாளஜதி போட என மாறிமாறி பற்பல செய்கைகள் நடத்துகொண்டே இருந்தன. இவையனைத்தையும் பார்த்துரசித்த பாலச்சந்திரன் அவர்கள், சிவாஜிகணேசன் அவர்கள் 'ஓர் பிறவி கலைஞன்' என்பதை உணர்ந்துக்கொண்டார்.
- **வசனம் மறவா மன்னன்:** இடையில், ராஜீவ் அவர்கள் சிவாஜிகணேசனைப் பார்த்து, வீரபாண்டிய கட்டபொம்மன் திரைப்படத்தில் நீங்கள் பேசிய வசனம் நினைவிருக்கிறதா? என விளையாட்டாய் ஒரு கேள்வியினைக் கேட்டார். சிவாஜிகணேசன் கோபித்துக்கொள்வாரோ என அஞ்சினார் பாலசந்திரன். ஆனால், சிவாஜிகணேசனோ சிறுதுநேரம், கண்ணைமூடி திறந்தார். பின், எழுந்தார், வேட்டியின் மடிப்பினைப் பிடித்தார், மெதுவாக நிமிர்ந்து விஸ்வரூபம் எடுத்தார். கிஸ்தி - திரை - வரி - வட்டி, வானம் பொழிகிறது - பூமி விளைகிறது - உனக்கேன் கொடுப்பது கிஸ்தி. எங்களோடு வயலுக்கு வந்தாயா? ஏற்றம் இறைத்தாயா? நீர்பாய்ச்சி - நெடுவயல் நிறையக் கண்டாயா? நாற்று நட்டாயா? களை பறித்தாயா?.................... என ஒருமூச்சில் பேசிமுடித்தார். மயிர்கால் கூச்சிட, மெய்மறந்துக் கிடந்தார்கள் பாலசந்திரனும் அவருடன் சென்றவர்களும்.
- **வாசல்வரை வந்து வழியனுப்பு பண்பாளன்:** திரைப்படம் சார்ந்து அனைத்தும் பேசி முடிக்கப்பட்டது. பின், அறுசுவையினை உண்டு மகிழ்ந்தார்கள். கிளம்பிடும் தருவாயில், வாசல்வரை வந்து வழியனுப்பி வைத்தார் சிவாஜிகணேசன். பாலசந்திரன் அவர்கள் காரில் ஏறினாலும் அவரின் மனமோ சிவாஜிகணேசன் அவர்களின் வீட்டினையே சுற்றித்திரிந்தது. அவரின் மனவோட்டமோ சிவாஜிகணேசனின் நடிப்போட்டத்தில் கலந்து கிடந்தது.
- **முடிவுரை:** நடிப்புச் சக்கரவர்த்தியான சிவாஜிகணேசன் அவர்கள், பத்மஸ்ரீ - பத்ம பூசண் - கலைமாமணி - செலியார் - கெய்ரோ விருது - தாதாசாகேப் பால்கே விருது போன்ற விருதுகளைப் பெற்றுள்ளார். அன்னார் அவர்களுடனான ஒருநாள் சந்திப்பில், பாலசந்திரன் சுள்ளிக்காடு அவர்கள் பெற்ற அனுபவமாகவே இந்நூல் அமையப்பெற்றுள்ளது. (என்னைப் போல் சிவாஜி நடிப்பார். ஆனால், என்னால்தான் சிவாஜி போல் நடிக்க முடியாது - மார்லன் பிராண்டோ)

**28. உங்கள் ஊர்ப் பகுதியில் வாழும் கலைஞர் ஒருவர் நேரில் பார்த்த அனுபவத்தை விவரித்துக் கட்டுரையாக்குக.**

- **கலைஞர் கலைவாணன்:** 'கலைவாணன்' என்றதும் நகைச்சுவை நாயகன் என்.எஸ்.கிருஷ்ணன் நினைவுக்கு வருவார். நான் அவரைப் பற்றிப் பேசவில்லை. அப்பெயரைத் தம் இயற்பெயராகக் கொண்டவரைப் பற்றிக் பேசப்போகிறேன். அவர்தாம், பொம்மலாட்டக் கலைஞராக வலம் வந்துகொண்டிருக்கும் மு.கலைவாணன். இன்றைக்கும் ஊர் ஊராகப் பயணம் செய்துகொண்டே இருக்கிறார். பொம்மலாட்ட நிகழ்ச்சிகளை நடத்துவதோடு, அக்கலையைப் பயிற்றுவித்துக்கொண்டும் உள்ளார். கலைமாமணி கவிஞர்.த.மா.முத்துக்கூத்தன், இவருடைய தந்தையாவார். சிறந்த நவைச்சுவை நடிகராகவும் பாடலாசிரியராகவும் திகழ்ந்தவர்.
- **கலைவாணன் பெயர்க்காரணம்:** இளம் வயதுமுதல் பெரியார் கொள்கையில் ஈடுபாடு கொண்ட முத்துக்கூத்தன், சாதி மறுப்புத் திருமணம் செய்து கொண்டவர். தாம் கொண்ட கொள்கையில் மாறாது, தம் வாழ்நாள்வரை வாழ்ந்து காட்டிய கொள்கையாளர். கலையுலகத் தலைமகன் கலைவாணர்மீது கொண்ட ஈடுபாட்டால், தம் ஒரே மகனுக்குக் கலைவாணன் எனப் பெயர் வைத்தார். அதனால்தானோ என்னவோ, இவருக்கும் ஓவியம், பொம்மலாட்டம், பலகுரல், மேடைப்பேச்சு எனப் பல கலைகளும் யாரிடமும் கற்றுக்கொள்ளாமலே ஒட்டிக் கொண்டது.
- **பொம்மலாட்டக் கலையில் ஈடுபாடு:** 1972-73ல் வகுப்பில் ஆசிரியை பாடம் நடத்துவதைப் பார்த்த கலைவாணன், அவரைப் போலவே, படங்களை தாளில் வரைந்து, அதை வெட்டி பொம்மலாட்டம்

நடத்துவார். கத்திரிக்காய், உருளைக்கிழங்கு, முட்டை ஓடு ஆகியவற்றில் கண், காது, மூக்கு, வாய் வரைந்து விரலில் மாட்டி ஆட்டுவிப்பது என, விளையாட்டாய்ச் செய்யத் தொடங்கினார். பள்ளி நண்பன் ரவியுடன் சேர்ந்து பள்ளி இலக்கிய விழாவில் பொம்மலாட்டம் காட்டத் தொடங்கினார். பின், விடுமுறை நாட்களில் வீட்டில் 10 காசு கட்டணம் பெற்றுக்கொண்டு, ஊர்ப் பிள்ளைகளை எல்லாம் அழைத்துப் பொம்மலாட்டம் காட்டினார்.

- **பொம்மலாட்டம் சமூக மாற்றத்திற்கான கருவி:** பொம்மலாட்டத்தை, ஒரு புரட்சிகரமான, சமூக மாற்றத்திற்கான கருவி என நினைத்தார் கலைவாணன். முன்பெல்லாம் பக்திக் கதைகளைச் சொல்லுவதற்காக நிகழ்த்தப்பட்டு வந்த பொம்மலாட்டத்தில், சமூக நலக் கருத்தையும் சொல்லமுடியும் எனத் தமிழ்நாட்டில் முதன்முதலில் நிகழ்த்திக் காட்டியது இவர்தான். எடுத்துக்காட்டாக, 1995ல் திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள ஒரு சிற்றூரில், 'தரிசுநிலம் தரும் பரிவு' என்னும் தலைப்பில், தரிசுநில மேம்பாடு, மரம் வளர்ப்பின் அவசியம் பற்றிய் பொம்மலாட்டம், 'சீடா' நிறுவனத்தின் சார்பில் நடத்தப்பெற்றது.
- **கற்பிக்கும் உத்தி - பொம்மலாட்டம்:** பள்ளிகளில் கற்பிக்கும் கருவியாகப் பொம்மலாட்டக் கலைவடிவத்தைப் பயன்படுத்த வேண்டும் என்பதற்காக, தமிழ்நாடு பொம்மலாட்டக் கலைக் கல்வியகத்தை உருவாக்கி உள்ளார். அவ்வியக்கத்தின்மூலம் பள்ளி ஆசிரியர்கள், குழந்தைகள், கல்லூரி மாணவர்கள் என அனைவருக்கும் பொம்மலாட்டப் பயிற்சி முகாம் நடத்தி வருகிறார். கலைவாணன், கலைக்குடும்பத்தைச் சேர்ந்தவர் என்ற செய்தி, அவரின் ஓவியம் மற்றும் பொம்மலாட்டக் கலை நிகழ்வுகளின்மூலம் வெளிச்சமாகிறது.

**24. அறிவுடைமை வாழ்வின் உயர்வுக்குத் துணைநிற்கும் என்பதை வள்ளுவம் வழி நின்று நிறுவுக.**

- **அறிவின் சிறப்பு:** அறிவு, அழிவு நேராமல் முன்னறிந்து காக்கும் கருவியாகும். மேலும், அது பகைவராலும் அழிக்க முடியாத அரணுமாகும்.

  அறிவற்றம் காக்கும் கருவி செறுவார்க்கம்
  உள்அழிக்கல் ஆகா அரண்

- **அறிவின் இலக்கணம்:**
  - மனதை தீய வழியில் இருந்து விலக்கி, நல்ல வழியில் செலுத்துவதே அறிவாகும்.

    சென்ற இடத்தால் செலவிடா தீதுஒரீஇ
    நன்றின்பால் உய்ப்பது அறிவு
  - எந்தச் செய்தியை எவர் கூறக் கேட்டாலும் அச்செய்தியின் உண்மையை ஆராய்ந்து கான உதவுவதே அறிவாகும்.

    எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
    மெய்ப்பொருள் காண்பது அறிவு
  - உலகத்தார் எவ்வழியில் நடக்கின்றனரோ அவ்வழியில் தானும் நடப்பதே சிறந்த அறிவாகும்.

    எவ்வது உறைவது உலகம் உலகத்தோடு
    அவ்வது உறைவது அறிவு
- **அறிவுடையார்க்குத் துன்பமில்லை:** பின்னர் வரக்கூடிய துன்பத்தை முன்னரே அறிந்து தன்னைக் காத்துக்கொள்ளும் அறிவுடையவர்க்கு நடுக்கம் தரும் துன்பம் என்றுமே இல்லை.

  எதிரதாக் காக்கும் அறிவினார்க்கு இல்லை
  அதிர வருவதோர் நோய்

**25. எளிய மக்களின் வலிகளை நாட்டுப்புற இலக்கிய வடிவங்களே முழுமையாகப் பிரதிபலிக்கின்றன – நிறுவுக.**

- **முன்னுரை:** மனித சமுதாயம் எதை அனுபவித்ததோ, எதைக் கற்றதோ அதைக் குவித்து வைத்திருக்கும் சேமிப்பு அறையே நாட்டுப்புற இலக்கியங்கள். அவை, எளிய மக்களின் வலிகளை முழுமையாகப் பிரதிகலிக்கின்றன. அவற்றின் வேர்கள், மனித சமுதாயத்தின் அனைத்து நிலைகளிலும் மிக ஆழமாகப் பதிந்துள்ளன. அதைப் பற்றி இங்கு நீண்டு காண்போம்.
- **நாட்டுப்புறக் கதைகள்:** மக்களிடையே கதைக் கூறுதல் என்பது ஓர் பொதுவான பண்பாகும். மக்கள் தங்களது வாழ்வில் எதிர்கொள்ளும் அனுபவங்களை எடுத்துக்கூறுவதற்காகவும் பொழுது போக்கிற்காகவும் கதைகளை கூறத் தொடங்கினார்கள். இன்றளவும் கூறுகிறார்கள். தன்னுடைய இயல்பான வாழ்க்கை நிலைகளையும் தன் குறைகளையும், வறுமை நிலைகளையும் அதிலிருந்து விடுபட்டு சாதித்ததையும் அக்கதைகள் வெளிப்படுத்தி வருகின்றன.


Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com

- **பழமொழிகள்:** அறிவின் சுருக்கமே பழமொழி. இவை, சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் ஆற்றல் கொண்டவை. பழமொழிகள் என்பது பலரது அறிவையும் ஒருவரது நுண்ணுணர்வையும் வெளிப்படுத்துபவை. அது, ஆழமான சிந்தனையைத் தூண்டிடும் அனுபவ ஊற்று.
- **விடுகதைகள்:** விடுகதை என்பது ஏதாவது ஒரு கருத்தை தன்னிடம் மறைத்துக் கொண்டு கூறுவது. இவற்றை, அறிவு ஊட்டும் செயல், பயனுள்ள பொழுதுபோக்கு என்றும் கூறலாம்.
- **ஒப்பாரிப்பாடல்கள்:** இறந்தவர்களை நினைத்து அவர்கள்மீது பாடப்படும் பாடல்களை ஒப்பாரி என்பர். ஒப்பாரி பாடுபவர் தன்னுடைய நிலைமை, குடும்பத்தின் நிலைமை, தன்னுடைய கஷ்டம் போன்றவற்றை இணைத்துப்பாடுவார்கள். இறந்தவருக்கும் தனக்குமான உறவையும் இழப்பையும் அது பிரதிபலிக்கும்.
- **முடிவுரை:** நாட்டுப்புற இலக்கியங்கள் மனிதனின் வாழ்வியலை மிக அழகாக படம்பித்துக் காட்டுகின்றன. பழமொழி, விடுகதை, கதைப்பாடல்கள், கதைகள் போன்றவை மனிதனின் நிலைகள் பற்றியும் வலிகளையும் முழுமையாக பிரதிலிக்கின்றன எனலாம்.

**26. சங்ககால வரலாற்றை அறிந்துகொள்ள, புகளூர்க் கல்வெட்டு எவ்வகையில் துணைபுரிகிறது - விளக்குக.**

- **முன்னுரை:** சங்ககால வரலாற்றை அறிந்துகொள்ள இலக்கண இலக்கியங்களே முதன்மைச் சான்றுகளாக விளங்கின. பின், அவ்விலக்கியங்களுக்கு நிகரானதாவும் சங்ககால வரலாற்றை படம்பித்துக்காட்டிடும் காலக்கண்ணாடியாகவும் விளங்கி வருபவை கல்வெட்டுகளே. இக்கல்வெட்டுகள் கூறும் வரலாற்றுத் தடங்களை இப்பகுதியில் நாம் நீண்டு காண்போம்.
- **கல்வெட்டுகள் ஓர் ஆய்வு:** கல்வெட்டுகளில் உள்ள எழுத்துகளை ஆய்வதென்பது மிகவும் கடினமான பணியாகும். புலப்படாத எழுத்துகள், அகராதியில் அடங்காத சொற்கள், சிதலமடைந்த சுவர்கள் என பலத் தடைகளைக் கடந்து, கல்வெட்டுகளில் கூறப்பட்டுள்ள செய்திகளை கண்டறிதல் என்பது கடலுள்மூழ்கி முத்தெடுப்பதற்கு சமம். அப்பணியினை மிக லாவகமாக கையாண்டர்களில் ஐராவதம் மகாதேவன் அவர்கள் குறிப்பிடத்தக்கவர். 30 ஆண்டுகாலம் தொடர்ந்து கல்வெட்டுகள் சார்ந்த ஆய்வினை மேற்கொண்டவர். மேலும், கல்வெட்டு என்ற இதழினைவும் தொடர்ந்து நடத்தியவர், அவர்.
- **புகளூர் கல்வெட்டு:** கரூரை அடுத்துள்ள ஊர் புகளூர். அங்குள்ள ஆறுநாட்டான் குன்றில், பல குகைகள் உள்ளன. அக்குகைளில் ஒன்றினுள், நான்கு வரிகளில், பிராமிய எழுத்துகளால் எழுதப்பட்ட கல்வெட்டு இருப்பதாகவும், அது மிகவும் பழுதடைந்த நிலையில் இருப்பதாகவும், படிப்பதற்கு ஏதுவாக இல்லை எனவும் பரவலாக பேசப்பட்டு வந்தது. மேலும், அக்கல்வெட்டு சேரர் காலத்தைச் சார்ந்து எனவும் கூறப்பட்டு வந்தது.
- **சேரர் வரலாறு:** பொதுவாக பிராமியக் கல்வெட்டுகள் மிகச் சுருக்கமாகவும், ஒரே வரியில் மூன்று அல்லது நான்கு சொற்களைக் கொண்டதாகவும் இருக்கும். மனித நடமாற்ற முட்புதர்கள் நிறைந்த ஆறுநாட்டான் குன்றின் குகையில் கண்டெடுக்கப்பட்ட பிராமியக் கல்வெட்டானது 40 ஆண்டுகள் படிக்கப்படாமலேயே கிடந்தது. அக்கல்வெட்டில் முதலிலும் முடிவிலும் ஓரிரு எழுத்துகள் நீங்கலாக ஏனைய எழுத்துகள் எவையென புரிந்துகொள்ள முடியவில்லை. ஆதன் என்ற சொல்லை வைத்தே, இது சேரருடைய கல்வெட்டு என முடிவுக்கு வந்தார்கள். இறுதியாக ஐராவதம் மகாதேவன் அவர்களின் பெருமுயற்சியால், இக்கல்வெட்டு முழுமையாக படிக்கப்பட்டது.
- **கல்வெட்டு கூறும் வரலாறு:**

  ‘அம்மண்ணன் யாற்றூர் செங்காயபன் உறைய்
  கோ ஆதன் செல்லிரும் பொறை மகன்
  பெருங் கடுங்கோன் மகன் (இ)ளங்
  கடுங்கோ (இ)ளங்கோ ஆக அறுத்த கல்’

  இங்கு, நான்கு வரிகள் கொண்ட பிராமிய எழுத்துகளில் முதல்வரி, யாற்றூர் என்னும் இடத்தைச் சேர்ந்த சமணத் துறவியான செங்காயபன் வசிக்கும் இடம் இது என்று குறிப்பிடப்பட்டிருந்தது. இரண்டு மற்றும் மூன்றாம் வரிகளில் பெருங்கடுங்கோ, இளங்கடுங்கோ, இளங்கோ என அடுத்து சேர மன்னர்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டிருந்தது. சங்க இலக்கியத்தில் காணப்பட்ட இம்மன்னர்களின் பெயர்கள், முதல்முறையாக ஒரு கல்வெட்டில் காணக்கிடைப்பது இதுவே முதல்முறையாகும்.


Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com

- **முடிவுரை:** புகளூர் கல்வெட்டுச் சார்ந்த தன் ஆய்வு முடிவினை, வரலாற்று பேராசிரியர் திரு.நீலகண்ட சாஸ்திரியிடம் காட்டி, நிறைகுறைகளை அளவிட்டு மெருகேற்றினார். மேலும், அதனை 'தி இந்து' நாளிதழில் சிறுகட்டுரையாக வெளியிட்டார். ஒரு ஆய்வு ஒரு வரலாற்றை கண்டறியும் என்பதை இங்கு நம்மால் அறிந்துகொள்ளமுடிகிறது.

**27. மயிலையார் ஓர் 'ஆராய்ச்சிப் பேரறிஞர்' என்னும் கூற்றினைச் சான்றுகளுடன் கட்டுரைக்க.**

- **பிறப்பும் பணியும்:** மயிலை சீனி.வேங்கடசாமி அவர்கள், சென்னை மயிலாப்பூரில் 16.12.1900ல் பிறந்தவர். தந்தை சித்த மருத்துவர் சீனிவாசன் அவர்களின் பின்பலமும் தமையனின் தமிழ்ப் பின்புலமும் சீனி.வேங்கடசாமியை வரலாற்று ஆய்வாளராக உருவாக்கியது. 25 ஆண்டுகள் தொடக்கப்பள்ளி ஆசிரியராகப் பணியாற்றியவர். பணிக்காலத்தில், விபுலானந்த அடிகள் - திரு.வி.க - தெ.பொ.மீ - ச.த.சற்குணர் போன்றோர்களுடன் ஏற்பட்ட நட்பினைப் பயன்படுத்தி, பல்வேறு இதழ்களில் ஆய்வுக்கட்டுரைகளை வெளியிட்டுள்ளார்.
- **தொடக்ககால ஆய்வுகள்:** 'கிறித்தவமும் தமிழும்' என்னும் நூல், மயிலை.சீனி. வேங்கடசாமியின் முதல் ஆய்வு நூலாகும். சமயக் காழ்ப்புணர்வு இன்றிப் 'பௌத்தமும் தமிழும்', 'சமணமும் தமிழும்' என பல ஆய்வுகளை மேற்கொண்டுள்ளார். வட்டெழுத்து, கோலெழுத்து, பிராமி ஆகியவற்றில் புலமை பெற்றிருந்தார். அதனால், கல்வெட்டுக்களை எளிதாக வாசித்து, 19ம் நூற்றாண்டு மன்னர்கள் குறித்துத் தொடர்ந்து எழுதிவந்தார். பின், களப்பிரர் ஆட்சியில் தமிழர்கள் என்னும் நூலையும் வெளியிட்டுள்ளார்.
- **கலை, கல்வெட்டு ஆய்வுகள்:** ஒரு நிலையில், பல்லவர் மற்றும் சோழர்கால ஓவியங்கள், சித்தன்னவாசல் ஓவியங்கள் குறித்த ஆய்வினை மேற்கொண்டார். கட்டடம், சிற்பம், ஓவியம் குறித்த ஆய்வால், 'தமிழர் வளர்த்த அழகுக் கலைகள்' என்னும் கவின்கலை நூல், தமிழில் முதன்முதலில் வெளிவந்தது. இந்நூல், தமிழக அரசின் முதற்பரிசினைப் பெற்றது. இறைவன் ஆடிய எழுவகைத் தாண்டவம், நுண்கலைகள், இசைவாணர் கதைகள் ஆகியன எழுதியதோடு, நுண்கலைகளுக்குப் படங்களைத் தாமே வரைந்து வெளியிட்டார். இது இவரது கலைத்திறனுக்குச் சான்றாகும். தொல்காப்பியம், சங்க இலக்கியம், கல்வெட்டு ஆகியவற்றை ஆய்வு செய்தும், நூல்களை வெளியிட்டுள்ளார். 'தமிழ்நாட்டு வரலாறு' என்னும் நூல், தமிழக வரலாற்றினைப் பல கோணங்களில் மீட்டுருவாக்கம் செய்தது எனக் கூறலாம்.
- **பன்மொழிப் புலமை:** மலையாளம், கன்னடம், சமஸ்கிருதம், பாலி, ஆங்கிலம் முதலிய மொழிகளைக் கற்றுத்தேர்ந்தவர். தமிழகத்தின் வரலாற்றை அடையாளப்படுத்தியவர். இவருடைய ஆய்வுகள் தமிழுலகுக்கு முதன்மையான ஆய்வாகும். மதுரைப் பல்கலைக்கழகம், 'தமிழ்ப் பேரவைச் செம்மல்' என்றும், அறிஞர் பெருமக்கள், 'ஆராய்ச்சி பேரறிஞர்' என்றும் பட்டங்களை வழங்கிச் சிறப்பித்தனர். தமது ஆய்வால் தமிழுக்கும் தமிழ்நாட்டிற்கும் சுய அடையாளங்களை மீட்டுத் தந்தவர் ஆவார்.

**28. எச்.ஏ.கிருட்டிணனார் 'கிறித்தவக் கம்பர்' என்பதை நும் பாடப்பகுதி வழி நிறுவுக.**

- **முன்னுரை:** இயேசு பெருமானின் வாழ்க்கை வரலாற்றை, தமிழ் மரபுக்குட்பட்டு உருவாக்கப்பட்ட உருவகக் காப்பியமே இரட்சணிய யாத்திரிகம். இக்காப்பியம் எச்.ஏ.கிருட்டிணன் அவர்களால் படைக்கப்பட்டது. அவர் ஏன்? கிருத்துவக் கம்பர் என அழைக்கப்படுகிறார் என்பதைப் பற்றி, நம்பாடப்பகுதியின் உதவியுடன் இங்கு நீண்டு காண்போம்.
- **வழிநூல் - தழுவல்:** வடமொழியில் வால்மீகியால் இயற்றப்பட்ட இராமாயணத்தை முதல் நூலாக்கொண்டு, கம்பரால் இயற்றப்பட்டதே கம்பராமாயணம். அதுபோன்றே, ஜான் பானியன் அவர்களால் ஆங்கிலத்தில் இயற்றப்பட்ட பில்கிரிம்ஸ் புரோகிரஸை முதல் நூலாக்கொண்டு எச்.ஏ.கிருட்டிணனால் இயற்றப்பட்டதே இரட்சணிய யாத்திரிகம். இங்கு, இராமாயணத்தினை தமிழ் மரபுக்குட்பட்டு கம்பராமாயணமாக கம்பர் படைத்துள்ளார். கம்பரைப் போன்றே, பில்கிரிம்ஸ் புரோகிரஸை தமிழ் மரபுக்குட்டுபட்டு, இரட்சணிய யாத்திரிகமாக எச்.ஏ.கிருட்டிணன் படைத்துள்ளார்.
- **அமைப்பு:** கம்பராமாயணம் 6 காண்டப்பிரிவுகளையும் 113 படலங்களையும் கொண்டுள்ளது. அதுபோன்றே, இரட்சணிய யாத்திரகம் 5 பருவங்களையும் 47 படலங்களையும் கொண்டுள்ளது. இங்கு, பெரும்பிரிவுகள் காண்டம் - பருவம் என வேறுபட்டிருந்தாலும், உட்பிரிவுகள் படலம் என ஒத்துப்போகிறது. மேலும், கம்பரின் அடியொற்றியே, எச்.ஏ.கிருட்டிணன் அவர்கள் தன்னுடைய இரட்சணிய யாத்திரிகத்தினை விருத்தத்தில் அமைத்துள்ளார்.


Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com

- **பாத்திர புனைவு:** கம்பராமாயணம், இராமன் என்ற ஒப்பற்றத் தலைவனை அடிப்படையாகக் கொண்டு படைக்கப்பட்டுள்ளது. அதுபோன்றே, இரட்சணிய யாத்திரிகமும் இயேசுவை ஒப்பற்றத் தலைவனாகக் கொண்டு படைக்கப்பட்டுள்ளது. இங்கு, மானுடனாகப் பிறந்து இறைநிலையை இராமன் அடைந்தார் என்கிறார் கம்பர். இராமனைப் போன்றே, இயேசுவும் மானுடனாகப் பிறந்தே இறைநிலையை அடைந்தார் என்கிறார் எச்.ஏ.கிருட்டிணன் அவர்கள்.
- **வனவாசம்:** இவ்விரு நூல்களிலும் காப்பியத் தலைவனுக்கு 'வனவாசம்' வாழ்வின் ஒரு அங்கமாகவே அமைந்துள்ளது. ஆரண்யவாசத்திற்குபின் காப்பியத் தலைவனான இராமன் உச்சநிலையை அடைவதாக கம்பர் சுட்டிக்காட்டியுள்ளார். கம்பரைப் போன்றே, ஆரண்யவாசத்திற்குபின் காப்பியத் தலைவனான இயேசுவும் உச்சநிலையை அடைவதாக எச்.ஏ.கிருட்டினன் சுட்டிக்காட்டுகிறார்.
- **நண்பர்களின் உதவி:** கம்பராமாணயத்தின் ஆரண்யகாண்டத்தில் இராமனுக்கு நண்பர்கள் எந்தெந்தவகையில் உதவியாக இருந்தார்கள் என்பதை அறிந்துகொள்ள முடிகிறது. அதுபோன்றே, இரட்சணிய யாத்திரிகத்திலும் ஆரண்யப் பருவத்தில், இயேசுபெருமானின் நண்பர்கள் எவ்வாறு உதவியாக இருந்தார்கள் என்பதை அறிந்துகொள்ள முடிகிறது. இங்கு, கம்பரைப் போன்றே எச்.ஏ.கிருட்டிணனும் நண்பர்களின் உறுதுணையை விவரித்துள்ளார்.
- **பாலை - மதம்:** திணைக்குரிய இடப்பெயரில் பாலைத்திணை, தமிழ் நிலத்திற்குரியது அன்று. ஆனால், கம்பர் பாலையைக் குறிப்பிட்டதுபோன்றே, எச்.ஏ.கிருட்டிணன் அவர்களும் பாலை திணையினைக் குறிப்பிட்டு பாடல்களை அமைத்துள்ளார். மேலும், இந்து மதத்தின் கருத்தியல்களை கம்பராமாயணம் எடுத்துக்கூறுவது போன்றே, கிருத்துவ மதத்தின் கருத்தியல்களை இரட்சணிய யாத்திரிகம் எடுத்துக்கூறுகிறது.
- **முடிவுரை:** கம்பரால் இயற்றப்பட்ட கம்பராமாயணத்தின் கதை களத்தோடும், கருத்தியலோடும், கவிதை நயத்தோடும், பாத்திரப்புனைவு - பாடலமைவு - பெரும்பிரிவு உட்பிரிவு - மானுடநிலை இறைநிலை என பல்வேறுகூறுகளில் இரட்சணிய யாத்திரிகம் ஒத்துப்போகும் வகையில் அமையப்பெற்றதால், எச்.ஏ.கிருட்டிணன் அவர்கள் கிருத்துவக் கம்பர் என அழைக்கப்படுகிறார்.

## நெடுவினா – விடை (6 மதிப்பெண்கள்)

1) "எச்.ஏ.கிருட்டிணனார் கிறித்துவக் கம்பரே" என்பதை நும் பாடப்பகுதி வழி நிறுவுக.

- ❖ கம்பர், திருத்தக்கத் தேவரைப் பின்பற்றி விருத்தப்பாவில் இராமாயணம் பாடினார். இவ்வகையில் எச்.ஏ.கிருட்டினானார், கம்பரை அடியொற்றி விருத்தப்பாக்கள் வாயிலாக இயேசு பெருமானின் வாழ்வைக் காவியமாக்கினார்.
- ❖ கம்பராமாயணம் போன்றே, இரட்சணிய யாத்திரிகத்தைப் பெருங்காப்பியமாய் இயற்றியுள்ளார்.
- ❖ இந்நூலின் செய்யுள் நடையானது, கம்பராமாயணச் செய்யுள் நடையையும், அதன் அமைப்பையும் அதிகம் பின்பற்றி எழுதப்பட்டுள்ளது.
- ❖ கம்பர், வடமொழிக் காப்பியமான இராமாயணத்தைத் தமிழ் மரபுக்கு ஏற்பத் தமிழில் பாடிப் பெருமைப்படுத்தினார். எச்.ஏ.கிருட்டிணனார் ஆங்கில நூலைத் தழுவி, இயேசு பெருமானின் வாழ்வைத் தமிழில் இரட்சணிய யாத்திரிகம் எனப் படைத்தார்.
- ❖ கம்பரின் பாடல்களைப் போல கிருட்டிணனாரின் பாடல்களும் எளிதில் கற்கும் வகையில் பாடப்பட்டுள்ளன.
- ❖ பல இடங்களில் கிருட்டிணனாரின் கற்பனை, கம்பரையே நமக்கு நினைவூட்டுகிறது.
- ❖ எனவே இவரின் கவிதை நயம், கவிதை நடை ஆகியவற்றை அறிந்த தமிழ் இலக்கிய ஆர்வலர்கள் மனம் திறந்து இவரைக் "கிறித்துவக் கம்பர்" எனப் பாராட்டி மகிழ்ந்தனர்.

**29. கோடைமழை கதை வாயிலாக விளக்கப்படும் மனித நேயப் பண்புகளை விளக்குக.**

- **முன்னுரை:** பெற்றோரை இழந்து தவிக்கும் குழந்தை. குழந்தைக்காகவே வாழ்ந்துவரும் பெரியவர். பெரியவரின் கஷ்டத்தை போக்க நினைக்கும் பாபு. குழந்தையுடன்சேர்த்து பெரியவரையும் தத்தெடுக்கும் தம்பதி என மனிதநேயப் பண்புகளைப் படரவிட்டுள்ளார் படைப்பாளர் சாந்தா தத் அவர்கள்.
- **பாசப்பிணைப்பு:** பெரியவர் ஆறுமுகம் மனைவியை இழந்தவர். சில மாதங்களுக்கு முன்தான் தன் மகனையும் இழந்தவர். வயதான தந்தையையும் பிஞ்சுக் குழந்தையையும் பார்த்துக் கொள்ள வேண்டிய மகன், மனைவியின் பிரிவைத் தாங்க முடியாமல் விஷம் குடித்து இறந்துபோனான். யாருமற்ற நிலையில் பேரனின் எதிர்காலத்திற்காகவே வாழ்ந்தாகவேண்டிய கட்டாயத்திற்கு தள்ளப்பட்டார் பெரியவர் ஆறுமுகம்.

- **பாபுவின் மனிதநேயம்:** ஆறுமாதக் குழந்தையை வைத்துக்கொண்டு, பெரியவர் ஆறுமுகம் படும் கஷ்டத்தை தினந்தினம் பார்ப்பவன் பாபு. பெரியவரின் கஷ்டத்தை போக்க, தனக்குத்தெரிந்த ஒரு தம்பதிக்கு குழந்தையை தத்துக்கொடுத்துவிடலாம் என வழிகாட்டினான். ஆனால், பெரியவரோ அதற்கு ஒத்துக்கொள்ளவில்லை.
- **பெரியவரின் மனமாற்றம்:** ஒரு நாள் குழந்தைக்கு உடல்நிலை சரியில்லாதக் காரணத்தினால் மருத்துவமனைக்கு அழைத்துச்செல்கிறார் பெரியவர். அங்கு, ஒரு தாயின் அரவணைப்பில் இருக்கும் குழந்தையைக் காண்கிறார். தனக்குப்பின், இந்தக்குழந்தையை யார் பார்த்துக்கொள்வார் என்ற எண்ணம் மேலோங்கியது அவருக்கு. தன் பேரக்குழந்தைக்கு இதுபோன்றதொரு ஒரு ஆறுதல் வேண்டும் - அரவணைப்பும் வேண்டும் என முடிவெடுக்கிறார். அதை, பாபுவிடமும் தெரிவித்துவிடுகிறார்.
- **தத்தெடுத் தம்பதியரின் பண்புநலம்:** பாபு கூறிய தம்பதியர்கள் குழந்தை தத்தெடுக்கொண்டார்கள். குழந்தையை விட்டுவிட்டு, பெரியவர் தனியே வருந்துவார் எனக்கருதி அவரையும் தங்களுடன் வருமாறு வேண்டிக்கொண்டார்கள். இதைக்கேட்ட பெரியவர் கண்கலங்கி கைக்கூப்பி வணங்கினார்.
- **முடிவுரை:** மனித நேயத்தை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு சிறுகதை எழுதுபவர் பெண்படைப்பாளரான சாந்தா தத் அவர்கள். இக்கதையில் வரும் கதாமாந்தர்களின் மனித நேயப் பண்புகளை நம் கண்முன்னே படம் பிடித்துக் காட்டியுள்ளது.

## 2 மதிப்பெண் வினாகள் - இலக்கணம்

**1. பிழையான தொடரைக் கண்டறிக.**

அ. காளைகளைப் பூட்டி, வயலை உழுதனர்.

ஆ. மலைமீது ஏறி, கல்வெட்டுகளைக் கண்டறிந்தனர்.

இ. காலையில் பூத்த மல்லிகை, மனம் வீசியது. மழைநீரில் மூழ்கின.

**2. பேச்சுத் தமிழில் அமைந்த தொடரைக் கண்டறிக.**

அ. அவருக்கு நல்லது கெட்டது நல்லாத் தெரியும்.

ஆ. புத்தகக் கண்காட்சி நடைபெறுகிறது.

இ. வறட்சி, எல்லா இடங்களையும் பாதித்துள்ளது. விறலியரைப்போல் ஆடுகின்றன.

**3. முடிந்தால் தரலாம், முடித்தால் தரலாம் - இவ்விரு சொற்றொடர்கள் உணர்த்தும் பொருளை அறிந்து தொடர் அமைக்கவும்.**

- முடிந்தால் தரலாம்: ஏழைகளுக்கு, உன்னால் முடிந்தால் தரலாம்.
- முடித்தால் தரலாம்: உன்னிடமுள்ள உரைநடை புத்தகத்தை, நீ படித்து முடித்தால் தரலாம்.

**4. தமிழில் பிழையின்றி எழுதுவற்கு மேற்கொள்ள வேண்டிய முயற்சிகள் யாவை?**

- பேசுவது போலவே எழுதுதல் கூடாது.
- வேகமாக எழுதுதல் கூடாது.
- கெ, கே, கொ, கோ - போன்ற கொம்புடைய எழுத்துகளில் குறில், நெடில் வேறுபாடுகளை அறிந்து எழுதிப் பழகுதல் வேண்டும்.
- எழுத்துகளின் ஒலிப்புமுறை, வரி வடிவம், அமைவிடம் ஆகியவற்றை நன்கறிந்து எழுதுதல் வேண்டும்.
- ந,ண,ன - ற,ர - ல,ள,ழ ஆகிய எழுத்துகளின் ஒலி வேறுபாடுகளை அறிந்து பயன்படுத்துதல் வேண்டும்.
- தொடக்கத்தில் சில காலம் வாய்விட்டோ அல்லது மனதிற்குள்ளோ உச்சரித்தபடியே எழுதிப் பழக வேண்டும்.

**5. எழுதும்பொழுது ஏற்படும் பிழைகளை எத்தனை வகைகளாகப் பிரிக்கலாம்? அவை யாவை?**

- எழுதும்பொழுது ஏற்படும் பிழைகளை 4 வகைகளாகப் பிரிக்கலாம்.
- அவை: 1.எழுத்துப்பிழை 2.சொற்பொருட்பிழை 3.சொற்றொடர்ப்பிழை 4.பொதுவான பிழை.

**6. தமிழில் திணைப்பாகுபாடு** பொருட்குறிப்பு **அடிப்படையில் பகுக்கப்பட்டுள்ளது.**

**7. 'உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே - அஃறிணை என்மனார் அவரல பிறவே' - இந்நூற்பா இடம்பெற்ற இலக்கணநூல்** தொல்காப்பியம்.

**8. யார்? எது? ஆகிய வினாச்சொற்கள் பயனிலையாய் அமைந்து, உணர்த்தும் திணைகள் முறையே** உயர்திணை, அஃறிணை.


Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com

**9. பொருத்தி விடை தேர்க.**

அ. அவன், அவள், அவர் - 1. உளப்படுத்தாத் தன்மைப் பன்மை.
ஆ. நாங்கள் முயற்சி செய்வோம் - 2. உளப்பாட்டுத் தன்மைப் பன்மை.
இ. நாம் முயற்சி செய்வோம் - 3. தன்மைப் பன்மைப் பெயர்கள்.
ஈ. நாங்கள், நாம் - 4. பதிலிடு பெயர்கள். **(விடை: 4,1,2,3)**

**10. மொழியின் சொற்றொடர் அமைப்பை விளங்கிக் கொள்வதற்கும் பயன்படுத்துவதற்கும் உதவுவன எவை?** திணை, பால், எண், இடம் போன்றவை.

**11. உயர்திணைப் பன்மைப் பெயர்கள், பன்மை விகுதி பெற்றுவருமாறு இரண்டு தொடர்களை எழுதுக.**

- பத்து மாணவர்கள் தேர்வு எழுதினார்கள்.
- இரண்டு வீரர்கள் போர் செய்தார்கள்.

**12. தொடர்களைச் சரியாக மாற்றி அமைக்க.**

- கோவலன் மதுரைக்குச் சென்றது.
  கோவலன் மதுரைக்குச் சென்றான்.
- பறவைகள் நெல்மணிகளை வேகமாகக் கொத்தித் தின்றது.
  பறவைகள் நெல்மணிகளை வேகமாகக் கொத்தித் தின்றன.
- குதிரையும் யானையும் வேகமாக ஓடியது.
  குதிரையும் யானையும் வேகமாக ஓடின.

**13. பொருள் குழப்பமின்ற எழுதுவதற்குரிய காரணங்களுள் பொருந்துவதைத் தேர்க.**

அ. தேவையான இடங்களில் இடைவெளி விடாமல் எழுதுதல்.
ஆ. தேவையற்ற இடங்களில் இடைவெளி விட்டு எழுதுதல்.
இ. நிறுத்தக் குறிகளை உரிய இடங்களில் இட்டு எழுதுதல்.
ஈ. வல்லின மெய்களைத் தேவையான இடங்களில் இடாமல் எழுதுதல்.

**14. வல்லினம் மிகு, மிகாத் தொடர்களின் பொருளறிந்து பொருத்துக.**

அ. பாலை பாடினான் - 1. தேரை என்னும் உயிரினத்தைப் பார்த்தான்.
ஆ. பாலைப் பாடினான் - 2. தேரினைப் பார்த்தான்.
இ. தேரை பார்த்தான் - 3. பாலினைப் பாடினான்.
ஈ. தேரைப் பார்த்தான் - 4. பாலைத்திணை பாடினான். **(4,3,1,2)**

**15. மாணவர்கள் வரிசையில் நின்று அறிவியல் கண்காட்சியைக் கண்டனர் - வேறொரு பொருள் அமையுமாறு சொற்களைச் சேர்த்துத் தொடரமைக்க.**

- மாணவர்கள் வரிசையில் நின்று அறிவியல் கண்காட்சியைக் கண்டனர்.
- மாணவர்கள்வரிசையில் நின்று, அறிவியல் கண்காட்சியைக் கண்டனர்.

**16. கீழ்க்காணும் சொல்லுருபுகளைப் பிரித்தும் சேர்த்தும் இருவேறு தொடர்களை அமைக்க.**

- முன் : அவன் முன்வந்து கூறினான்.
  : அவன்முன் வந்து கூறினான்.
- தானே : கண்ணன் தானேஎழுதுவதாகச் சொன்னான்.
  : கண்ணன்தானே எழுதுவதாகச் சொன்னான்.
- கொண்டு : வாழைப்பழத்தைக் கொண்டு சென்றான்.
  : வாழைப்பழத்தைக்கொண்டு செய்தான்.
- விட்டான் : மீனைப் பிடித்துவிட்டான்.
  : மீனைப்பிடித்து விட்டான்.

**17. காற்புள்ளி இடாமல் எழுதுவதனால் ஏற்படும் பொருள் மயக்கத்திற்குச் சான்று தருக.**

- அவள், அக்காள் வீட்டிற்குச் சென்றாள்.
- அவள் அக்காள், வீட்டிற்குச் சென்றாள்.

**18. திருவளர்ச்செல்வன், திருவளர்செல்வன் - இவற்றில் சரியான தொடர் எது? இலக்கண விதி யாது?**

- திருவளர் செல்வன் என்பதே சரியான தொடர்.
- இலக்கண விதி: வினைத்தொகைச் சொல்லுக்கிடையில் வல்லின ஒற்று மிகாது.


Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com

**19. சலசல, வந்து வந்து, கலகல, விம்மி விம்மி - இவற்றில் இரட்டைக் கிளவித் தொடர்களை எழுதி அவற்றை எழுதும் முறையைக் கூறுக.**

- இரட்டைக் கிளவித் தொடர்கள்: சலசல, கலகல
- இரட்டைக் கிளவிகளை எழுதும் முறை: இரட்டைக் கிளவிகளைச் சேர்த்தே எழுதவேண்டும். பிரித்தல் கூடாது. பிரித்தால் பொருள் தராது.

**20. வெண்பாவிற்குரிய ஓசை செப்பலோசை. வெண்பா வன்பா என அழைக்கப்படும்.**

**21. தளை என்பதற்குரிய பொருள் யாது?** கட்டுதல் (அ) பிணித்தல்.

**22. வெண்பாவிற்குரிய தளைகள் யாவை?**

- இயற்சீர் வெண்டளை: மா முன் நிரை - விளம் முன் நேர்
- வெண்சீர் வெண்டளை: காய் முன் நேர்

**23. ஒரு விகற்பம், பல விகற்பம் என்றால் என்ன?**

- ஒரு விகற்பம்: வெண்பாவிற்குரிய நான்கு அடிகளின் முதல்சீரிலும், இரண்டாம் எழுத்து ஒன்றிவந்தால் அஃது ஒரு விகற்பம்.
- பல விகற்பம்: வெண்பாவின் முதலிரு அடிகளில் ஓர் எதுகையும், அடித்த இரு அடிகளில் மற்றொரு எதுகையும் பெற்றுவந்தால் அஃது பல விகற்பம்.

**24. வெண்பாவிற்கான இலக்கணம் யாவை?**

- இயற்சீர் வெண்டளையும் வெண்சீர் வெண்டளையும் பெற்று வரும்.
- ஈரசைச் சீரும் (மாச்சீர், விளச்சீர்) மூவசைச்சீரும் (காய்ச்சீர்) பெற்று வரும்.
- ஈற்றடி முச்சீராகவும் ஏனைய அடிகள் நாற்சீராகவும் பெற்றுவரும்.
- ஈற்றடியின் ஈற்றுச்சீர் நாள், மலர், காசு, பிறப்பு என்ற வாய்பாடுகளில் ஒன்றினைப் பெற்று முடியும்.

**25. வெண்பாவின் எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

- வெண்பா 7 வகைப்படும். அவை,
    1. குறள் வெண்பா (2)
    2. நேரிசை சிந்தியல் வெண்பா (3)
    3. இன்னிசை சிந்தியல் வெண்பா (3)
    4. நேரிசைச் வெண்பா (4)
    5. இன்னிசை வெண்பா (4)
    6. பஃறொடை வெண்பா (5-12)
    7. கலிவெண்பா (13 முதல்)

**26. வெண்பாவிற்கு ஏற்ப அடுத்த சீர் என்னவாக அமைக்கலாம்? பொருத்தமான சீரினைக் கொண்டு கோடிட்ட இடங்களை நிரப்புக.**

அ. அன்பே தகளியாய் (ஆர்வமாய் - தகளியாய்)
ஆ. வான்மழை தூறலின் (தூறலின் - பொழிந்திடின்)
இ. கண்ணிரண்டும் இல்லார் (இலாதார் - இல்லார்)
ஈ. வெண்ணிலவு காய்கிறது (காய்கிறது - ஒளிர்கிறது)
உ. வெய்யோன் ஒளிர்ந்திட (காய்ந்திட - ஒளிர்ந்திட)

**27. மூன்றாவது சீர் அமைத்து எழுதுக.**

அ. கல்வி கரையில கற்பவர்.
ஆ. கல்லாரே ஆயினும் கற்றாரை.
இ. நல்லவை செய்யின் நலமேயாம்.
ஈ. அவமதிப்பும் ஆன்ற குணனும்.
உ. உண்ணாது நோற்பார் பெரியார்.

**28. பொருத்துக.**

| | | |
|---|---|---|
| அ. மாச்சீர் | - 1. கருவிளம், கூவிளம். | |
| ஆ. காய்ச்சீர் | - 2. நாள், மலர். | |
| இ. விளச்சீர் | - 3. தேமாங்காய், புளிமாங்காய். | |
| ஈ. ஓரசைச்சீர் | - 4. தேமா, புளிமா | **(விடை: அ-4, ஆ-3, இ-1, ஈ-2)** |

**29. படிமம் என்பதின் பொருள்** காட்சி.

**30. 'காலை இளம் வெயில் நன்றாக மேய, தும்புறுத்துத் துள்ளிவரும் புதுவெயில்' இக்கவிதையில் வினைப்படிமம் பயின்று வந்துள்ளது.**

**31. கூற்று : உவமை உருவகம் போலப் படிமும் வினை, பயன், மெய், உரு ஆகியவற்றின் அடிப்படையில் தோன்றும்.**
**காரணம்: எவ்வகையான படிமமாக இருந்தாலும், அது காட்சி வழியே கருத்தினை விளக்குவதில்லை.**
விடை: கூற்றும் சரி, காரணமும் சரி.

**32. மெய்ப் படிமத்திற்குரிய பாடலைத் தேர்வு செய்க.**

அ. நெருஞ்சிக் கட்கின் புதுமலர் முட்பயந் தாங்கு......

ஆ. கட்டில் நிணக்கும் இழிசினன் கையது......

இ. பாசிமணிக் கண்ணும் சிவப்புக் கோட்டுக் கழுத்தும்.........

ஈ. வெந்தாறு பொன்னின் அந்தி பூப்ப.........

**33. மாந்தோப்பு, வசந்தத்தின் பட்டாடை உடுத்தியிருக்கிறது - இதில், எவ்வகைப் படிமம் வெளிப்படுகிறது? (இதில் உள்ளார்ந்த ஒப்பீடான மெய்ப் படிமம் வெளிப்படுகிறது)**

**34. இணையைத் தெரிந்துகொள்வோம்.**

அ. நெருஞ்சிக் கட்கின் புதுமலர் முட்பயந் தாங்கு...... - பயன் படிமம்

ஆ. கட்டில் நிணக்கும் இழிசினன் கையது...... - வினை படிமம்

இ. பாசிமணிக் கண்ணும் சிவப்புக் கோட்டுக் கழுத்தும்......... - மெய்ப் படிமம்

ஈ. வெந்தாறு பொன்னின் அந்தி பூப்ப......... - உருப் படிமம்

**35. படிமம் என்றால் என்ன?**

- விளக்க வந்த ஒரு காட்சியையோ, கருத்தையோ காட்சிப்படுத்திக் காட்டுகிற உத்தியே 'படிமம்' எனப்படும். படிமம் என்ற சொல்லுக்கு காட்சி என்று பொருள்.

**36. படிமம் எவற்றின் அடிப்படையில் தோன்றும்?**

- வினை, பயன், மெய் (வடிவம்), உரு (நிறம்)

**37. ஐம்பெருங்காப்பியம் என்னும் சொற்றொடரைத் தம் உரையில் குறிப்பிட்டவர்.** (மயிலைநாதர்)

**38. கூற்று 1: காப்பியம் என்னும் சொல் காப்பு + இயம் எனப் பிரிந்து, 'மரபைக் காப்பது, இயம்புவது, வெளிப்படுத்துவது, மொழியைச் சிதையாமல் காப்பது' என்றெல்லாம் பொருள் தருகிறது.**
**கூற்று 2: ஐம்பெருங்காப்பியத்தில் ஒன்று நீலகேசி** (கூற்று 1 சரி, கூற்று 2 தவறு)

**39. சரியானவற்றைப் பொருத்துக.**

அ. காதை - 1). கந்தபுராணம்
ஆ. சருக்கம் - 2). சீவக சிந்தாமணி
இ. இலம்பகம் - 3). சூளாமணி
ஈ. படலம் - 4). சிலப்பதிகாரம் **(விடை: 4,3,2,1)**

**40. தவறான இணையைக் குறிப்பிடுக.**

அ. விருத்தப்பா - நாலடியார்
ஆ. ஆசிரியப்பா - அகநானூறு
இ. கலிவெண்பா - தூது
ஈ. குறள்வெண்பா - திருக்குறள் **(விடை: விருத்தப்பா - நாலடியார்)**

**41. காப்பியம் எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

- காப்பியம் 2 வகைப்படும்.
- அவை, 1. பெருங்காப்பியம் 2. சிறுகாப்பியம்

**42. காப்பியத்தைக் குறிக்கும் பிறபெயர்கள் யாவை?**

- அகலக்கவி, மகாகாவியம், சரிதம், புராணம், மாக்கதை, கதைச் செய்யுள், தொடர்நிலைச் செய்யுள், பாட்டுடைச் செய்யுள்

**43. காப்பியச் சிற்றுறுப்புகள் சிலவற்றை எழுதுக.** (காதை, சருக்கம், இலம்பகம், படலம்)

**44. பாவிகம் - விளக்குக.**

- பாவிகம் என்பதே காப்பியப் பண்பே - தண்டி (89).
- காப்பியத்தில் கவிஞன் குறிப்பிட விரும்பும் அடிப்படைக் கருத்தே 'பாவிகம்' எனலாம்.


Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com

**45. பெருங்காப்பியம் - சிறுகாப்பியம் அடிப்படைக் கருத்தினை வேறுபடுத்துக.**

- பெருங்காப்பியம் : அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கு உறுதிப்பொருட்களை அடிப்படையாகக் கொண்டு அமைவது.
- சிறுகாப்பியம் : அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கு உறுதிப்பொருட்களில் ஒன்று குறைந்தோ அல்லது ஒன்றினை அடிப்படையாகக் கொண்டோ அமைவது.

**46. பின்வருவனவற்றுள் தொன்மத்திற்குப் பொருந்தாத ஒன்றினைத் தேர்க.**

அ. கர்ணன் தோற்றான் போ.
ஆ. வயதில் சிறியவள், ஆனாலும் தலைவி.
இ. இந்த நாரதரிடம் எச்சரிக்கையாக இரு.
ஈ. இந்தா போறான் தருமன்

**47. தொன்மம் பற்றிய கூற்றுகளுள், தவறான ஒன்றைத் தேர்க.**

அ. உருவாக்கப்பட்டு இறுகிவிட்ட கருத்து வடிவங்கள்.
ஆ. பழங்கதையைக் கொண்டு, கருத்தை விளக்குவது.
இ. நம்ப முடியாததுபோலத் தோன்றும் நிகழ்ச்சிகள் செய்திகள்.
ஈ. விளங்காத கருத்துகளைப் பழமொழியின்மூலம் விளக்குவது.

**48. சாபவிமோசனம், அகலிகை - கதைகளில் தொன்மங்களைப் பயன்படுத்தியவர்?** (புதுமைப்பித்தன்)

**49. பண்புக்குறியீடுகளைக் கதைமாந்தர்களோடு பொருத்துக.**

| | |
|---|---|
| அ. அறம் | - 1. கர்ணன் |
| ஆ. வலிமை | - 2. மனுநீதிச்சோழன் |
| இ. நீதி | - 3. பீமன் |
| ஈ. வள்ளல் | - 4. தருமன் |

**(விடை: 4,3,2,1)**

**50. தொன்மம் - விளக்குக.**

- தொன்மம் என்றால் பழங்கதை, புராணம் என்றெல்லாம் பொருள்படும். தொன்மத்தை இலக்கிய உத்தியாகவே குறிப்பிடுகிறார் தொல்காப்பியர்.
- காலம் காலமாக உருவாக்கப்பட்டு இறுகிவிட்ட கருத்து வடிவங்களே தொன்மம் எனப்படுகிறது.

**51. பேச்சு வழக்கில் தொன்மம் வெளிப்படும் இரு தொடர்களை எழுதுக.**

- இவன் பெரிய அரிச்சந்திரன்.
- இவரு பெரிய தர்மர்.

**52. உள் மனம் ஒரு பாற்கடல் - அதைக் கடைந்தால் - அமுதம் மட்டுமல்ல - ஆலகாலமும் வெளிப்படும் என்பதை - நீ அறிவாய் அல்லவா? இக்கவிதையில் வெளிப்படும் தொன்மம் யாது?**

- இக்கவிதையில் வெளிப்படும் தொன்மம்: பாற்கடல், அமுதம், ஆலகாலம்.
- விளக்கம்: அமுதம் வேண்டி கடையப்பட்ட பாற்கடலில் ஆலகாவ விஷம் வெளிப்பட்டது. இங்கு, முரண்பட்டதை விளக்க தொன்மம் பயன்பட்டது.

**53. குறியீடுகளைப் பொருத்துக.**

| | |
|---|---|
| அ. பெண் | - 1. சமாதானம் |
| ஆ. புறா | - 2. வீரம் |
| இ. தராசு | - 3. விளக்கு |
| ஈ. சிங்கம் | - 4. நீதி |

(விடை: 3-1-4-2)

**54. கூற்று : 19ம் நூற்றாண்டில் குறியீட்டியம் ஓர் இலக்கியக் கோட்பாடாக உருப்பெற்றது.**
**காரணம் : பொதலேர், ரைம்போ, வெர்லேன், மல்லார்மே முதலானவர்கள் குறியீட்டியத்தை வளர்த்தார்கள்.** (விடை: கூற்றும் சரி, காரணமும் சரி)

**55. சங்க இலக்கியத்தில், அகத்திணை மாந்தர்களின் உள்ளத்து உணர்வுகளைக் குறிப்பாக உணர்த்தும் குறியீடுகள்** உள்ளுறை உவமை.

**56. 'திட்டம்' என்னும் தலைப்பில் வரங்கள் சாபங்கள் ஆகுமென்றால் இங்கே தவங்கள் எதற்காக? என்று எழுதப்பட்டுள்ள கவிதையில் 'வரம்' எதற்குக் குறியீடாகிறது?** (அமுதசுரபி)

**57. குறியீடு என்றால் என்ன?**

- ஒன்றை மறைத்துச் சொல்லவும், மிகுத்துச் சொல்லவும், அழுத்திச் சொல்லவும் பயன்படுகிற இலக்கிய உத்தியே, குறியீடு எனப்படும்.

**58. குறியீட்டு உத்தியில் ஒரு புதுக்கவிதை எழுதுக.**


Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com

- இன்னும்
  சாவித்திரி சத்தியவானை
  மீட்கச் செல்கிறாள்
  மதுபானக் கடைக்கு

**59. வியர்வைக் கவிதையில் வெளிப்படும் குறியீடுகளைக் குறிப்பிடுக.**

- வியர்வைத்துளி - ஆதிரைப்பருக்கை
- செழிப்பு - அமுதசுரபி.

**60. குறியீட்டு உத்தியின் அடிப்படை இலக்கணங்களை எழுதுக.**

- சுட்டிய பொருளுக்கும் குறியீட்டுப் பொருளுக்கும் ஏதேனும் ஒரு தொடர்பு இருத்தல் வேண்டும்.
- சுட்டும் பொருளானது, அனைவரும் அறிந்த ஒன்றாக இருத்தல் வேண்டும்.
- குறியீட்டுப் பொருள் நுண்ணிய முறையில் வெளிப்படுத்தப்பட வேண்டும்.

## மொழிப்பயிற்சி பகுதி

**1. உவமைத் தொடர்களைச் சொற்றொடர்களில் அமைத்தெழுதுக.**

- **தாமரை இலை நீர்போல:** சாதுக்கள், 'தாமரை இலை நீர்போல' இல்லற வாழ்வில் பற்றற்றுக் கிடந்தனர்.
- **கிணற்றுத் தவளை போல:** நாட்டு நடப்புகளை அறிந்துகொள்ளாமல் 'கிணற்றுத் தவளை போல' வாழ்வது, அறிவுக்கு அழகல்ல.
- **எலியும் பூனையும் போல:** நானும் என் தங்கையும் 'எலியும் பூனையும் போல' எப்பொழுதும் சண்டையிட்டுக் கொள்வோம்.
- **அச்சாணி இல்லாத தேர்போல:** போதிய ஆசிரியர்கள் இல்லாததால் மாணவர்களின் கல்வியானது 'அச்சாணி இல்லாத தேரபோல' தள்ளாடுகிறது.
- **உள்ளங்கை நெல்லிக்கனி போல:** மரம் வளர்த்தால் மழைவரும் என்பது 'உள்ளங்கை நெல்லிக்கனி போல' யாவரும் அறிந்த ஒன்றே.

**2. குறிப்புகளில் மறைந்திருக்கும் தமிழறிஞர்களைக் கண்டுபிடிப்போம்.**

- தமிழறிஞர் - முதலிரு எழுத்துகளால் மறைக்கலாம். (மறைமலை அடிகள்)
- தாய்மொழி - ஈற்றிரு எழுத்துகள் வெளிச்சம் தரும். (தமிழ் ஒளி)
- சிறுகதை ஆசிரியர் - முதல்பாதி நவீனம். (புதுமைப்பித்தன்)
- முன்னெழுத்து அரசன் - பின்னெழுத்து தமிழ் மாதம் (கோதை)
- கவிஞர் - ஈற்றிரு சொல்லால் அணிகலன் செய்யலாம். (கவிமணி)

**3. தமிழாக்கம் தருக.**

- **Learning is a treasure that will follow its owner everywhere.**
  கற்றோருக்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு
- **A new langusge is a new life.**
  ஒரு புதியமொழி என்பது, ஒரு புதிய வாழ்க்கை போன்றது.
- **If you want people to understand you, speak their language.**
  மக்கள் உன்னை புரிந்துகொள்ள வேண்டுமானால், அவர்களின் மொழியில் நீ பேசு.
- **Knowledge of languages is the doorway to wisdom.**
  மொழிகளின் அறிவே, ஞானத்தின் வழித்தடம்.
- **The limits of my language are the limits of my world.**
  என் மொழியின் எல்லையே, என் உலகத்தின் எல்லை.

**4. மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.**

- **தலை, தளை, தழை :** தழையை தளைப்படுத்தி தலையில் சுமந்துவந்தான்.
- **கலை, களை, கழை :** கழையில் களை பறிப்பது ஒருவித கலை.


Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com

- **அலை, அளை, அழை:** அளையில் புகுந்த பாம்பினைக்கண்டு அலறி அழைக்கும் முன்பே, மக்கள் அலையலையாய் ஓடிவந்தார்கள்.
- **விலை, விளை, விழை:** விளைந்த நெல்லை, நல்ல விலைக்கு விற்க விவசாயி விழைந்தார்.

**5. புதிர்க்கேற்ற விடையை அறிக.**

- அடைமழை பெய்த அடுத்த நாள் படைபடையாய் வந்ததாம் பரங்கி நாட்டு விமானம் எதிரி சுடாமலேயே இறகொடிந்து இறந்ததாம் - என்ன? **(ஈசல்)**
- தண்ணீரும் மழையும் இல்லாமல் பயிர் பச்சையாய் இருக்கிறது, பாக்கு வெற்றிலை போடாமல் வாய் சிவப்பாய் இருக்கிறது? - என்ன? **(பச்சைக்கிளி)**

**6. வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.**

- **என்னுடைய நம்பிக்கை முழுவதுமே புதியத் தலைமுறை மீதுதான் அவர்கள் எல்லா பிரச்சினைகளையும் ஒரு சிங்கத்தை போல எதிர்கொண்டுத் தீர்ப்பார்கள்.**
  என்னுடைய நம்பிக்கை முழுவதுமே புதிய தலைமுறை மீதுதான் அவர்கள் எல்லாப் பிரச்சினைகளையும் ஒரு சிங்கத்தைப் போல எதிர்கொண்டு தீர்ப்பார்கள்.
- **எத்தனை முறை நீ மற்றவர்கள் முன்னேறி செல்வதனை கண்டு ஒன்றும் செய்வதறியாது நம்பிக்கையின்றி துன்புறுவாய். நிறைய தன்னம்பிக்கை கொள்.**
  எத்தனை முறை நீ மற்றவர்கள் முன்னேறிச் செல்வதனைக் கண்டு ஒன்றும் செய்வதறியாது நம்பிக்கையின்றித் துன்புறுவாய். நிறைய தன்னம்பிக்கைக் கொள்.
- **நம் வாழ்க்கையின் தரம் நமது கவனத்தின் தரத்தை பொறுத்திருக்கிறது. புத்தகம் படிக்கும்பொழுது கூர்ந்துக் கவனம் அறிவை பெறுவதற்கும் வளர்ப்பதற்குமான அடிப்படை தேவையாகும்.**
  நம் வாழ்க்கையின் தரம் நமது கவனத்தின் தரத்தைப் பொறுத்திருக்கிறது. புத்தகம் படிக்கும்பொழுது கூர்ந்து கவனம் அறிவைப் பெறுவதற்கும் வளர்ப்பதற்குமான அடிப்படைத் தேவையாகும்.
- **மாணவர்கள் பெற்றோர்களை தமது நண்பர்களாக பாவித்து நட்புக் கொள்ள வேண்டும். தமது இன்ப துன்பங்களை பெற்றோர்களுடன் பகிர்ந்துக் கொள்ள வேண்டும்.**
  மாணவர்கள் பெற்றோர்களைத் தமது நண்பர்களாகப் பாவித்து நட்பு கொள்ள வேண்டும். தமது இன்ப துன்பங்களைப் பெற்றோர்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும்.
- **ஆசிரியருக்கு கீழ்படிதல் என்னும் குணம், உண்மையானவற்றை தெரிந்துக் கொண்டு, அறியாமையினை அகற்றி பல நல்லனவற்றை கற்று கொடுக்கும்.**
  ஆசிரியருக்குக் கீழ்படிதல் என்னும் குணம், உண்மையானவற்றைத் தெரிந்து கொண்டு, அறியாமையினை அகற்றிப் பல நல்லனவற்றைக் கற்றுக் கொடுக்கும்.

**7. தொடரிலுள்ள பிழைகளை நீக்கி எழுதுக.**

- **நம் மானிலம் இந்த ஆண்டு வரட்சியால் பாதிக்கப்பட்டது.**
  நம் மாநிலம் இந்த ஆண்டு வறட்சியால் பாதிக்கப்பட்டது.
- **எங்கள் ஊரில் நூலகக் கட்டிடம் கட்ட அறசு நிதி ஒதுக்கியது.**
  எங்கள் ஊரில் நூலகக் கட்டடம் கட்ட அரசு நிதி ஒதுக்கியது.
- **ரங்கன் வெங்கலப் பாத்திரக்கடை வைத்திருக்கிறார்.**
  ரங்கன் வெண்கலப் பாத்திரக்கடை வைத்திருக்கிறார்.
- **மானம் பார்த்த பூமியில் பயிறு வகைகள் பயிரிடப்படுகின்றன.**
  வானம் பார்த்த பூமியில் பயறு வகைகள் பயிரிடப்படுகின்றன.
- **அப்பசி அடைமழையில் ஊருனி நிறைந்தது.**
  ஐப்பசி அடைமழையில் ஊருணி நிறைந்தது.
- **இன்னிக்கு சாயங்காலம் கபடி போட்டி நடைபெறும்.**
  இன்றைக்கு சாயுங்காலம் கபடி போட்டி நடைபெறும்.

**8. சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் பொருள் கொள்க.**

- **பலகை** : பலகையில் அமர்ந்தேன்.
  பல கைகள் ஒன்றிணைந்தால், வெற்றி நிச்சயம்.

www.Padasalai.Net www.CBSEtips.in

- **தாமரை** : குளத்தில் தாமரையைப் பார்த்தேன்.
  காட்டில் தா மரையைப் பார்த்தேன்.
- **கோவில்** : யாழினி கோவிலுக்கு சென்றாள்.
  கோ வில் சிறந்தவன் ராசராசன்.
- **வெங்காயம்:** சிறிய வெங்காயம் உடலுக்கு நல்லது.
  போரில் சில வீரர்கள் மட்டும், வெங்(ம்)காயம் பட்டார்கள்.
- **தலைமை** : தலைமைப் பொறுப்பில் உள்ளவர்கள் நேர்மையாக இருத்தல் வேண்டும்.
  தலை(க்கு)மை பூசி, நரைமுடியை மறைப்பார்கள் சிலர்.

**9. பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.**

- **இப்ப எனக்குப் புரிஞ்சு போச்சு. நீயும் புரஞ்சிக்கோ.**
  இப்பொழுது எனக்கு புரிந்துவிட்டது, நீயும் புரிந்துகொள்.
- **நிலத்தக் கௌறணும்டா அப்பதான் வகுறு நிறையும்.**
  நிலத்தைக் கிளர வேண்டுமடா! அப்பொழுதுதான் வயிறு நிறையும்.
- **அண்ணைக்கு அவனுக்குப் பணம் குடுத்து ஒதவியிருக்க வேண்டியதான.**
  அன்றைக்கு அவனுக்குப் பணம் கொடுத்து, உதவியிருக்க வேண்டியதுதானே?
- **வூட்டாண்ட வெளையாண்ட கொயந்தையை அப்பா எங்க இஸ்துகினு போனாரு.**
  வீட்டின் அருகில் விளையாடிக் கொண்டிருந்த குழந்தையை, அப்பா எங்கே இழுத்துக்கொண்டு போனார்?
- **புள்ளைக்கு உடம்பு சரியில்லை மூணு நாளா சிரமப்படுது.**
  பிள்ளைக்கு உடம்பு சரியில்லை மூன்று நாட்களாக சிரமப்படுகிறது.
- **ரவைக்கு சித்தப்பன காவலுக்குப் போவ சொல்.**
  இரவுக்கு, சிறிய தந்தையை காவலுக்கு போகச் சொல்.

**10. ஈற்றடி எழுதித் துளிப்பாவை நிறைவு செய்க.**

- பூட்டிய வீட்டிலும் பூத்துச் சிரிக்கிறது <u>முல்லை.</u>
- விழும் மரங்கள் அழியும் காடு <u>பாலை.</u>
- அப்படியென்ன சொல்லியது காற்று, குதித்தாடுகிறது மேகம் <u>தென்றல்.</u>
- பூத்த மலரொன்று பறக்கிறது <u>வண்ணத்துப் பூச்சி.</u>
- வானம் அழுகிறது, பூமி சிரிக்கிறது <u>கார்காலம்.</u>

**11. கீழ்க்காணும் பகுதியைப் படித்துப் பார்த்து, பிறமொழிச் சொற்களைக் கண்டறிந்து தமிழ்ப்படுத்துக.**

**சர்க்கார் கொடுக்கும் சம்பளம் ஜீவனத்துக்குப் போதுமா? அதற்குள் ஜீவனம் நடத்த முடியுமா? என்று அவர் சிந்தித்தது கிடையாது. சிந்திக்க முயன்றதும் கிடையாது. எல்லாம் மாயை உள்ளூர நிற்கும் ஆத்மா மாசுபடவில்லை. தான் வேறு இந்த மாயை வேறு. தான் இந்தப் பிரபஞ்சத்தை ஆட்டிவைக்கும் சக்தியில் ஒரு அம்சம் என்று திடமாக நம்பியிருந்தார். ஏனென்றால், அவரது ஆத்ம விசாரத்தைச் சோதனை போட்டுப் பார்க்க இதுவரை தெய்வத்துக்கோ மனுஷனுக்கோ அவகாசம் கிடைத்ததில்லை. மனுஷ வர்க்கம் முழுவதுமே தன்னைப் படைத்தவனுடைய தன்மையை ஸ்புடம் போட்டுப் பார்ப்பது போல தவறுக்கு மேல் தவறு செய்துகொண்டிருந்தது.**

- சர்க்கார் - அரசாங்கம்
- சம்பளம் - ஊதியம்
- ஜீவனத்துக்கு - வாழ்க்கைக்கு
- ஜீவனம் - வாழ்வு(உயிர்)
- பிரபஞ்சம் - பெருவெளி
- மனுஷனுக்கோ - மனிதனுக்கோ
- மனுஷ வர்க்கம் - மனித இனம்
- ஸ்புடம் போட்டு -நெருப்பில் இட்டு
- அம்சம் - தன்மை
- ஆத்மா - உயிர்
- மாயை - இருப்பதுபோல் தோன்றுவது (கற்பனை)
- ஆத்ம விசாரத்தை - உயிர் பற்றிய கவலை


Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

**12. கீழ்க்காணும் தொடர்களில் அடைப்புக்குள் உள்ள பெயர்ச்சொல்லைத் தொடர்களுக்கு ஏற்றவாறு மாற்றி எழுதுக.**

- கபிலன் திறமையானவர் என்று குமரனுக்குத் (குமரன்) தெரியும்.
- நேற்றுமுதல் அணையின் (அணை) நீர்மட்டம் உயர்ந்து வருகிறது.
- உங்களுக்கு யாரால் (யார்) நம்மை என நினைக்கிறீர்கள்.
- முருகன் வேகமாகச் (வேகம்) சென்றும் பேருந்தைப் பிடிக்க இயலவில்லை.
- நம்முடைய தேவையின் (தேவை) அளவு குறைந்தால் மகிழ்ச்சி பெருகும்.

**13. பொருள் வேறுபாட்டினை அறிந்து தொடர் அமைக்க.**

- **கலம், களம்:** போர்க்களத்தில் புண்பட்ட வீரர்களுக்கு, கலத்தில் நீர் தரப்பட்டது.
- **வலம், வளம்:** நதியின் வலப்புறத்திலுள்ள வயல்கள், நீர்வளத்தால் செழித்திருந்தன.
- **புல், புள்:** புல்லில், புள் இரையைத் தேடியது.
- **உழை, உளை:** வேகமாக ஓடிய உழை, உளையில் சிக்கியது.
- **கான், காண்:** கானகத்திலுள்ள காட்சிகளைக் காண்பது மனதிற்கு மகிழ்ச்சியளிக்கும்.
- **ஊண், ஊன்:** பலர், ஊன் ஊணினை விரும்பி உண்பார்கள்.
- **தின்மை, திண்மை:** பிறருக்கு தின்மை செய்தல்கூடாது என்பதில் திண்மையாக இரு.

**14. கீழ்க்காணும் நான்கு சொற்களைக் கொண்டு தொடர் எழுதுக.**

- **வானம், பற, நிலவு, தொடு** - வானத்தில் பறப்போம், பறந்து நிலவைத் தொடுவோம்.
- **சருகு, விழு, மண், அலை** - சருகுகள் மண்ணில் அலையலையாய் விழுந்தன.
- **விண்மீன், ஒளிர், எரி, விழு** - விண்மீன்கள் ஒளிவீசும் நேரத்தில், எரிகல் ஒன்று பூமியில் விழுந்தது.
- **குதிரை, வேகம், ஓடு, தாவு** - வேகமாக ஓடிய குதிரையில் தாவி ஏறினான் வீரன்.
- **குழந்தை, நட, தளர்நட, விழு** - குழந்தை தளர்நடையிட்டு நடக்கும், அந்நடையில் விழும் பின் எழும்.
- **திரை, காண், கைதட்டல், மக்கள்**- மக்கள், கைத்தட்டி ஆரவாரம் செய்து திரைப்படங்களை காண்கிறார்கள்.

**15. மரபுச் சொற்களை தொடரில் அமைத்து எழுதுக.**

- **ஆற அமர:** ஆற அமர சாட்சிகளை விசாரித்தப்பின்னே, தீர்ப்பினை வழங்கினார் நீதிபதி.
- **ஆணி அடித்தாற் போல:** திருக்குறளில் உள்ள கருத்துகள் யாவும், ஆணி அடித்தாற் போல மாணவர்களின் மனதில் பதிய வேண்டும்.
- **அகலக்கால்:** முதலறிந்து அகலக்கால் வைக்காமல், தொழில் நடத்துவதே சிறந்தது.
- **வழிவழியாக:** எங்கள் குடும்பம், வழிவழியாக விவசாயம் செய்துவருகிறது.
- **கண்துடைப்பு :** அரசியல்வாதிகள் கண்துடைப்புக்காக, வெற்று வாக்குறுதிகளை கொடுப்பார்கள்.

**16. தொடரில் இடம்பெற்றுள்ள மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக.**

- **வாழைக்காட்டில் குயில்கள் அலறிக்கொண்டும் காகங்கள் கூவிக்கொண்டும் இருந்தன.**
  வாழைத்தோட்டத்தில் குயில்கள் கூவிக்கொண்டும், காகங்கள் கரைந்துகொண்டும் இருந்தன.
- **முருகன் சோறு சாப்பிட்டுப் பால் குடித்தான்.**
  முருகன் சோறு உண்டு, பால் பருகினான்.
- **கோவிந்தன் குடியிருக்க சுவர் கட்டி கூரை அமைத்தார்.**
  கோவிந்தன் குடியிருக்க சுவர் எழுப்பிக் கூரை வேய்ந்தார்.
- **வனவிலங்குக் காப்பகத்தில் சிங்கக் குட்டியும் யானைக்குட்டியும் கண்டேன்.**
  வனவிலங்குக் காப்பகத்தில் சிங்கக் குருளையும் யானைக் கன்றையும் கண்டேன்.
- **ஆட்டுத் தொழுவத்தைச் சுற்றிலும் எலிகள் பொந்துகள் அமைத்திருந்தன.**
  ஆட்டுப் பட்டியைச் சுற்றிலும் எலிகள் வளைகளை அமைத்திருந்தன.



Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

- **பனை மட்டையால் கூரை வைத்திருந்தனர்.**
  பனை ஓலையால் கூரை வெய்ந்திருந்தனர்.

**17. பத்தியைப் படித்து தேவையான இடங்களில் நிறுத்தக்குறிகளை இட்டு எழுதுக.**

- **வினா: இளங்கோ அடிகள் சாத்தனாரிடம் முன்செய்த வினை நிறைவேறும் காலம் என்றீர்களே அவர்களுடைய முந்தைய வினை யாது அதன் விளைவு என்ன நிகழ்ந்த காலம் யாது அதை நீங்கள் அறிந்திருந்தால் கூறுக எனக் கேட்டார்.**
- விடை: இளங்கோ அடிகள் சாத்தனாரிடம், "முன்செய்த வினை நிறைவேறும் காலம் என்றீர்களே! அவர்களுடைய முந்தைய வினை யாது? அதன் விளைவு என்ன? நிகழ்ந்த காலம் யாது? அதை நீங்கள் அறிந்திருந்தால் கூறுக!" எனக் கேட்டார்.

**18. விடைக்கேற்ற வினா அமைக்க.**

- **குடும்பம் என்ற சொல் முதன்முதலில் திருக்குறளில்தான் இடம் பெற்றுள்ளது.**
  குடும்பம் என்ற சொல் முதன் முதலில் எந்த நூலில் இடம் பெற்றுள்ளது?
- **நடுவண் அரசு 2005ம் ஆண்டு டிசம்பர் 28 அன்று தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையத்தை அமைத்தது.**
  நடுவண் அரசு, எப்பொழுது பேரிடர் மேலாண்மை ஆணையத்தை அமைத்தது?
- **சாலைகளில் இடம்பெற்றிருக்கும் குறியீடுகள் போக்குவரத்தினைச் சீர் செய்யும் பாதுகாப்பாக பயணிக்கவும் உதவுகின்றன.**
  சாலைகளில் இடம்பெற்றிருக்கும் குறியீடுகள் எவற்றிற்கு உதவுகின்றன?
- **1856இல் தென்னிந்தியாவின் முதல் தொடர்வண்டி நிலையம் இராயபுரத்தில் அமைக்கப்பட்டது.**
  தென்னிந்தியாவின் முதல் தொடர்வண்டி நிலையம் எங்கு, எப்பொழுது அமைக்கப்பட்டது?
- **'யாதர்த்த நிகழ்வைப் படைப்பாளுமையுடன் வெளிப்படுத்துவதே ஆவணப்படம்' என்கிறார் கிரியோர்சன்.**
  எதனை, ஆவணப்படம் என்கிறார் கிரியோர்சன்?

## இலக்கிய நயம் பாராட்டுதல்

வெட்டியடிக்குது மின்னல் - கடல்
வீரத் திரைகொண்டு விண்ணை யிடிக்குது
கொட்டி யிடிக்குது மேகம் - கூ
கூவென்று விண்ணைக் குடையுது காற்று
சட்டச்சட சட்டச்சட டட்டா - என்று
தாளங்கள் கொட்டிக் கனைக்குது வானம்
எட்டுத்திசையும் இடிய - மழை
எங்ஙனம் வந்ததடா தம்பி வீரா! - பாரதியார்.

- **மையக்கருத்து:** பாரதியின் இவ்வரிகள், கார்க்காலத்தில் மழை பொழிந்திடும் முறையினை விளக்கக்கூடியதாக அமைந்துள்ளது.
- **திரண்டக் கருத்து:** தம்பி வீரா! இந்த மழை எப்படி வந்தது? பார்த்தாயா? வெட்டியடித்திடும் மின்னல். திரைக்கடலோ வீர அலைகொண்டு விண்ணையிடிக்கிறது. கொட்டி முழங்கும் மேகம். கூகூ என்று விண்ணைக் குடையும் காற்று. சட்டச் சடசட என்று தாளம் கொட்டும் வானம் என எட்டுத்திக்கும் இடியும் புடையுமாக வானம் மின்னல்வெட்டி பெருமழை பொழிகிறது.
- **தொடை நயம்:**
  - **மோனை:** முதல் எழுத்து ஒன்றிவரப் பிறப்பது மோனை.
    - க : கடல் - கனைக்குது
    - எ : எட்டுத்திசையும் - எங்ஙனம்
    - ச : சட்டச்சட - சட்டச்சட
  - **எதுகை:** இரண்டாம் எழுத்து ஒன்றிவரப் பிறப்பது எதுகை.
    - ட் : வெட்டியடிக்குது - கொட்டி - சட்டச்சட - எட்டுத்திசையும்



Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com

- ண் : விண்ணை - விண்ணை
- **இயைபு:** கடைசி எழுத்து ஒன்றிவரப் பிறப்பது இயைபு.
  - து : வெட்டியடிக்குது - விண்ணையிடிக்குது - கொட்டியிடிக்குது
  - று : காற்று - கூவென்று
  - ம் : எட்டுத்திசையும் - எங்ஙனம்
- **முரண்:** எதிர்ச்சொல்லாக அமைவது முரண்.
  - இப்பாடலில் முரண் பயின்றுவரவில்லை.

## இலக்கணக் குறிப்பு

- பண்புத்தொகை (மை) - செந்தமிழ், செம்பரிதி, செந்நிறம், வெங்கதிர், தொல்நெறி, நெடுவழி, கருந்தடம், வெங்குருதி, நன்கலம், புதுபெயல், கொடுங்கோல், பெருங்கடல், அருந்திறல், வெள்ளருவி, நெடுவேல், நன்னாடு.
- அடுக்குத்தொடர் (2) - முத்துமுத்தாய், ஊன்ற ஊன்ற.
- உருவகம் (சிறிது,பெரிது)- வியர்வைவெள்ளம், தமிழ்க்குயில்.
- வினையெச்சம் (உ,இ) - சிவந்து, வெந்து, சினந்து, போந்து.
- பெயரெச்சம் (அ) - புக்க, சொற்ற, திருந்திய, வாய்த்த, உவப்ப, கொடுத்த, ஈத்த
- தொழிற்பெயர் (தல்) - மறத்தல், பிறத்தல், வெஃகுதல், சொல்லுதல்.
- செய்யுளிசை அளபெடை (ஆஅ) - சிறாஅர், உழாஅது, கவாஅன்.
- சொல்லிசை அளபெடை (ஈஇ) - ஒரீஇ.
- இன்னிசை அளபெடை (ஊஉ) - படுப்பதூஉம்.
- இடைக்குறை - இலாத, உளது.
- உரிச்சொற்றொடர் (மா,நனி) - மாதவம், மாமயிலை.
- வினைத்தொகை - தாழ்கடல், வளர்தலம், காய்நெல், வயங்குமொழி
- மரூஉச் சொல் - நுந்தை.
- உவமைத்தொகை - மலரடி.
- எண்ணும்மை - ஆடலும் பாடலும், அன்பும் அறமும், பண்பும் பயனும், வையகமும் வானகமும், நகையும் உவகையும்.
- ஏவல் பன்மை வினைமுற்று - ஓர்மின்.
- முன்னிலைப் பன்மை வினைமுற்று - உன்னலிர்.
- ஆகுபெயர் - உலகு
- ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் (ஆ) - பொய்யா, அடையா, மறவா, அறியா
- வினையாலணையும் பெயர் (அவர், அர், ஒர், ஓர்) - உயர்ந்தோர், செற்றவர், பாதகர்.

## புணர்ச்சி விதி

1. **உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே**

எ-டு: வானமெல்லாம் = வானம் + எல்லாம்.
விதி : உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே (வானமெல்லாம்)

எ-டு: உரனுடை = உரன் + உடை
விதி : உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே (உரனுடை)



Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

**2. இஈஐ வழி யவ்வும் - உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே**

**எ-டு: உன்னையல்லால் = உன்னை + அல்லால்**

விதி 1: இஈஐ வழி யவ்வும் (உன்னை + ய் + அல்லால்)
விதி 2: உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே (உன்னையல்லால்)

**எ-டு: தனியாழி = தனி + ஆழி**

விதி 1: இஈஐ வழி யவ்வும் (தனி + ய் + ஆழி)
விதி 2: உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே (தனியாழி)

**எ-டு: ஒருமையுடன் = ஒருமை + உடன்**

விதி 1: இஈஐ வழி யவ்வும் (ஒருமை + ய் + உடன்)
விதி 2: உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே (ஒருமையுடன்)

**எ-டு: ஏழையென = ஏழை + என**

விதி 1: இஈஐ வழி யவ்வும் (ஏழை + ய் + என)
விதி 2: உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே (ஏழையென)

**3. உயிர்வரின் உக்குறள் மெய்விட்டு ஓடும் - உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே**

**எ-டு: ஆங்கவற்றுள் = ஆங்கு + அவற்றுள்**

விதி 1: உயிர்வரின் உக்குறள் மெய்விட்டு ஓடும் (ஆங்க் + அவற்றுள்)
விதி 2: உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே (ஆங்கவற்றுள்)

**4. ஈறுபோதல்**

**எ-டு: செம்பரிதி = செம்மை + பரிதி**
விதி : ஈறுபோதல் (செம்பரிதி)

**எ-டு: நன்மொழி = நன்மை + மொழி**
விதி : ஈறுபோதல் (நன்மொழி)

**5. ஈறுபோதல் - இனமிகல்**

**எ-டு: அருங்கானம் = அருமை + கானம்**

விதி 1: ஈறுபோதல் (அரு + கானம்)
விதி 2: இனமிகல் (அருங்கானம்)

**எ-டு: பெருங்கடல் = பெருமை + கடல்**

விதி 1: ஈறுபோதல் (பெரு + கடல்)
விதி 2: இனமிகல் (பெருங்கடல்)

**6. ஈறுபோதல் - முன்னின்ற மெய் திரிதல்**

**எ-டு: செந்தமிழ் = செம்மை + தமிழ்**

விதி 1: ஈறுபோதல் (செம் + தமிழ்)
விதி 2: முன்னின்ற மெய் திரிதல் (செந்தமிழ்)

**எ-டு: வெங்கதிர் = வெண்மை + கதிர்**

விதி 1: ஈறுபோதல் (வெண் + கதிர்)
விதி 2: முன்னின்ற மெய் திரிதல் (வெங்கதிர்)

**7. ஈறுபோதல் - இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும்**

**எ-டு: புதுப்பெயல் = புதுமை + பெயல்**

விதி 1: ஈறுபோதல் (புது + பெயல்)
விதி 2: இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும் (புதுப்பெயல்)



Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

**8. <u>இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும்</u>**

**எ-டு: எத்திசை = எ + திசை**

விதி : இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும் (எத்திசை)

**எ-டு: தலைக்கோல் = தலை + கோல்**

விதி : இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும் (தலைக்கோல்)

**9. <u>பூப்பெயர்முன் இனமென்மையும் தோன்றும்</u>**

**எ-டு: பூம்பாவாய் = பூ + பாவாய்**

விதி : பூப்பெயர்முன் இனமென்மையும் தோன்றும் (பூம்பாவாய்)

**10. <u>தனிக்குறில்முன் ஒற்று உயிர்வரின் இரட்டும் - உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே</u>**

**எ-டு: செல்லிடத்து = செல் + இடத்து**

விதி 1: தனிக்குறில்முன் ஒற்று உயிர்வரின் இரட்டும் (செல்ல் + இடத்து)

விதி 2: உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே (செல்லிடத்து)

**எ-டு: முன்னுடை = முன் + உடை**

விதி 1: தனிக்குறில்முன் ஒற்று உயிர்வரின் இரட்டும் (முன்ன் + உடை)

விதி 2: உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே (முன்னுடை)

## <u>பகுபத உறுப்பிலக்கணம்</u>

**1. சாய்ப்பான் = சாய் + ப் + ப் + ஆன்**

சாய் - பகுதி, ப் - சந்தி, ப் - எதிர்கால இடைநிலை, ஆன் - படர்க்கை ஆண்பால் வினைமுற்று விகுதி

**2. விம்முகின்ற = விம்மு + கின்று + அ**

விம்மு - பகுதி, கின்று - நிகழ்கால இடைநிலை, அ - பெயரெச்ச விகுதி

**3. நினைக்கின்ற = நினை + கின்று + அ**

நினை - பகுதி, கின்று - நிகழ்கால இடைநிலை, அ - பெயரெச்ச விகுதி

**4. வியந்து = விய + த்(ந்) + த் + உ**

விய - பகுதி, த் - சந்தி (ந் ஆனது விகாரம்), த் - இறந்தகால இடைநிலை, உ -வினையெச்ச விகுதி

**5. அறிந்து = அறி + த்(ந்) + த் + உ**

அறி - பகுதி, த் - சந்தி (ந் ஆனது விகாரம்), த் - இறந்தகால இடைநிலை, உ -வினையெச்ச விகுதி

**6. களைந்து = களை + த்(ந்) + த் + உ**

களை - பகுதி, த் - சந்தி (ந் ஆனது விகாரம்), த் - இறந்தகால இடைநிலை, உ -வினையெச்ச விகுதி

**7. அறித்து = விய + த் + த் + உ**

விய - பகுதி, த் - சந்தி, த் - இறந்தகால இடைநிலை, உ -வினையெச்ச விகுதி

**8. இடித்து = இடி + த் + த் + உ**

இடி - பகுதி, த் - சந்தி, த் - இறந்தகால இடைநிலை, உ -வினையெச்ச விகுதி

**9. பகைத்த = பகை + த் + த் + அ**

பகை - பகுதி, த் - சந்தி, த் - இறந்தகால இடைநிலை, அ - பெயரெச்ச விகுதி

**10. இருந்தாய் = இரு + த்(ந்) + த் + ஆய்**

இரு - பகுதி, த் - சந்தி (ந் ஆனது விகாரம்), த் - இறந்தகால இடைநிலை, உ - முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதி

**11. உயர்ந்தோர் = உயர் + த்(ந்) + த் + ஓர்**

உயர் - பகுதி, த் - சந்தி (ந் ஆனது விகாரம்), த் - இறந்தகால இடைநிலை, ஓர் - பலர்பால் வினைமுற்றுவிகுதி

**12. விளங்கி = விளங்கு + இ**

விளங்கு - பகுதி, இ - வினையெச்ச விகுதி



Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com

**13. கலங்கி = கலங்கு + இ**
கலங்கு - பகுதி, இ - வினையெச்ச விகுதி

**14. சாற்றி = சாற்று + இ**
சாற்று - பகுதி, இ - வினையெச்ச விகுதி

**15. வந்து = வா(வ) + த்(ந்) + த் + உ**
வா - பகுதி (வ என குறுகியது விகாரம்), த் - சந்தி (ந் ஆனது விகாரம்), த் - இறந்தகால இடைநிலை, உ - வினையெச்ச விகுதி

**16. தந்தனன் = தா(த) + த்(ந்) + த் + அன் + அன்**
தா - பகுதி (த என குறுகியது விகாரம்), த் - சந்தி (ந் ஆனது விகாரம்), த் - இறந்தகால இடைநிலை, அன் - சாரியை, அன் - படர்க்கை ஆண்பால் வினைமுற்று விகுதி

**17. பொலிந்தான் = பொலி + த்(ந்) + த் + ஆன்**
பொலி - பகுதி, த் - சந்தி (ந் ஆனது விகாரம்), த் - இறந்தகால இடைநிலை, ஆன் - ஆண்பால் வினைமுற்று விகுதி.

**18. அமர்ந்தான் = அமர் + த்(ந்) + த் + ஆன்**
அமர் - பகுதி, த் - சந்தி (ந் ஆனது விகாரம்), த் - இறந்தகால இடைநிலை, ஆன் - ஆண்பால் வினைமுற்று விகுதி.

**19. பழித்தனர் = பழி + த் + த் + அன் + அர்**
அமர் - பகுதி, த் - சந்தி, த் - இறந்தகால இடைநிலை, அன் - சாரியை, அர் - பலர்பால் வினைமுற்று விகுதி.

**20. வைத்து = வை + த் + த் + உ**
வை - பகுதி, த் - சந்தி, த் - இறந்தகால இடைநிலை, உ - வினையெச்ச விகுதி

**21. பேசுவார் = பேசு + வ் + ஆர்**
பேசு - பகுதி, வ் - எதிர்கால இடைநிலை, ஆர் - பலர்பால் வினைமுற்று விகுதி

**22. கண்டான் = காண்(கண்) + ட் + ஆன்**
காண் - பகுதி (கண் என குறுகியது விகாரம்), ட் - இறந்தகால இடைநிலை, ஆன் - ஆண்பால் வினைமுற்று விகுதி

**23. செய்த = செய் + த் + அ**
செய் - பகுதி, த் - இறந்தகால இடைநிலை, அ - பெயரெச்ச விகுதி

## ஒரு மதிப்பெண் வினாகள்

1. 'இளந்தமிழே' என்னும் கவிதை இடம்பெற்றுள்ள சிற்பி பாலசுப்பிரமணியத்தின் நூல்தொகுப்பு நிலவுப்பூ.
2. சிற்பி பாலசுப்பிரமணியத்தின் சாகித்ய அகாதெமி பரிசு பெற்ற நூல் ஒரு கிராமத்து நதி.
3. சிற்பி பாலசுப்பிரமணியன் அவர்கள் பாரதியார் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறை தலைவராகப் பணியாற்றினார்.
4. சிற்பி பாலசுப்பிரமணியன் அவர்கள் 2 முறை சாகித்ய அகாதெமி விருது பெற்றுள்ளார்.
5. 'தமிழ் அழகியல்' என்னும் நூலின் ஆசிரியர் யார்? தி.சு.நடராசன்.
6. திறனாய்வுக் கலையை தமிழில் அறிமுகப்படுத்தியவர்களில் முக்கியமானவர் தி.சு.நடராசன்.
7. நடைபெற்றியல் பற்றி கூறிடும் தொல்காப்பிய இயல் கிளவியாக்கம்
8. நடைநவின்றொழுகும் என்ற சொல்லாடலை எடுத்துக்கூறும் தொல்காப்பிய இயல் செய்யுளியல்.
9. ஆசிரிய நடத்தே வஞ்சி - ஏனை வெண்பா நடத்தே கலி என குறிப்பிடும் நூல் தொல்காப்பியம்.
10. ஐந்திணைக் கோட்பாடுகளை பேசிடும் இலக்கண நூல் தொல்காப்பியம்
11. கவிதையின் இயங்காற்றல் நடை.
12. சங்கப்பாடல்களின் காணப்படும் முக்கியப் பண்பு ஒலிக்கோலம்.
13. அணியிலக்கணத்தை மட்டும் கூறு நூல் தண்டியலங்காரம்.



Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com

14. தண்டியலங்காரம், வடமொழியில் இயற்றப்பட்ட காவியதர்சம் என்ற நூலைத் தழுவி இயற்றப்பட்டது.
15. தண்டியலங்காரத்தின் ஆசிரியர் தண்டி. (கி.பி12ம் நூற்றாண்டு).
16. தண்டியலங்காரம் பொதுவியல், பொருளணியியல், சொல்லணியியல் என்ற 3 பிரிவுகளைக் கொண்டது.
17. எட்டையபுர மன்னர்களின் வாழ்க்கை வரலாற்றைக்கூறும் வம்சமணி தீபிகை என்னும் நூலை கவிகேசரி சாமி தீட்சிதர் இயற்றியுள்ளார். (1879)
18. வம்சமணி தீபிகை என்னும் நூலின் மறுமதிப்பை வெளியிட்டவர் இளசை மணி(2008).
19. உய்யும் வழி என்னும் நூலின் ஆசிரியர் பரலி.சு.நெல்லையப்பர்.
20. பரலி.சு.நெல்லையப்பர் இயற்றிய உரைநடை நூல் வ.உ.சிதம்பரனாரின் வாழ்க்கை வரலாறு.
21. பாரதியின் கடிதங்கள் என்னும் நூலின் ஆசிரியர் ரா.அ.பத்மநாபன்.
22. பாரதி, தன்னுடைய 15ம் வயதில், கல்வி வேண்டி எட்டயபுர அரசருக்கு கடிதம் எழுதியுள்ளார்.
23. பாரதி, கடைசியாக குத்திக்கேசவர் என்பருக்கு கடிதம் எழுதியுள்ளார்.
24. உலகப் புவி நாள் ஏப்ரல் 22.
25. உலக சுற்றுச்சூழல் தினம் ஜூன் 5.
26. மாமழை போற்றுதோம் என குறிப்பிடும் நூல் சிலப்பதிகாரம்.
27. நீரின்றி அமையாது உலகம் என குறிப்பிடும் நூல் திருக்குறள்.
28. இயற்கையின் சுழற்சியே இயற்கை சமநிலை என அழைக்கப்படுகிறது.
29. வெள்ளச் சமவெளி அழியக் காரணம் மணல் அள்ளுதல்.
30. ஆர்டிக் பகுதியிலுள்ள பனிக்கட்டிகள் உருகுவதற்கும் காரணம் புவி வெப்பமடைதல்.
31. பசுமைக்குடில் வாயுக்களின் அதிகரிப்பால் புவி வெப்பம் அடைகிறது.
32. புவி வெப்பமடைதல் மனிதன் உருவாக்கிக்கொண்ட சிக்கல் எனக் கூறியர் டேவிட் கிங்.
33. சூரிய ஆற்றல், காற்று ஆற்றல், தாவர ஆற்றல் போன்றவை கார்பன் அற்ற ஆற்றல்கள் ஆகும்.
34. காலநிலை மாற்றம் பற்றிய பணித்திட்ட பேரவை (unfccc) 1992ம் ஆண்டு ஐக்கிய நாடுகள் அவையின் மூலம் ரியோ டி ஜெனிராவில் தொடங்கப்பட்டது. (193 நாடுகள் உறுப்பினர்கள்)
35. 2009ம் ஆண்டை இந்திய வானிலை ஆய்வு மையம், அதிக வெப்பம் மிக்க ஆண்டாக அறிவித்துள்ளது.
36. நடுவண் அரசு பேரிடர் மேலாண்மை ஆணையத்தை 2005 டிசம்பர் 23ல் தொடங்கியது.
37. இன்று என்ற கவிதை குறும்படத்தை இயற்றியவர் அய்யப்ப மாதவன்.
38. அய்யப்ப மாதவன் இயற்றிய கவிதை நூல்கள் மழைக்குப் பிறகும் மழை, நானென்பது வேறொருவன், நீர்வெளி.
39. நரம்புகளில் வீணை மீட்டிக்கொண்டிருப்பது மழைத்துளிகள்.
40. கோவலர்கள் தலையில் சூடியிருந்த பூ? காந்தள்.
41. வெற்றிபெற்ற அரசன் வெற்றியினைக் கொண்டாடும் பொருட்டு சூடும் பூ? வாகை.
42. போர்மேற் சென்ற அரசன், குளிர்காலத்தில் தங்கும் படை வீடு கூதிர்ப்பாசறை.
43. நெடுநல்வாடையின் பாட்டுடைத் தலைவர் பாண்டியன் நெடுஞ்செழியன்.
44. நெடுநல்வாடையின் ஆசிரியர் மதுரை கணக்காயனாரின் மகன் நக்கீரர்.
45. நெடுநல்வாடை 188 அடிகள் கொண்டது. (பத்துப்பாட்டில் ஒன்று).
46. நெடுநல்வாடை தலைவனுக்கு நல்வாடை - தலைவிக்கு துன்ப வாடை.
47. 'முதல்கல்' என்ற சிறுகதையின் ஆசிரியர் உத்தமசோழன்(செல்வராஜ்).
48. தஞ்சைச் சிறுகதை என்னும் தலைப்பில் இடம்பெற்றுள்ள சிறுகதை? முதல்கல்.
49. உத்தசோழன் அவர்கள், 12 ஆண்டுகளாக நடத்திய திங்கள் இதழ்? கிழக்கு வாசல் உதயம்.
50. குடும்பம் என்ற சிறிய அமைப்பிலிருந்தே மனித சமூகம் கட்டமைக்கப்படுகிறது.
51. மனித சமூகத்தின் அடிப்படை அலகு குடும்பம்.
52. ஒரு நாணயத்தின் இருபக்கங்கள் திருமணமும் குடும்பமும்.
53. சங்க இலக்கியத்திலும் தொல்காப்பியத்திலும் இல்லாத சொல் திருமணமும் குடும்பமும்.
54. குடும்பம் என்ற சொல் முதன் முதலில் இடம்பெற்ற நூல் திருக்குறள்(1029).
55. குடும்பு என்ற சொல்லின் பொருள் கூடிவாழ்தல்.
56. இல், மனை என்ற இரு வாழிடங்களை தொல்காப்பியம் குறிப்பிடுகிறது.
57. மனைவியின் இல்லம் தம்மனை - கணவனின் இல்லம் நும்மனை.



Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com

58. தற்காலிக தங்குமிடம் புக்கில். (புறநானூறு)
59. திருமணத்திற்குபின் கணவனும் மனைவியும் பெற்றோரைப் பிரிந்து தனித்து வாழுமிடம் தன்மனை.
60. திருமணம் முடிந்த கணவனும் மனைவியும் முதல் குழந்தை பிறக்குவரை வாழுமிடம் மணந்தகம்.
61. சிலம்புகழி நோம்பு பற்றி குறிப்பிடும் நூல் ஐங்குறுநூறு (399)
62. மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிரே என்கிறது குறுந்தொகை (135).
63. கணவன், மனைவி, மகன் ஆகியோருடன் தந்தை சேர்ந்து வாழும் நேர்வழி விரிந்த குடும்ப முறைப் பற்றி புறநானூற்றுப்பாடலில் கூறியவர் ஒக்கூர் மாசாத்தியார்.
64. தமிழர் குடும்ப முறை என்ற நூலின் ஆசிரியர் பக்தவத்சல பாரதி.
65. ஜலாலுதீன் ரூமியின் கவிதைகளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் கோல்மன் பார்க்ஸ்.
66. ஜலாலுதீன் ரூமியின் கவிதைகளை தமிழில் 'தாகங்கொண்ட மீனொன்று' என்ற பெயரில் மொழிபெயர்த்தவர் என். சத்தியமூர்த்தி.
67. ஜலாலுதீன் ரூமி அவர்கள் ஆப்கானிஸ்தான் நாட்டைச் சார்ந்த பாரசீகக் கவிஞர். (கி.பி.1207)
68. ஜலாலுதீன் ரூமியின் கவிதைகள் அனைத்தும் ஆழமான ஆன்மீகக் கருத்துகள் நிறைந்த மஸ்னவி.
69. திவான் - ஈ - ஷம்ஸ் - ஈ - தப்ரீஸி என்னும் நூலின் ஆசிரியர் ஜலாலுதீன் ரூமி.
70. ஜலாலுதீன் ரூமி அவர்கள் குறிப்பிட்டுள்ள விருந்தினர்கள் ஆனந்தம், அற்பத்தனம், மனச்சோர்வு, விழிப்புணர்வு.
71. வேடுவத்தலைவன், பாறை போன்ற உடலும் பஞ்சு போன்ற மனமும் கொண்டவன் குகன்.
72. இராவணனுடன் சண்டையிட்டு இறந்தவன் கழுகு வேந்தன் சடாயு.
73. இராமனைக் கண்டதால் பிறவி மோட்சம் பெற்றவள் சவரி.
74. இராமனும் சுக்ரீவனும் நண்பர்களாக காரணமாவள் சவரி.
75. வானரத் தலைவன் சுக்ரீவன். இராவணனின் தம்பி வீடணன்.
76. சூரியனின் புதல்வன் சுக்ரீவன்.
77. உவா - அம்மாவசை, உடுவதி - சந்திரன், இரவி - சூரியன்.
78. கவிச்சக்கரவர்த்தி என அழைக்கப்பட்டவர் கம்பர்.
79. கம்பர் தம் நூலுக்கிட்ட பெயர் இராமாவதாரம்.
80. கம்பர் கி.பி.12ம் நூற்றாண்டைச் சார்ந்தவர்.
81. உரிமைத் தாகம் என்ற சிறுகதையின் ஆசிரியர் பூமணி (பூ.மாணிக்கவாசகர்).
82. பூமணி அவர்கள் இயக்கியத் திரைப்படம் எது? கருவேலம்பூக்கள்.
83. பூமணி அவர்கள் சாகித்திய அகாதெமி விருது பெற்ற நூல் எது? அஞ்ஞாடி - புதினம் (2014).
84. திருக்குறளில் பயின்று வந்துள்ள பா வகை - குறள் வெண்பா.
85. திருக்குறளில் பயின்று வந்துள்ள ஆகுபெயர் - அடையடுத்த கருவி ஆகுபெயர்.
86. திருக்குறள் பதினெண்கீழ்க் கணக்கு நூல்களில் ஒன்று.
87. உலகப் பொதுமறை - தமிழர் திருமறை - அறவிலக்கியம் என அழைக்கப்படும் நூல் திருக்குறள்.
88. ஆலும் வேலும் பல்லுக்குறுதி, நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி - இதில் நால் என்பது நாலடியாரையும் இரண்டு என்பது திருக்குறளையும் குறிப்பிடுகிறது.
89. திருக்குறளுக்கு உரை எழுதியவர்கள் பதின்மர்.
90. திருக்குறள் முதன்முதலில் அச்சிடப்பட்ட ஆண்டு? 1812.
91. வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து, வான்புகழ் கொண்ட தமிழ்நாடு என பாடியவர் பாரதியார்.
92. வள்ளுவனைப் பெற்றதால், பெற்றதே புகழ் வையகம் என பாடியவர் பாரதிதாசன்.
93. அறத்துப்பாலில் 38, பொருட்பாலில் 70, காமத்துப்பாலில் 25 அதிகாரங்கள் உள்ளன.
94. திருக்குறளில் உள்ள மொத்த இயல்களின் எண்ணிக்கை 9.
95. பாயிரவியல், இல்லறவியல், துறவறவியல், ஊழியல் என்ற இயல்களைக் கொண்டது அறத்துப்பால்.
96. அரசியல், அமைச்சியல், ஒழிபியல் என்ற இயல்களைக் கொண்டது பொருட்பால்.
97. களவியல், கற்பியல் என்ற இயல்களைக் கொண்டது காமத்துப்பால்.
98. திருவள்ளுவருக்கு 133 அடியில் சிலை நிறுவப்பட்டுள்ள இடம்? கன்னியாக்குமரி.
99. ஊர்தோறும் பெரிய மரத்தடியில் உள்ள மேடை மன்றம் அல்லது அம்பலம் (திண்ணைப்பள்ளி) எனப்படும்.
100. வித்தியாரம்பம் - கல்வித்தொடக்கம். வித்தியாப்பியாசம் - கல்விப்பயிற்சி.
101. உபாத்தியாயர் - ஆசிரியர். அக்ஷராப்பியாசம் - எழுத்துப்பயிற்சி.



Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

102. கீழ்வாயிலக்கம் - பின்ன எண்ணின் கீழ்த்தொகை. மேல்வாயிலக்கம் - பின்ன எண்ணின் மேல்தொகை.
103. குழிமாற்று - பெருக்கல் வாய்ப்பாடு. சீதாள பத்திரம் - தாழைமடல்.
104. நவத்வீபம் - வங்காளத்தில் உள்ள ஓர் ஊர்.
105. வகுப்பறையில் ஆசிரியர் சொல்லுவதை மாணவர்கள் மீண்டும் சொல்வதை முறை வைப்பு எனப்படும்.
106. ஆசிரியர் இல்லாத நேரங்களில் வகுப்பறையினை சட்டாம்பிள்ளை பார்த்துக்கொள்வார்.
107. ஓலைச்சுவடி செய்ய தேவையானவை: வசம்பு, மஞ்சள், மணத்தக்காளியிலைச் சாறு அல்லது ஊமத்தையிலைச் சாறு, மாவிலைக்கரி, தர்ப்பைக்கரி.
108. ஓலைச்சுவடிகளில் மஞ்சள் பூசி வாசிக்கத் தொடங்குவதை மையாடல் விழா என்பார்கள்.
109. மையாடல் பற்றி கூறிய நூல்கள் சிந்தாமணி மற்றும் தமிழ்விடு தூது.
110. ஐயாண் டெய்தி மையாடி அறிந்தார் கலைகள் எனக்கூறிய நூல் சிந்தாமணி.
111. மஞ்சள் குளிப்பாட்டி மையிட்டு முப்பாலும் - மிஞ்சப் புகட்ட மிகவளர்ந்தாய் எனக்கூறிய நூல் தமிழ்விடு தூது.
112. ஏடுகளில் செப்புக் கம்பிகள் அல்லது மூங்கில் குச்சிகளைச் செருகிக்கட்டு முறைக்கு நாராசம் என்று பெயர்.
113. எழுத்தாணியின் வகைகள்: குண்டெழுத்தாணி, வாரெழுத்தாணி, மடக்கெழுத்தாணி.
114. வாதம்புரிந்து வெற்றி பெற்றவர்களை கொடிகட்டியிருப்பார் என்று குறிப்பிடும் நூல் மதுரைக்காஞ்சி.
115. கல்விக்காக பிரியும் காலத்தை ஓதற்பிரிவு எனலாம். (3 ஆண்டுகள்)
116. உயிர்மீட்சி என்ற கட்டுரையின் ஆசிரியர் உ.வே.சா.
117. தமிழ்த்தாத்தா, புலமைப் பெருங்கடல் என அழைக்கப்பட்டவர் உ.வே.சா.
118. உ.வே.சாவின் பட்டங்கள்: மகாமகோபாத்தியாய, திராவிட வித்தியா பூஷணம், தாக்ஷிணாத்திய கலாநிதி.
119. உ.வே.சா அவர்கள் தமிழ் பேராசிரியராகப் பணியாற்றிய கல்லூரி? கும்பகோணம் அரசு கல்லூரி மற்றும் சென்னை மாநிலக் கல்லூரி.
120. உ.வே.சா அவர்களுக்கு 1932ல் எந்த பல்கலைக்கழகம் டாக்டர் பட்டம் வழங்கியது? சென்னை.
121. உ.வே.சா அவர்களின் சிலை மாநில கல்லூரில் அமைந்துள்ளது.
122. உ.வே.சா அவர்களின் பெயரில் உள்ள நூலகம் சென்னையில் திருவான்மியூரில் அமைந்துள்ளது.
123. சுவர்க்க நீக்கம் என்னும் நூலின் ஆசிரியர் மில்டன்.
124. மா.இராசமாணிக்கனாரின் ஆசிரியர் மௌனகுரு.
125. நற்றிணையின் உரையாசிரியர் பின்னத்தூர் நாராயணசாமி.
126. மனப்பாடம் செய்ய இருந்த சுவடி? பிரபவாதி சுவடி.
127. முதலில் வரும் மாணவனின் பெயர் வேத்தன்.
128. துறைமுகம் என்னும் நூலின் ஆசிரியர் சுரதா.
129. சுரதாவின் இயற்பெயர் இராசகோபாலன்.
130. பாரதிதாசன் மீதுள்ள பற்றின் காரணமாக தன் பெயரினை மாற்றிக்கொண்டவர் சுரதா.
131. சுப்பு ரத்தின தாசன் என்பதின் சுருக்கமே சுரதா.
132. உவமைக்கவிஞர் என அழைக்கப்பட்டவர் சுரதா.
133. சுரதா நடத்திய இலக்கிய ஏடுகள்: இலக்கியம், விண்மீன், ஊர்வலம்.
134. சுரதா நடத்திய கவிதை இதழ் காவியம்.
135. சுரதா எழுதிய நூல்கள் சில: தேன்மழை, மங்கையர்க்கரசி, அமுதும் தேனும்.
136. சுரதா பெற்ற விருதுகள் சில: தமிழக அரசின் கலைமாணி விருது, பாரதிதாசன் விருது, தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் இராசராசன் விருது.
137. இடையீடு என்ற கவிதையின் ஆசிரியர் சி.மணி(சி.பழனிச்சாமி).
138. இடையீடு என்ற கவிதை எந்த தொகுப்பில் இடம்பெற்றுள்ளது? இதுவரை
139. எழுத்து என்ற இதழில் கவிதைகளை வெளியிட்டவர் சி.மணி.
140. சி.மணி அவர்கள் நடத்தி வந்த சிற்றிதழின் பெயர் நடை.
141. சி.மணி அவர்களின் சிறந்த நூல்கள்: வரும் போகும், ஒளிச்சேர்க்கை, யாப்பும் கவிதையும்.
142. புதுக்கவிதையில் அங்கதத்தை அதிகமாகப் பயன்படுத்தியவர் சி.மணி.
143. சி.மணி அவர்கள் பெற்ற விருதுகள்: விளக்கு விருது, தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழக விருது, ஆசான் கவிதை விருது, கவிஞர் சிற்பி விருது.
144. சி.மணி அவர்களின் புனைப் பெயர்கள் : வே.மாலி, செல்வம்.



Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com

145.பாடப்படும் ஆண்மகளின் ஒழுகலாறுகளைப் பற்றி கூறுவது பாடாண் திணை.
146.கலன் - யாழ், கலப்பை - கருவிகள் வைக்கும் பை.
147.புறம், புறப்பாட்டு என்ற வேறுபெயர்களைக் கொண்ட எட்டுத்தொகை நூல்? புறநானூறு.
148.அதியமான் நெடுமான் அஞ்சி என்ற சிற்றரசனிடம் நட்பு பாராட்டி தூது சென்றவர் ஔவை.
149.ஔவைக்கு பரிசில் தராமல் காலம் நீட்டித்தவன் அதியமான் நெடுமான் அஞ்சி.
150.அதியமான் நெடுமான் அஞ்சியின் அவைகளப் புலவர் ஔவை.
151.உலகிலேயே அதிக சாலைப் போக்குவரத்துக் கொண்ட இரண்டாவது பெரிய நாடு இந்தியா.
152.இந்தியாவிலேயே அதிக சாலை விபத்துகள் நடைபெறும் மாநிலம் தமிழ்நாடு(15 விழுக்காடு).
153.சாலையில் இடம்பெற்றுள்ள குறியீடுகளின் வகைகள்: உத்தரவுக் குறியீடுகள், எச்சரிக்கை குறியீடுகள், தகவல் குறியீடுகள்.
154.நாகரீக ஆய்வில் சிறப்பிடம் பெற்ற சென்னை உள்ள ஆறு? கொற்றலை ஆறு.
155.மயிலாப்பூரை, தாலமி அவர்கள் மல்லியர்பா என்றே குறிப்பிடுகிறார். (கி.பி.2ம் நூற்றாண்டு).
156.மாவலிபுரச் செலவு என்ற நூலின் ஆசிரியர் பாரதிதாசன்.
157.பல்லாவரத்தில் கண்டறியப்பட்ட பழங்காலப்பொருள் கற்கோடாரி.
158.தென்னிந்தியாவின் நுழைவுவாயில் சென்னை.
159.சென்னையை ஆங்கிலர்களின் குடியேற்றத்திற்குரிய இடமாகத் தெரிவு செய்தவர்? பிரான்சிஸ்டே.
160.செயின்ட் ஜார்ஜ் கோட்டையின் உட்பகுதி வெள்ளையர் நகரம்.
161.பணியாளர்கள் வாழ்ந்த வெளிப்பகுதி கருப்பர் நகரம்.
162.சென்னை என்ற மாகாணத்தை உருவாக்கியவர் எலி யேல்.
163.சென்னையின் பொற்காலம் தாமஸ் பிட் அவர்களின் ஆட்சிக்காலம்.
164.ஆசியாவில் உருவான முதல் ஐரோப்பிய பள்ளி எது? புனித மேரி தேவாலய தர்மப் பள்ளி (1715).
165.1812 - சென்னைக் கோட்டைக் கல்லூரி தொடங்கப்பட்டது.
166.1837 - சென்னைக் கிறித்தவக் கல்லூரி தொடங்கப்பட்டது.
167.1840 - பிரசிடென்சி பள்ளி(மாநிலக் கல்லூரி) தொடங்கப்பட்டது.
168.1857 - சென்னைப் பல்கலைக்கழகம் தொடங்கப்பட்டது.
169.1914 - பெண்களுக்காக தனியாக இராணிமேரிக் கல்லூரி தொடங்கப்பட்டது.
170.முகலாயக் கட்டடக்கலை, பிரித்தானியக் கட்டடக்கலை, இந்தியப் பாரம்பரிய பாணி இணைந்து உருவாக்கப்பட்டது இந்தோ-சாரசனிக் கட்டடக்கலை.
171.தென்னிந்தியாவின் முதல் தொடர்வண்டி நிலையம் இராயபுரத்தில்(1856) தொடங்கப்பட்டது.
172.வள்ளலார் என அழைக்கப்பட்டவர் இராமலிங்க அடிகள்.
173.இராமலிங்க அடிகள் பிறந்த ஊர் மருதூர்.
174.இராமலிங்க அடிகள் இயற்றிய திருவருட்பா எத்தனை திருமுறைகளாக பகுக்கப்பட்டுள்ளது? ஆறு.
175.சென்னை கந்தகோட்டத்து முருகனின் அருளைவேண்டி இராமலிங்க அடிகளால் பாடப்பெற்றது? தெய்வமணிமாலை.
176.இராமலிங்க அடிகள் இயற்றிய திருவருட்பாவின் ஐந்தாம் திருமுறையில் இடம்பெற்றுள்ள பாமாலை தெய்வமணிமாலை.
177.சமரச சன்மார்க்க நெறிகளை போதித்தவர், பசிப்பிணியை போக்கியர் இராமலிங்க அடிகள்.
178.சிறுவயதிலேயே கவிபாடும் திறன் பெற்றவர், வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடியவர் இராமலிங்க அடிகள்.
179.ஆன்மநேய ஒருமைப்பாடு எங்கும் தழைக்கவும் உண்மைநெறி ஓங்கவும் உழைத்தவர் வள்ளலார் இராமலிங்க அடிகள்.
180.ஊனை உருக்கி உள்ளொளி பெருக்கும் தன்மையுடைய பாடல்களை பாடியவர் இராமலிங்க அடிகள்.
181.இராமலிங்க அடிகள் இயற்றிய நூல்கள் சில: மனுமுறை கண்ட வாசகம், ஜீவகாருண்ய ஒழுக்கம்.
182.திருமுறைகள் மொத்தம் பன்னிரண்டு.
183.முதல் மூன்று திருமுறைகளை எழுதியவர் திருஞானசம்பந்தர்.
184.திருஞானசம்பந்தர் இயற்றிய திருமுறைகள் தேவாரம் என அழைப்பார்கள்.
185.திருமுறைகளைத் தொகுத்தவர் நம்பியாண்டார் நம்பி.
186.திருமயிலாப்பூர் பதிகம் எத்தனையாவது திருமுறையில் இடம்பெற்றுள்ளது? இரண்டு.
187.சமுதாயத்தின் பொருளாதார கலை பண்பாட்டு நிலைகள், தமிழுக்கு இருந்த உயர்நிலை, இசை தத்துவம், சமயக் கோட்பாடுகள் அனைத்தும் திருஞானச்சம்பந்தரின் பாடலில் விரவிக் காணப்படும்.



Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com

188. கடலுக்கு அருகில் மணல் திட்டுகளில் கடல்நீர் தேங்கியிருக்கும் பகுதிக்கு உப்பங்கழி என்று பெயர்.
189. உப்பு விளையும் களத்திற்கு அளம்(உப்பளம்) என்று பெயர்.
190. உமணர்கள்(பரதவர்கள்) பண்டமாற்றுப் பொருளாக உப்பை பயன்படுத்தினார்கள்.
191. பாடல்வைப்பு முறையில் பாடல் எண்ணிற்கு ஏற்பத் திணைகள் வரிசையாக வைத்துத் தொகுக்கப்பட்ட அகத்திணை நூல் அகநானூறு.
192. எட்டுத்தொகை நூல்களில் ஒன்றான அகநானூறு எத்தனை பிரிகளைக் கொண்டது? மூன்று.
193. அகநானூரில் நெய்தல் திணைப்பாடல்கள் பாடியவர் அம்மூவனார்.
194. அம்மூவனார் அகத் திணைப்பாடல்கள் மட்டுமே பாடியவர்.
195. ஞமலி என்பதின் பொருள் - நாய்.
196. புதுமைப்பித்தன் நெல்லைத்தமிழ், சண்முகசுந்தரம் கோவைத்தமிழ், ஜெயகாந்தன் சென்னைத்தமிழ், தி.ஜானகிராமன் தஞ்சைத்தமிழ், தோப்பில் முகமது மீரான் குமரித்தமிழ்.
197. கோவில்பட்டி தமிழை அடிப்படையாகக் கொண்டு கரிசல் இலக்கியம் படைத்தவர் கி.ராஜநாராயணன்.
198. வட்டாரத் தமிழை அடிப்படையாகக் கொண்டு படைக்கப்பட்ட நூல்? தஞ்சைக் கதைகள்.
199. ஒரு குட்டித்தீவின் வரைபடம் (தலைக்குளம்) என்ற நூலின் ஆசிரியர் தோப்பில் முகமது மீரான்.
200. தோப்பில் முகமது மீரான் அவர்கள் கன்னியாகுமாரி மாவட்டம், தேங்காய்ப்பட்டணம் எனும் சிற்றூரில் (1944)ல் பிறந்தார்.
201. தோப்பில் முகமது மீரான் அவர்களின் சாகித்திய அகதெமி விருது பெற்ற நூல்? சாய்வுநாற்காலி(1997).
202. தோப்பில் முகமது மீரான் அவர்களின் தமிழக அரசின் விருது பெற்ற நூல்? துறைமுகம், கூனன் தோப்பு.
203. நகரும் படங்களை படம்பிடிக்கும் கருவியினைக் கண்டறிந்தவர் தாமஸ் ஆல்வா எடிசன்.
204. அதிசயம் பிறக்கிறது என்ற தலைப்பில் ரயில் படங்களை வெளியிட்டவர்கள் லூமியர் சகோதரர்கள்.
205. திரைப்படங்களில் கதை கூறும் முறையினை அறிமுகம் செய்தவர் ஜார்ஜ் மிலி.
206. திரைப்படங்களில் காட்சி சிறப்பாக அமைந்துவிட்டால், வசனம் இரண்டாம் பட்சம்தான்.
207. காட்சிகள் மாறுவதை உணர்த்த, ஒரு காட்சியைச் சிறிது சிறிதாக மங்கலாகக் காட்டி, அடுத்த காட்சிக்கு செல்வது காட்சி மறைவு எனப்படும்.
208. ஒற்றைக் கோணக்கலை என்பது நாடகம்.
209. புதியத் திரையரங்குகள் வரக் காரணமானவர் சாமிக்கண்னு.
210. நகுலனின் இயற்பெயர் டி.கே.துரைசாமி (கும்பகோணத்தில் பிறந்து, திருவனந்தபுரத்தில் வாழ்ந்தவர்).
211. தமிழின் அனைத்து சிற்றிதழ்களிலும் புதுக்கவிதை எழுதியர் நகுலன்.
212. பாரதியின் கவிதைகளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் நகுலன்.
213. நகுலன் எழுதி நூல்கள் சில: மூன்று, ஐந்து, கண்ணாடியாகும் கண்கள், நாய்கள், சுருதி, வாக்குமூலம்.
214. தமிழரின் கலை, நாகரிகம், பண்பாடு முதலானவற்றை உள்ளடக்கிய கருவூலமாகத் திகழும் நூல் சிலப்பதிகாரம்.
215. குடிமக்கள் காப்பியம், மூவேந்தர் காப்பியம், முத்தமிழ் காப்பியம், புரட்சிக் காப்பியம், உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள், பொதுமைக் காப்பியம், ஒற்றுமைக் காப்பியம், வரலாற்றுக் காப்பியம் என்றெல்லாம் அழைக்கப்படும் நூல்? சிலப்பதிகாரம்.
216. சிலப்பதிகாரத்தின் தொடர்ச்சி என அழைக்கப்பட்ட காப்பியம்? மணிமேகலை.
217. இரட்டைக்காப்பியங்கள் எவை எவை? சிலப்பதிகாரம் - மணிமேகலை.
218. சிலப்பதிகாரத்தின் ஆசிரியர் இளங்கோவடிகள்.
219. சேரன் தம்பி சிலம்பை இசைத்தும் - என குறிப்பிட்டவர்? பாரதியார்
220. இளங்கோவடிகள் தன்னைப் பற்றி சிலப்பதிகாரத்தில் எங்கு குறிப்பிடுகிறார்? வரந்தரு காதை.
221. இளங்கோவடிகளின் அண்ணன் சேரன் செங்குட்டுவன்.
222. ஆடலும் பாடலும் அழகும் நிறைந்தவள் மாதவி.
223. மாதவி 12ம் வயதில் அறங்கேற்றம் நடத்தினாள்.
224. தலைக்கோல் அமைதி என்னும் பட்டத்தினை பெற்றவள் மாதவி.
225. ஆமந்திரிகை என்பது இடக்கை வாத்தியம்.
226. தொல்காப்பியம் முழுமைக்கும் உரை எழுதியவர் இளம்பூரணர்.
227. தொல்காப்பியத்தை தமிழ்ச் சான்றோர்கள் ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பியன் என்று போற்றுகின்றார்கள்.



Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

228.நடிப்புலகச் சக்கரவர்த்தி, நடிகர் திலகம் என அழைக்கப்பட்டவர் சிவாஜி கணேசன்.
229.சிவாஜி பிறந்த ஊர் விழுப்புரம்.
230.சிவாஜியின் இயற்பெயர் சின்னையா கணேசன்.
231.சின்னையா கணேசன், அண்ணாத்துரையின் நாடகத்தில் சத்ரபதி சிவாஜி என்ற கதாப்பாத்திரத்தினை ஏற்று நடித்ததினால் பெரியாரின் திருவாயால் சிவாஜி கணேசன் என பெயர் பெற்றார்.
232.சிவாஜி கணேசன் அவர்கள் நடித்த முதல் திரைப்படம்? பராசக்தி.
233.என்னைப் போல் சிவாஜி நடிப்பார். ஆனால், என்னால்தான் சிவாஜி போல் நடிக்க முடியாது - மார்லன் பிராண்டோ.
234.மலையாளக் கவிஞரும் நடிகருமான பாலச்சந்திரன் சுள்ளிகாடு அவர்கள் எழுதிய நூல்? சிதம்பர ஸ்மரண.
235.சிதம்பர ஸ்மரண என்ற நூலை தமிழில் 'சிதம்ப நினைவுகள்' என மொழிபெயர்த்தவர் கே.வி.சைலஜா.
236.ஓர் அரசன் ஒரு நாளை எவ்வாறு கையாளவேண்டும் என குறிப்பிடும் அதிகாரம்? மடியின்மை.
237.பலர் துஞ்சவும் தான் துஞ்சான் - சோழன் நலங்கிள்ளி (கோவூர்கிழார் கூற்று).
238.126 ஒற்றை வரிகள் கொண்ட உலகப் புகழ்பெற்ற துளிப்பாவினை எழுதியர்? ஹிராக்ளிடஸ்.
239.இரண்டு முறை ஒருவன் ஒரே நதியில் இறங்க முடியாது எனக் கூறியவர் ஹிராக்ளிடஸ்.
240.ஒவ்வொரு நாளும் சூரியன் புதிது எனக் கூறியவர் ஹிராக்ளிடஸ்.
241.இலக்கியத்தில் மேலாண்மை என்னும் நூலினை இயற்றியவர் வெ.இறையன்பு.
242.இ.ஆ.ப தேர்வில் தமிழினை விருப்பப் பாடமாக் கொண்டு வெற்றிபெற்றவர் வெ.இறையன்பு.
243.வெ.இறையன்பு அவர்கள் இயற்றிய நூல்கள் சில: வாய்க்கால் மீன்கள், ஏழாவது அறிவு, உள்ளொளிப் பயணம், மூளைக்குள் சுற்றுலா.
244.1995ம் ஆண்டில் தமிழ் வளர்ச்சித் துறையின் பரிசுபெற்ற வெ.இறையன்புவின் நூல்? வாய்க்கால் மீன்கள்.
245.தமிழ்நதி அவர்களின் இயற்பெயர் கலைவாணி.
246.தமிழ்நதி அவர்கள் இலங்கையிலுள்ள திருகோணமலையில் பிறந்தவர். (கனடாவில் வசிக்கிறார்)
247.தமிழ்நதியின் சில நூல்கள்: கானல் வரி, ஈழம் - கைவிட்ட தேசம், பார்த்தீனியம்.
248.தமிழ்நதி அவர்களின் குறுநாவல் கானல்வரி.
249.புலம்பெயர்ந்த தமிழர்களின் இருப்புகளையும் வலிகளையும் கவிதைகளில் எடுத்தாண்டவர் தமிழ்நதி.
250.அதிசய லர் என்ற கவிதை இடம்பெற்றுள்ள கவிதை தொகுப்பு எது? அதன் பிறகும் எஞ்சும்.
251.பாரத மக்களின் பரிதாபச் சிந்து என்ற தேயிலைத் தோட்டப் பாட்டு(கும்மி) இயற்றியவர் முகம்மது இராவுத்தர்.
252.மக்களின் இயல்புகளை பாடல்களில் கூறுபவை கதைப்பாடல்கள்.
253.கதைப்பாடல்களின் வேறுபெயர்கள்: வெகுசன இலக்கியம், முச்சந்தி இலக்கியம், குஜிலி நூல்கள், காலணா அரையணா பாட்டுப் புத்தகங்கள், பெரிய எழுத்துப் புத்தகங்கள், தெருப்பாடல்கள்.
254.செவ்வியல் இலக்கிய மரபு பாடாத, சொல்லாத அல்லது புறக்கணித்த கருப்பொருட்களை அடிப்படையாகக் கொண்டு தோன்றியவை கதைப்பாடல்கள் (19,20ம் நூற்றாண்டு).
255.புறநானூற்றில் உள்ள காய்நெல் அறுத்து எனத் தொடங்கும் 184வது பாடலைப் பாடியவர் பிசிராந்தையார்.
256.பிசிர் என்பது பாண்டிய நாட்டிலுள்ள ஓர் ஊர். ஆந்தையார் என்பது இயற்பெயர்.
257.பாண்டியன் அறிவுடை நம்பிக்கு வரிதிரட்டும் முறை பற்றிக்கூறி அறிவுரை வழங்கியவர்? பிசிராந்தையார்
258.பண்டைய மன்னர்களின் வீரம், கொடை, போர்திறன், கையறுநிலை, நடுகல் வழிபாடு பற்றி கூறிடும் நூல் புறநானூறு.
259.புறநானூற்றை முதன் முதலில் பதிப்பித்தவர் உ.வே.சா(1894).
260.புறநானூற்றை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த கலிபோர்னியா பல்கலைக்கழக தமிழ்ப் பேராசிரியர்? ஜார்ஜ்.எல் ஹார்ட்(1999).
261.அரசன் செய்ய வேண்டிய கடமைகளை முறைதவறாமல் செய்யுமாறு அவன் கேட்க அறிவுறுத்துவது செவியறிவுறூஉ துறை.
262.கரூரை அடுத்த புகளூரில் உள்ள குன்று? ஆறுநாட்டான் குன்று.
263.ஆறுநாட்டான் குன்றில் கண்டறியப்பட்ட கல்வெட்டில் சேர மன்னர்களின் வரலாறு வெளிப்பட்டது.
264.ஆறுநாட்டான் குன்றில் கண்டறியப்பட்ட கல்வெட்டில் காணப்பெற்ற சேர மன்னர்களின் பெயர்கள்? பெருங்கடுங்கோன், இளங்கடுங்கோன், இளங்கோ.
265.பற்றுப்பத்தில் காணப்படும் சேர மன்னர்களின் பெயர்கள் புகளூர் கல்வெட்டில் காணப்படுகிறது.
266.யாற்றூர் என்ற கிராமத்தில் வசித்த சமணத்துறவி செங்காயபன்.
267.கல்வெட்டுகளின் தந்தை ஐராவதம் மகாதேவன்.



Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com

268.ஐராவதம் மகாதேவன் நடத்திய இதழின் பெயர் கல்வெட்டு.
269.ஐராவதம் மகாதேவன் அவர்கள் பெற்ற விருதுகள்: ஜவகர்லால் நேரு ஆய்வறிஞர் விருது, இந்திய வரலாற்று ஆராய்ச்சி மைய விருது, தாமரைத்திரு விருது.
270.ஐராவதம் மகாதேவனின் கண்டுபிடிப்பினை வெகுவாக பாராட்டியவர் கே.வி.சுப்பிரமணியன்.
271.நமது அடையாளஙகளை மீட்டவர் மயிலை.சீனி.வேங்கடசாமி.
272.ச.த.சற்குணரின் உரையினைக் கேட்டு மயிலை.சீனி.வேங்கடசாமி அவர்களால் படைக்கப்பட்ட நூல்? கிறித்தவமும் தமிழும்.
273.மயிலை.சீனி.வேங்கடசாமியின் அரிய ஆவணப் பணியாக கருதப்பட்ட நூல்? மறைந்துபோன தமிழ் நூல்கள்.
274.மயிலை.சீனி.வேங்கடசாமியின், தமிழக அரசின் முதற்பரிசினைப் பெற்ற நூல் எது? தமிழர் வளர்த்த அழகுக் கலைகள்.
275.மயிலை.சீனி.வேங்கடசாமியால் சமயக் காழ்ப்புணர்ச்சியின்றி வெளியிடப்பட்ட நூல்? சமணமும் தமிழும்.
276.மயிலை.சீனி.வேங்கடசாமியின் சொல்லாய்வுக் கட்டுரைகள் அஞ்சிறைத் தும்பி என்ற பெயரில் வெளிவந்தன.
277.மயிலை.சீனி.வேங்கடசாமி தமிழ்த்தேனீ என்ற அடைமொழியால் அழைக்கப்பட்டார்.
278.மயிலை.சீனி.வேங்கடசாமி இளைஞராயினும், ஆராய்ச்சித் துறையில் முதியவர் என புகழ்ந்தவர் விபுலானந்த அடிகள்.
279.மகேந்திரவர்மன் எழுதிய நூல் மத்தவிலாசம்.
280.பசும்பூண் பாண்டியன் என்ற சங்ககால மன்னனின் கொடியில் காணப்படும் சின்னம் யானை எனக் கண்டறிந்து கூறியவர் மயிலை.சீனி.வேங்கடசாமி(அகநானூறு)
281.முகம் என்ற கவிதையின் ஆசிரியர் சுகந்தி சுப்ரமணியன்.
282.தமிழின் நவீன பெண் கவிஞர்களில் குறிப்பிடத்தக்கவர் சுகந்தி சுப்ரமணியன்.
283.சுகந்தி சுப்ரமணியனின் சில நூல்கள்: புதையுண்ட வாழ்க்கை, மீண்டெழுதலின் ரகசியம்.
284.திருநெல்வேலியில் இருந்து வெளிவந்த நற்போதகம் எனும் ஆன்மீக மாத இதழில் இரட்சணிய யாத்திரிகம் 13 ஆண்டுகள் தொடராக வெளிவந்தது.
285.இரட்சணிய யாத்திரிகம் 1894ம் ஆண்டு மே மாதம் முதல் பதிப்பு வெளியிடப்பட்டது.
286.ஜான் பன்யன் அவர்களால் ஆங்கிலத்தில் எழுதப்பட்ட நூல் பில்கிரிம்ஸ் புரோகிரஸ்.
287.பில்கிரிம்ஸ் புரோகிரஸ் என்ற நூலைத் தழுவி, எச்.ஏ.கிருட்டிணனார் அவர்களால் படைக்கப்பட்ட நூல் இரட்சணிய யாத்திரிகம்.
288.கிறித்துவக் கம்பர் என அழைக்கப்பட்டவர் எச்.ஏ.கிருட்டிணனார்
289.இரட்சணிய யாத்திரிகம் 3766 பாடல்களைக் கொண்ட உருவகக் காப்பியம் ஆகும்.
290.இரட்சணிய யாத்திரிகத்தில் உள்ள பருவங்கள் யாவை? ஆதி பருவம், குமாரப் பருவம், நிதானப் பருவம், ஆரணிய பருவம், இரட்சணிய பருவம்.
291.எச்.ஏ.கிருட்டிணனார் இயற்றிய வேறு நூல்கள்: போற்றித் திருவகவல், இரட்சணிய மனோகரம்.
292.ஏசு பெருமானுக்கு தண்டனை வழங்கிய ஆளுநர் போந்தியு பிலாத்து.
293.அறிமடமும் சான்றோர்க்கு அணி என குறிப்பிடும் நூல் பழமொழி நானூறு.
294.புறநானூறு குறிப்பிடும் முதிர மலை மன்னன் குமணன்.
295.குமணனிடம் பரிசில் பெறவந்தவர் பெருந்தலைச் சாத்தனார்.
296.தமிழுக்குத் தலை கொடுத்த குமண வள்ளல் என புறநானூறு குறிப்பிடுகிறது. (158,164, 165)
297.சிறுபாணாற்றுப்படை என்னும் பத்துப்பாட்டு நூலை இயற்றியவர் யார்? நல்லூர் நத்தத்தனார்.
298.சிறுபாணாற்றுப்படையின் பாட்டுடைத் தலைவன் நல்லியக்கோடன்(269 அடிகள்).
299.பரிசில் பெற்ற சிறிய யாழினைக் கொண்ட பாணன் ஒருவன், மற்றொரு பாணனை ஆற்றுப்படுத்துவதாக அமைந்த நூல் சிறுபாணாற்றுப்படை.
300.நல்லியக்கோடனின் நிலப்பகுதி கிடங்கல்(திண்டிவனம்).
301.கோடைமழை என்னும் சிறுகதையின் ஆசிரியர் சாந்தா தத்.
302.கோடைமழை என்னும் சிறுகதை அமுதசுரபியல் வெளிவந்துள்ளது.
303.கோடைமழை என்னும் சிறுகதை இலக்கியச் சிந்தனை என்ற அமைப்பின் விருதினைப் பெற்றுள்ளது.
304.ஹைதராபாத்தில் வெளியாகும் நிறை என்ற மாத இதழின் ஆசிரியர் சாந்தா தத்.
305.திசை எட்டும் என்ற மொழிபெயர்ப்பு இதழின் ஆசிரியர் குழுவில் உள்ளவர்? சாந்தா தத்.



Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com

## படிப்போம் பயன்படுத்துவோம்

| | | | |
|---|---|---|---|
| Subscription | உறுப்பினர் கட்டணம் | Affidavit | ஆணை உறுதி ஆவணம் |
| Biography | வாழ்க்கை வரலாறு | Allegation | சாட்டுரை |
| Manuscripts | கையெழுத்துப் பிரதி | Conviction | தண்டனை |
| Fiction | புனைவு | Jurisdiction | அதிகார எல்லை |
| Archive | ஆவணம் | Plaintiff | வாதி |
| Bibliography | நூல் நிரல் | Artist | கவின்கலை |
| Platform | நடைமேடை | Animation | இயங்குபடம் |
| Train Track | இருப்புப் பாதை | Newsreel | செய்திப்படம் |
| Railway Signal | தொடர்வண்டி வழிக்குறி | Cinematography | ஒளிப்பதிவு |
| Ticket Inspector | பயணச்சீட்டு ஆய்வாளர் | Sound Effect | ஒலி விளைவு |
| Level Crossing | இருப்புப்பாதை கடக்குமிடம் | Multiple Complex | ஒருங்கிணைந்த திரையரங்கம் |
| Merto Train | மாநகரத் தொடர்வண்டி | Debit Card | பற்று அட்டை |
| Lobby | ஓய்வறை | Demand Draft | கேட்பு வரைவோலை |
| Checkout | வெளியேறுதல் | Withdrawal Slip | திரும்பப் பெறல் படிவம் |
| Tips | சிற்றீகை | Teller | வரைவு காசாளர் |
| Mini Meals | சிற்றுணவு | Mobile Banking | அலைபேசி வழி வங்கி முறை |
| Arrival | வருகை | Internet Banking | இணைய வங்கி முறை |
| Departure | புறப்பாடு | Stamp Pad | மை பொதி |
| Conveyor Belt | ஊர்திப்படை | Stapler | கம்பி தைப்புக் கருவி |
| Domestic Flight | உள்நாட்டு வானூர்தி | Folder | மடிப்புத்தாள் |
| Passport | கடவுச்சீட்டு | File | கோப்பு |
| Visa | நுழைவு இசைவு | Rubber Stamp | இழுவை முத்திரை |
| Tack off | வானூர்தி கிளம்புதல் | Eraser | அழிப்பான் |

| பலவுள் தெரிக | | | | | |
|---|---|---|---|---|---|
| இயல் 1 | இயல் 2 | இயல் 3 | திருக்குறள் | இயல் 4 | இயல் 5 |
| 1. இ | 1. (3421) | 1. ஆ | 1. இ | 1. இ | 1. ஈ |
| 2. ஈ | 2. இ | 2. இ | 2. ஆ | 2. ஆ | 2. ஈ |
| 3. இ | 3. ஆ | 3. ஈ | 3. இ | 3. ஈ | 3. இ |
| 4. இ | 4. ஈ | 4. இ | 7. அ | 4. இ | 4. இ |
| 5. ஈ | 5. அ | 5. ஈ | 10. ஆ | 5. ஆ | 5. இ |
| இயல் 6 | திருக்குறள் | | இயல் 7 | இயல் 8 | |
| 1. ஈ | 1. ஆ | 6. இ | 1. ஆ | 1. இ | |
| 2. ஈ | 2. ஆ | 7. ஈ | 2. அ | 2. அ | |
| 3. அ | 3. இ | 8. அ | 3. இ | 3. ஈ | |
| 4. ஈ | 4. ஈ | 9. ஆ | 4. இ | 4. இ | |
| | 5. ஆ | | 5. ஆ | 5. ஆ | |

**1. வினை விதைத்தவன் வினை அறுப்பான்: வாழ்வியல் சிந்தனைக் கதையை எழுதுக.**

- **வாழ்வியல் நிகழ்வு:** என் வகுப்புத் தலைவன் செல்லன். யாருமில்லா நேரத்தில், பிறர் பையில் உள்ள பொருட்களை எடுத்துக்கொண்டு, மற்றவர் மீது பழியைப் போட்டுவிட்டு, பொய் கூறி தப்பிப்பதில் வல்லன். ஆசிரியரும் அவன் சொல்வது உண்மையெனக் கருதி தண்டனையும் தருவார். ஓர் நாள், மலர்விழியின் பள்ளிக்கட்டணம் 2000 ரூபாய் காணாமல் போனது. பெரியதொகை என்பதாலும், தொடர்ந்து திருட்டு நடப்பதாலும் ஆசிரியர் விசாரணையில் இறங்கினார். பணம் காணாமல் போன நேரத்தில் செல்லன் மட்டுமே இருந்தான் என்பது தெரியவர, ஆசிரியரின் முழு பார்வையும் அவன்மீது திரும்பியது. ஆசிரியரின் கிடுக்குப்பிடி விசாரணையில் செல்லன் சிக்கினான். கடைசியில் தப்பிக்க வேறு வழியில்லாமல் செல்லன் தவறை ஒப்புக்கொண்டான். அவனுக்கு மாற்றுச்சான்றிதழ் அளிக்கப்பட்டது. ஆசிரியரும் தன் தவறுக்கு மன்னிப்பு கோரினார். வினை விதைத்தவன் வினை அறுத்தான்.
- **உணர்த்தும் உண்மை:** காலங்கள் கடந்தாலும் உண்மை என்றும் தோற்பது இல்லை.



Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com